மேலபாடி

ஆசிரியர் :

பூ. கல்பனா

பதிப்பாசிரியர் :

முனைவர் தி.ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

வெளியீடு :

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை-600 008 .
2009

BIBLIOGRAPHICAL DATA

Tilte	:	**Melpadi**
Author	:	P. Kalpana
Copyright	:	Tamil Nadu State Department of Archaeology
Subject	:	History
Language	:	Tamil
Publication No.	:	204
Year	:	2009/Thiruvalluvar Aandu-2040
Type Point	:	11 pt.
No. of Pages	:	116
Paper used	:	80Gsm Maplitho
Price	:	Rs. 101/-
Type Setter	:	Gankarani Kaniniyagam Royapettah, Chennai-14. Cell : 98840 57267
Printer	:	Chennai Printers Industrial co-op society Ltd. No. 6, Pycrofts Road, Triplicane, Chennai-600 005.
Publisher	:	Tamil Nadu State Department of Archaeology Tamil Valarchi Valagam, Halls Road, Egmore, Chennai - 600 008.

பொருளடக்கம்

	i. பதிப்புரை	...	iv
1.	முன்னுரை	...	1
2.	அரசியல்	...	5
3.	அரசியல் பூகோளம்	...	30
4.	நிருவாகம்	...	38
5.	பொருளியல் வாழ்க்கை	...	55
6.	சமயமும் சமுதாய வாழ்க்கையும்	...	71
7.	கோயில் கட்டடக் கலை	...	81
8.	விழாக்களும், வழிபாடுகளும்	...	98
9.	முடிவுரை	...	104
	நிழற்படங்கள்	...	107

பதிப்புரை

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை தமிழ்நாட்டின் பண்பாட்டினை வெளிக்கொணரும் பணியினை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாகக் கல்வெட்டுகளை படிஎடுத்தல், படித்தல் நூலாக அவற்றை வெளியிடுதல், அகழாய்வுகள் மேற்கொள்ளுதல் அவற்றை நூலாக வெளியிடுதல் மற்றும் வரலாற்றுச் சின்னங்களைப் பாதுகாத்தல் போன்ற பணிகள் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இத்துறையின் கீழ் இயங்கும் கல்வெட்டுப் பயிற்சி நிறுவனம் முதுகலைப்பட்டம் பெற்ற மாணவர்களுக்குக் கல்வெட்டியல் (ம) தொல்லியல் ஓராண்டு முதுநிலைப் பட்டயம் அளித்து வருகிறது. ஒவ்வொரு மாணவரும் ஒரு கோயிலை ஆய்வு செய்து கல்வெட்டு, கட்டட மற்றும் கலை, வரலாறு பற்றிய ஆய்வேடு சமர்ப்பிக்கின்றனர். அவ்வாய்வேடுகள் துறையால் நூலாக வெளியிடப்பட்டு வருகின்றது. இதுவரை 190 ஆய்வேடுகள் எழுதப்பட்டது. அதில் ஆய்வேடுகள் 14 பிரசுரிக்கப்பட்டுள்ளன.

வேலூர் மாவட்டத்தில் அமைந்துள்ள மேல்பாடி அரிஞ்சிகை ஈஸ்வரம் பற்றிய ஆய்வேடு கல்வெட்டுப் பயிற்சி நிறுவனத்தில் 2000–2001ஆம் ஆண்டு பயின்ற மாணவி செல்வி பூ. கல்பனா என்பவரால் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்நூலில் அக்கோயிலில் உள்ள கல்வெட்டு, கலைச்சான்றுகளைக் கொண்டு அந்நாளைய அரசியல், நிர்வாகம் மற்றும் சமூகம் பற்றிய வரலாற்றுச் செய்திகள் விரிவாக ஆய்வு செய்யப்பட்டுள்ளன. மேலும் பள்ளிப்படை, இலகுலீச பாசுபதம் என்னும் தீவிர சைவத்தின் தோற்றம், அது தமிழ்நாட்டில் பரவிய தன்மை ஆகியவற்றைச் சான்றுகளுடன் ஆய்வு செய்துள்ளார். சோழர்கால நீர் நிர்வாகம் குறித்த ஆய்வும் குறிப்பிடத்தக்கது.

இந்நூலின் பதிப்புப் பணியினை மேற்கொண்ட சிறப்பு நிலைக் கல்வெட்டாய்வாளர், திரு. கி.சு. சம்பத், புதிய செய்திகளை அளித்துதவிய மேனாள் உதவி இயக்குநர் முனைவர் அர. பூங்குன்றன், இந்நூல் வெளியீடு தொடர்பான பணிகளைச் செய்தளித்த சிறப்புநிலைக் கல்வெட்டாய்வாளர் திருமதி அர. வசந்த கல்யாணி, கல்வெட்டாய்வாளர் திரு. இரா. சிவானந்தம், முதுநிலை முதலாள் திரு. மா. ஆ. சங்கர், நிழற்படங்கள் மற்றும் அட்டை வடிவமைப்பு செய்தளித்த நிழற்படம் எடுப்பவர் திரு. மு.த. ஸ்ரீதரன் மற்றும் திருமதி தே. சத்தியவதி, அச்சுக் கோப்பாளர் ஆகியோருக்கு எனது பாராட்டுதல்கள்.

இந்நூல் வெளிவர நிதி உதவி அளித்திட்ட தமிழ்நாடு அரசிற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமய வரையறையும், கோயில் கலை வரையறையும் ஆராயும் ஆய்வறிஞர்கள், பள்ளி, கல்லூரி மாணவர்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என விரும்புகிறேன்.

தி.ஸ்ரீ. ஸ்ரீதர்
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்,
தொல்லியல் துறை.

17.12.2008
சென்னை–600 008.

முன்னுரை

தொண்டை மண்டலம்

தமிழ்நாட்டின் வட பகுதியில் தொண்டை மண்டலம் அமைந்துள்ளது. இங்கு வாழ்ந்த குடிகள் தொண்டையர் என்று அழைக்கப்பெற்றனர். இப்பகுதி தமிழ்நாட்டிலேயே தொல்பழங்கால வரலாறு கொண்டது. ஓர் இலட்சம் ஆண்டுகளுக்கு முன் மனிதன் வாழ்ந்த குடியம் குகை இங்குள்ளது.[1] ஓர் இலட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழைய கற்காலக் கருவிகள் இப்பகுதியில்தான் கிடைக்கின்றன.[2] தொல்பழங்கால ஓவியங்கள் (சந்திரபுரம், சென்றாயன் பள்ளி) இப்பகுதியில் கண்டுபிடிக்கப்பெற்றன.[3] அண்மையில் ஈரான் நாட்டில் உற்பத்தி செய்யப்பெற்ற ஆண்டனே என்ற வெண்கல வாள்கள் குடியாத்தம் அருகில் உள்ள அப்புகல்லில் கண்டுபிடிக்கப்பெற்றன.[4] இவை 4000 ஆண்டுகளுக்கு முன் செய்யப் பெற்றவை. மாடு பிடி சண்டையில் மாண்ட வீரர்களுக்கு நடுகல் நட்ட மரபு மிகுதியாக இருந்தது இந்தப் பகுதியிலாகும். காலத்தால் முற்பட்ட லிங்கம் (குடிமல்லம்) உள்ளதும் இந்தப் பகுதியிலாகும்.

தொண்டை மண்டலத்தில் தொண்டை மான்கள், நன்னன் சேய் நன்னன், நல்லியக் கோடன் (ஓவியர்குடி) ஆகிய குடித் தலைவர்கள் ஆட்சி செய்தனர். இருண்ட காலத்தில் களப்பிரர்கள் ஆண்டனர். களப்பிரர் வீழ்ச்சிக்குப் பின் பல்லவர்கள் தொண்டை மண்டலத்தில் ஆட்சி செய்தனர்.

இவர்கள் காலத்தில் தொண்டை மண்டலம் பல்வேறு துறைகளிலும் குறிப்பாக அரசியல், சமயம், கல்வி, தத்துவஞானம் ஆகிய துறைகளில் பெரு வளர்ச்சி பெற்றது. தொண்டை மண்டலம் கோட்டங்களாவும் நாடுகளாகவும் பிரிக்கப்பெற்றது.

தொண்டை மண்டலத்தில் சங்க காலம் முதல் தலைமைப் பீடமாக விளங்கியது இன்றைய காஞ்சிபுரம். அவ்வூர் வரலாற்றுக் காலம் முதல் இன்று வரை நிலை பெற்ற நகரமாகத் திகழ்கின்றது. இவ்வூரில் கடிகா என்ற சமஸ்கிருத கல்லூரிகள் இருந்தன.[5] வடக்கே நாலந்தா பல்கலைக்கழகத்திற்குச் சமமாகச் கூறும் அளவிற்குப் பெருமை பெற்றிருந்தது. இவ்வூருக்கு கி.மு. 2-ஆம் நூற்றண்டு முதல் சீனர்கள் வந்து சென்றனர்.[6]

கி.பி 7-ஆம் நூற்றாண்டில் வந்த சீனயாத்திரிகன் யுவான் சுவாங் இங்குச் சிறப்புற்ற பௌத்தம், சமணம் ஆகிய சமயங்களைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுள்ளார்.[7]

தொண்டை மண்டலத்தில் சமணம், பௌத்தம், வைணவம், சைவம் ஆகிய சமயங்கள் பரவின. சமணர்கள், மாமண்டூர், செஞ்சி பனப்பாக்கம், அகளூர் (தொண்டூர்) திருநாதர் குன்று, திருமலை, சேதாரம்பட்டு ஆகிய மலைகளில் தங்கித் தவமியற்றினர் என்பதற்கான சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றில் அகளூரில் கி.மு. 2-ஆம் நூற்றாண்டு தமிழிக் கல்வெட்டு உள்ளது.[8] பௌத்தம் கி.மு. மூன்றாம் நூற்றாண்டில் வந்தது என்று கருதப்பெறுகின்றது. திக்நாகர், அசங்கர், வசுபந்து, தர்மகீர்த்தி தர்மபாலர் முதலிய பௌத்த தத்துவஞானிகள் தொண்டை மண்டலத்தைச் சேர்ந்தவர்கள்.

இப்பகுதியில் சைவம், வைணவம் தழைத்திருந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் கிடைக்கின்றன. தேவாரப்பாடல் பெற்ற தலங்களும், தொண்டை மண்டலத்தில் உள்ளன. பல்லவர்கள் சைவ சமயத்தையும் வைணவ சமயத்தையும் சமமாக ஆதரித்தனர். ஆழ்வார்களில் சிலரும், சைவ சமயக் குரவர்களில் சிலரும் இப்பகுதியில் தோன்றினர். அறுவகைச் சமயங்களும் இப்பகுதியில் தழைத்தன.[9]

ஊர் சொல்லும் வரலாறு

நம் நாட்டில் உள்ள சிறு சிறு பகுதியையும் ஆய்வு செய்ய வேண்டும், ஒவ்வொரு ஊரைப் பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும் என்று ஓர் அறிஞர் கூறினார்.[10] அண்மைக் காலங்களில் ஆய்வாளர்கள் வட்டார ஆய்வுகளில் அதிக ஆர்வம் செலுத்தி வருவதைக் காண முடியும். ஊர் பற்றிய ஆய்வுகளும் பெருகிவருகின்றன. தல வரலாறு, ஊர் பெயர் ஆய்வு போன்றவை தொண்டை நாட்டிற்கு புதுமையன்று, சதகத்தில் கூறப்படுகின்ற ஊர்கள் அனைத்தையும் பற்றி ஒரே அச்சில் வார்தெடுத்தது போன்ற செய்திகள் இருப்பினும் தொண்டை நாட்டுத் தல வரலாறு பற்றிய முதல் முயற்சியாக அந்நூல் திகழ்கின்றது எனலாம். சதகத்தைப் பின்பற்றி பல தல புராணங்கள் தோன்றியுள்ளன. தொண்டை மண்டல சதங்கள் சில ஊர்களின் வரலாற்றினைச் சுருக்கமாகச் சுட்டுகின்றனர்.

தொண்டை நாட்டுத் திருக்கோயில்களைப் பற்றி பல நூல்கள் எழுதப் பெற்றுள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்கவை மயிலை, சீனி வேங்கட சாமி, சி. கிருஷ்ணமூர்த்தி, கே.வி. இராமன், ஏகாம்பரநாதன், சு. இராசவேலு, பாஸ்கர தொண்டைமான் ஆகியோர் எழுதிய நூல்கள் ஆகியவை. டி.வி. மகாலிங்கம் அவர்கள் ''முற்காலத் தென்னிந்திய வரலாற்றில் காஞ்சிபுரம்'' என்ற நூலை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். சென்னைப் பல்கலைகழக ஆய்வேடுகள் பல தொண்டை நாட்டு ஊர்களைப் பற்றி அமைந்துள்ளன. ஓர் ஊரில் உள்ள மக்களின் உயிர்த்துடிப்புள்ள இடமாகக் கோயில் விளங்கியது. அவ்வூர் மக்களின் அரசியல் சமூகம், பொருளாதாரம் ஆகிய துறைகளைச் சேர்ந்த பல்வேறு இயக்கங்களின் பங்கு கொண்ட சமூக நிறுவனமாக அது விளங்கியது. கோயில் ஆய்வு என்பது பண்டைய சமுதாய வாழ்க்கையின் அனைத்து அம்சங்களையும் பற்றிய ஆய்வாகும். டி.வி.

மகாலிங்கம் அவர்கள் சோழர்காலத்துக் கோயில் சமுதாயத்தின் மையமாக விளங்கியிருந்த தன்மையை எடுத்துக்காட்டியுள்ளார். ''கோயில் தானே நில உடைமையாளனாகவும் முதலாளியாகவும் (பலருக்கு வேலை கொடுத்ததால்) இருந்தது. கோயிற் பண்டாரம் (களஞ்சியம்) வங்கி போல அமைந்தது. வைப்புப் பணங்களைப் பெற்றும், கடனுதவி அளித்தும் மக்களுக்கு உதவியது. கிராமக் கைத் தொழில்களின் பெருக்கத்திற்கும் உதவியது. அரசாங்கதிற்குச் செலுத்தப்பட வேண்டிய வரிகள் கோயில்களால் அளவிடப்பட்டன. தனிப்பட்டவர்கள் தமது நிலங்களுக்கு செலுத்த வேண்டிய வரிகளும் (மன்னரால்) கோயிலுக்கு கொடுக்கப்பட்டன. இவற்றைவிடக் கோயில்களும் மக்களிட மிருந்து வழக்கமாக கடமைப் பணத்தையும் பெற்றன. ஊரிலேயுள்ள பெரிய நிலவுடமை நிறுவனம் என்ற முறையில் கோயில் ஊரின் வேளாண்மையில் ஊக்கம் காட்டியது. வயல்களில் பயிர் செய்விப்பதோடமையாது புதிய நிலங்களையும் உழவுக்குட்படுத்தியது. பாழ்பட்ட நிலங்களுக்கு புனர்வாழ்வு அளித்தது. கோயிற் பண்டாரமானது வங்கிபோலக் கடமையாற்றியபடியால் தனிப்பட்ட நிறுவனங்களுக்கும் ஊராட்சி மன்றங்களுக்கும் வட்டியுடனும் வட்டியின்றியும் உதவியது. வேளாளர்கள் தொழில் தேவைகளுக்காக கடன் பெற்றனர். தமது பெண்களுக்குச் சீதனம் கொடுப்பதற்குக் கூடச் சிலர் கோயில்களிலிருந்து கடன் பெற்றனர்.[11]

திரு. மகாலிங்கம் அவர்களின் கூற்று பெரும்பாண்மை தமிழகக் கோயில்களுக்கும் பொருந்தும்.

(மேல்பாடிக் கோயில்கள் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றன. மேல்பாடி கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து வரலாற்றுச் சிறப்பு மிக்க ஊராகத் திகழ்ந்தது. இவ்வூர் பெரும்பாணப்பாடியைச் சேர்ந்தது. சோழர் காலத்தில் இவ்வூர் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஊராகத் திகழ்ந்தது.)

மூன்றாம் கிருஷ்ணன் இவ்வூரில் பாடி அமைத்துத் தங்கியிருந்தான். முதல் பராந்தகனின் விருதுப் பெயரான வீரநாரயணன் என்ற பெயரில் வீரநாராயணபுரம் என்று அழைக்கப்பெற்றது. முதலாம் இராஜராஜன் இவ்வூரில் அரிஞ்சிகை ஈஸ்வரம் என்ற கோயிலைக் கட்டினான். சோளேந்திரசிம்மேஸ்வரம் கோயிலும் அவனால் கட்டப் பெற்றுள்ளது. முதலாம் இராசேந்திரன் இவ்வூரில் உள்ள இரண்டு கோயில்களில் சோளேந்திரசிம்மேஸ்வரத்திற்கு இருமுறை நன்கொடை அளித்துள்ளான். சீயகங்கன், பொத்தப்பி சோழன், வீரகம்பண்ணன், கிருஷ்ணதேவராயன் அமைச்சர் அல்லசாணி பெத்தண்ணாவின் சகோதரர் ஆகியோர் நேரடியாக ஈடுபாடுகாட்டிக் கொடை அளித்தனர்.

இவ்வாய்வேடு அரசியல் பின்னணி, அரசியல் புவியியல், நிருவாகம், சமயமும் சமூகமும், பொருளியல் வாழ்க்கை, கோயில் கட்டடக்கலை, வழிபாடும் விழாக்களும் ஆகிய இயல்களுடன் அமைந்துள்ளது. எல்லா இயல்களிலும் சோழர்காலம் தொடங்கி விஜயநகரர் காலம் வரையில் நிகழ்ந்த நிகழ்வுகள் கால வரிசையில் கூறப்பெற்றுள்ளன.

அடிக்குறிப்புகள்

1. இரா. நாகசாமி, (ப.ஆ.) செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு பக். 165-166.
2. மேலது. ப. 169
3. தினமணி, 06.05.1982. The Hindu, 13.03.1984.
4. ஆவணம் இதழ், 12. ப. 160
5. 1982- ஆம் ஆண்டு காலந்தோறும் நிலைபெற்ற நகரமாக காஞ்சிபுரத்தை யுனெஸ்கோ அறிவித்தது.
6. கே.ஏ. நீலகண்ட சாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றி வெளிநாட்டார் குறிப்புகள், ப. 73
7. மேலது. ப. 167
8. தினமணி, 14.10.1991
9. இரா. நாகசாமி, மற்றும் மூவர், கல்வெட்டியல், ப. 63
10. மணிமேகலை, 28ஆம் காதை.
11. Y. Subhurayalu, Poiltical Geography of the Cola country, Preface.
12. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 15 Quoted from South Indian Polity, (PP. 173-80) by T.V. Mahalingam.

அரசியல்

மேல்பாடி கல்வெட்டுகளில் பயின்று வரும் அரசியல் சோழர் காலம் முதல் விசயநகரக் காலம்வரை என்று சொல்லும் வகையில் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. இருப்பினும் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் பெரும்பாணர் அரசியல் தொடங்கிவிட்டது. இப்பகுதி தொண்டை நாட்டுக்கு அருகில் அமைந்திருந்தமையால், பெரும்பாணர் ஆண்ட பகுதி பல்லவர் ஆளுகைக்கு கீழ் வந்தது. சோழர் கால தமிழ் கல்வெட்டுகளில் இப்பகுதி பெரும்பாணப்பாடி என்று குறிக்கப்பெறுகின்றது. ஆனால் சாளுக்கியர், தெலுங்குச் சோழர், கங்கர், கதம்பர் ஆகியோர் கல்வெட்டுகளிலும், செப்பேடுகளிலும் வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பெற்றது. பாணர்நாடு கோலார், அனந்தபூர், சித்தூர் ஆகிய மாவட்டங்ளையும், வேலூர் மாவட்டத்தில் குடியாத்தம், வாணியம்பாடி, அரக்கோணம் ஆகிய வட்டங்களையும் உள்ளடக்கி நின்றது. தொண்டை நாட்டில் உட்பிரிவுகளான கோட்டங்களுள் ஒன்றாகவும், படுவூர் கோட்டத்தின் ஒரு பகுதியாகவும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றது. பெரும்பாணர் அரசியல் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் கல்வெட்டுகளில் தெளிவாக குறிக்கப்பெறுகின்றது.

பெரும்பாணர்கள்

மேல்பாடி பெரும்பாணப்பாடியின் தென்னெல்லையில் அமைந்திருந்த ஊர். பெரும்பாணப்படி சோழர்கள் வைத்த பெயர். அதற்கு முன்பு இந்தப் பெயர் இருந்திருக்க வாய்ப்பு குறைவு. சோழர்கள் வருகைக்கு முன் பெரும்பாணப்பாடி என்ற பகுதி பெரும்பாணர்கள் என்ற மரபினருக்குரியதாக இருந்தது. அதனால் பெரும்பாணப்பாடி என்ற பெயர். பெரும்பாணர்கள் ஆந்திர மாநிலம் அனந்தபூர் பகுதியில் தங்கள் ஆட்சியைத் தொடங்கினார்கள். இவர்கள் ஆட்சி கி.பி. 4-ஆம் நூற்றாண்டிலிருந்து தொடர்ந்தது,[1] இவர்களில் ஒரு பிரிவினர் செங்கம் பகுதியில் கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் நடுகல் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர்.[2] நடுகல் கல்வெட்டுகளில் இவர்கள் பெரும்பாண மூத்தரைசர், பெரும்பாண இளவரைசர் என்று இரு பிரிவினராகக் குறிக்கப்பெறுகின்றனர்.[3] பெரும்பாணர்கள் பல்லவர்களின் கீழ் சிற்றரசர்களாக விளங்கினர். அவர்கள் ஆட்சி நந்திகிரிவரை பரவியிருந்தது. கிழக்கில் திருப்பதியை உள்ளடக்கிய எல்லை வரை பரவியிருந்தது.

பெருபாணர்கள் வடமொழியில் பிருகத்பாண என்று அழைக்கப்பெற்றனர்.[4] இவர்கள் மாபலி சக்ரவர்த்தி மரபினைச் சேர்ந்தவர்கள் என்று குறிக்கப் பெறுகின்றனர். பெரும்பாணர்கள் பேரரசு உருவாகி வலிமை பெறும்போது அவர்களுக்கு அடங்கியும், பேரரசு வலி குன்றும் போது சுயாட்சி பெற்றவர்களாயும் ஆட்சி புரிந்தனர்.

பெரும்பாணர்களைப் பற்றி கடம்ப மன்னன் காகுஸ்தவர்மனின் (கி.பி. 430-450) தாளகுண்டா கல்வெட்டு தான் முதன் முதலில் குறிப்பிடுகின்றது.[5] அந்த மரபினைச் சேர்ந்த மயூரசர்மன் (கி.பி. 340-370) பல்லவர் ஆட்சியின் எல்லைப்புறத்திலிருந்து நந்தீகிரியில் ஆட்சி செய்த பெரும்பாண அரசர்களைத் தோற்கடித்து அந்தப் பகுதியில் வரிவசூல் செய்து வந்தான் என்று அக்கல்வெட்டு கூறுகின்றது. பெரும்பாணர் பகுதி (இனிமேல் பெரும்பாணப்பாடி என்று கூறப்பெறும்) கதம்பர் ஆட்சிக்குட்பட்டிருந்தமையால் பல்லவர்கள் கங்கர்களை கதம்பர்களுக்கு எதிராக ஆதரித்தனர்.[6] இந்த அரசியல் போக்குகள் சிறிது காலமே நீடித்தது. கொங்கணி வருமனின் தொட்ட பெல்லபூர் கல்வெட்டு ஒன்று (கி.பி. 459) அவன் பாணர் என்னும் காட்டிற்கு அழிவு செய்யும் தீயாக விளங்கினான் என்று கூறுகின்றது.[7] அதனால் பெரும்பாணர்கள் கங்கர்களுக்கெதிராக இருந்தார்கள் என்பது புலப்படுகின்றது.

சமண முனிவர் சிம்மசூரி என்பவரால் எழுதப்பெற்ற உலோக விபாகம் என்னும் சமஸ்கிருத நூல் பிராகிருதத்திலிருந்து பெயர்த்து எழுதப்பெற்றது. இந்நூல் சக ஆண்டு 380- ல் (கி.பி.458) பெயர்த்து எழுதப்பெற்றது என்றும், அப்போது சிம்மவர்மன் ஆட்சிக்கு வந்து 22 ஆண்டுகள் ஆகின்றது என்றும் அந்நூலில் கூறப்பெற்றுள்ளது.[8] அந்நூல் பாணராட்டிரத்தில் பாடலிக கிராமத்தில் இருந்த சமணப் பள்ளியிலிருந்து எழுதப்பெற்றது என்று கூறப்பெறுகின்றது. இந்தப் பகுதியும் பெரும்பாணர் பகுதி என்று கருதப் பெறுகின்றது. பெரும்பாணர் பற்றிய வடமொழிக் கல்வெட்டுகள் பிருகத்பாணர் (Brhat Bana) என்று எழுதப்பெற்றுள்ளது. ஆனால், உலோக விபாகத்தில் பாணராட்டிரம் (Panarastra) என்று கூறப்பெறுகின்றது.[9] உலோகவிபாகத்தில் பாணராட்டிரம் என்று கூறும்போது வடமொழியில் முதல் பகரத்தையும் பெரும்பாண மண்டலம் என்று வடமொழி கல்வெட்டுகளில் குறிப்பிடும்போது மூன்றாவது பகரத்தையும் குறிப்பிடுவது எடுத்துக்காட்டத்தக்கவை. பெருபாணர்களுக்கும், பாணராட்டிரத்திற்கும் தொடர்பு இருப்பதற்கான வாய்ப்பு குறைவே. செங்கம் பகுதி நடுகற்கள் பெரும்பாணரைசர், வாணகோவரைசர் என இரண்டு குறுநில மன்னர் மரபுகளைக் குறிப்பிடுகின்றன.[10] அதனால் இவ்விரு பிரிவினரும் வெவ்வேறு மரபுகளைச் சேர்ந்தவர்கள் எனலாம்.

கி.பி. 5-ஆம் நூற்றாண்டிற்குப் பின் நூற்றைம்பதாண்டுகள் பாணர்களைப் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. சாளுக்கிய மன்னன் இரண்டாம் புலிகேசி கல்வெட்டு ஒன்று நாதனூரு என்ற ஊரைத் தானமாக அளிக்கப்பெற்றது பற்றி கூறுகின்றது. இவ்வூர் பாணராச்சியத்தில் இருந்தது என்றும் கூறுகின்றது.[11] இதனால் பெரும் பாணர்கள் நாடு

மேலைச் சாளுக்கியர்களின் ஆட்சிக் கீழ் இருந்தது என்பது உறுதிப்படுகின்றது. இரேணாடு சோழர்கள் சாளுக்கியர்களுக்கு ஆதரவாக இருந்து கொண்டு தங்களைப் பாதுகாத்துக் கொண்டார்கள் எனலாம்.[12] அதனால் இரேணாடு சோழர்களிடமிருந்து தங்களுக்கு தொல்லைகள் வரக்கூடும் என்று அஞ்சிய பாணர்கள் சாளுக்கியர்களின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். இரண்டாம் நந்திவர்மன் காலம் வரை பாணர்கள், சாளுக்கியர் ஆதிக்கத்திலிருந்திருக்க வேண்டும். இந்தக் காலகட்டத்தில் பெரும்பாணர்கள் பல்லவர் ஆட்சிக்குப்பட்ட தங்கள் பகுதியில் பல்லவர்களுக்குக் கீழடங்கிய சிற்றரசர்களாக விளங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் பாணர்களின் கிளையாக இருக்கலாம்.

இரண்டாம் நந்திவர்மன் காலத்தில் ஆட்சி செய்த ஜெய நந்திவர்மன் மன்னன் பாணர் மரபினைச் சேர்ந்தவன். பாணர் மரபிலேயே இவன் புகழ் பெற்றவனாக விளங்கினான். இவனுக்கு முன் நரசிம்ம பாணராஜன், விக்கிரமாதித்ய பலி, இந்திர பாணராஜன் ஆகியோர் ஆட்சி செய்தனர்.[13] இவர்களைத் தொடர்ந்து ஜயநந்தி வர்மன் ஆட்சிக்கு வந்தான் (கி.பி. 733-772). இவனுக்கு மாபலி வாணராயன் என்ற பெயரும் இருந்திருக்க வேண்டும். கங்கமன்னன் ஸ்ரீ புருஷனுக்கும், இரண்டாம் நந்திவர்மனுக்குப் பின் விஜயாதித்யன் (கி.பி. 772-824) என்பவன் ஆட்சிக்கு வந்தான்.[14] இவன் இராட்டிரகூட மன்னன். மூன்றாம் கோவிந்தனுக்கும், பல்லவமன்னன் தந்திவர்மனுக்கும் இடையில் நடைபெற்ற போரில்(கி.பி. 804) கலந்து கொண்டவன்.[15] இவன் ஆட்சி தொண்டை மண்டலத்தின் வடமேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. கங்கநாடு 6000 பகுதியையும் ஆண்டான். நந்திவர்மன் போரில் தோற்றபிறகு பாணர்கள் இராட்டிரகூட மன்னர்கள் பக்கம் சாய்ந்தார்கள். இம்மரபினரைச் சேர்ந்த மூன்றாம் கோவிந்தன் கி.பி. 806-ல் அளித்த நந்திகிரி செப்பேடுகளில் ஷத்திரிய மகாபலி பாணராஜன் ஆணத்தியாகக் குறிக்கப்பெறு கின்றான்.[16] மேலைகங்கர்,நுளம்பர், வைதும்பர், பாணர் ஆகியோருக்குமிடையில் நடைபெற்ற கூட்டணிகள், மறுகூட்டணிகள் ஆகியவை பற்றி விரிவாகக் கூறுவது கடினம். கி.பி.806-840 வரையிலான காலகட்டத்தில் பெரும்பாணர் நாடு மாடுபிடி பூசல், நாடு பரவும் போர் ஆகியவற்றால் அலைகழிக்கப்பெற்றது. பெரும்பாணப்பாடி பல்வேறு பேரரசுகளால் சூழப்பட்டிருந்தமையால் இத்தகைய பூசல்களும், போர்களும் அன்றாட வாழ்க்கையாகிவிட்டன. இந்த நிலையில் முதலாம்வித்யாதரன் மல்லதேவனின் மகன் இரண்டாம் வித்யாதரனின் தந்தை இரண்டாம் விஜயாதித்யன், முதலாம் விஜயாதித்யன் மகன் மல்லதேவன் (கி.பி. 824-843) அடுத்தபடியாக ஆட்சிக்கு வந்தான். இவன் ரேணாட்டினை வென்று தன் கீழ் கொண்டு வந்தான்.[17] இவன் காலத்தில் ரேணாடு சோழர்களில் திவாகர சோழன் என்பவன் ஆட்சி செய்தான்.[18]

மல்லதேவனுக்குப்பின் பாணர் மரபில் முதலாம் விக்ரமாதித்யன் (கி.பி.843-892) ஆட்சிக்கு வந்தான். இவனுக்கு வித்யாதரன். ஜெயமேரு என்ற பட்டப் பெயர்கள் உண்டு.[19] இவன் கங்கநாடு 6000, ரேணாடு ஆகிய பகுதிகளுக்காக மேலைக் கங்கர்களுடனும்,

நுளம்பர்களுடனும் போராட வேண்டியிருந்தது. இவன் பல்லவர்களின் சிற்றரசனாக ஆட்சி செய்தான். இவன் கங்கநாடு 6000, வடுகவழி 12000 ஆகிய பகுதிகளைத் தக்கவைத்துக் கொள்ள நுளம்பருடன் போரிட்டான், பிற அரசர்களுக்கும் பாணர்களுக்கும் பூசல்கள் தொடர்ந்தன. சில பூசல்களில் பாணர் கீழிருந்த போர் மறவர்கள் மாண்டுபோனது பற்றி நடுகற்கள் கிடைக்கின்றன. ஆனால் பாணர்கள் வெற்றி பெற்றார்கள். மேலைக் கங்கர் களின் கிளை மரபினைச் சேர்ந்த முதலாம் பிருதிவிபதியின் மகளை பாண அரசன் முதலாம் விக்ரமாதித்தன் மணம் செய்துக் கொண்டமையால் பாணர்களுக்குப் பலம் கூடியது.

முதலாம் விக்ரமாதித்தனுக்குப்பின் அவனுடைய மகன் இரண்டாம் விஜயாதித்தன் ஆட்சிக்கு வந்தான். கி.பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பாணர்கள் சுயாட்சி பெற்றவர்களாக ஆட்சி செய்யத் தொடங்கினர். திருவல்லம் கல்வெட்டுகள் பாணர்கள் ஆட்சியில் வெளியிடப்பட்டவை.[20] அவற்றில் பாணர்கள் யாருக்கும் கீழ்படிந்தவர்களாகக் குறிக்கப்பெறவில்லை. பாணர்கள் சுயாட்சி பெற்ற தன்மை பல்லவர், கங்கர், சாளுக்கியர், இராட்டிரகூடர் ஆகியோர் செல்வாக்கிழந்த தன்மையைக் காட்டுகின்றது. பல்லவர் ஆட்சியை நிலை நிறுத்த பாணர்கள் பெரும் பங்காற்றினர். கங்கர்கள், நுளம்பர்கள் ஆகிய மரபினர்கள் பல்லவர்களுக்கு எதிராக நின்றபோது பல்லவர்களுக்காக பாணர்கள் போராடினார்கள். வரலாற்றுக் காலம் முழுவதும் அவர்கள் பேரரசுக்குக் கீழ்ப்படிந்த சிற்றரசர்களாக ஆட்சி செய்தனர். சில காலங்களில் சுயாட்சி பெற்று விளங்கினர்.

பாணர்கள் நாடு முல்லையும், குறிஞ்சியும் மிகுந்த பகுதியாக இருந்தமையால் ஆநிரைக்காக பூசல்கள் நடந்து கொண்டேயிருந்தன. பாணர் நாட்டில் பல்வேறு குடிகள் தங்களுக்குரிய பகுதிகளில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டனர். அதனால் மாடு காக்கவும், நாடு காக்கவும் (இங்கு நாடு என்பது மேய்ச்சல் பகுதி) குடிகளுக்கிடையில் பூசல்கள் நிகழ்ந்த வண்ணம் இருந்தன. இது அந்தப் பகுதியில் சோழர் காலம் வரை தொடர்ந்து நடைபெற்று வந்தது.

கி.பி. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து பாணர்கள் பல்வேறு பகுதிகளில் கிடைக்கும் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றனர். மாண்டியா, பெங்களூர், கோலார் (கர்நாடகம்), தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை (தமிழ் நாடு) சித்தூர், அனந்தபுரம், கர்நூல், நெல்லூர் (ஆந்திரம்) ஆகிய பகுதிகளில் கிடைக்கும் கல்வெட்டுகளில் பாணர்கள் சிற்றரசர்களாகக் குறிக்கப்பெறுகினறனர்.[21] இவர்கள் மரபிலிருந்து பிரிந்து கிளைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்பெறுகின்றனர். ஜெயநந்திவர்மன் காலம் முதல் வடுக வழி மேற்கு, கங்கவாடி 6000, புலிநாடு, களபப்பு நாடு ஆகிய பகுதிகளை ஆண்டுள்ளனர். ஆனால் சோழர்காலத்தில் கோலார் மாவட்டத்தில் கிழக்குப் பகுதி, சித்தூர் மாவட்டத்தின் மேற்குப் பகுதி, வேலூர் மாவட்டத்தின் மேற்குப்பகுதி ஆகிய பகுதிகளில் பாணர்கள் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. இதுவே சோழர் காலத்தில் பெரும்பாணப்பாடி என்று அழைக்கப்பெற்றது.[22]

தொண்டை மண்டலத்தில் கி.பி. 9ஆம் நூற்றாண்டு அரசியல் நிலைமை குழப்பமுடையதாகவும், நிச்சயமற்றதாகவும் இருந்தது. இந்தக் காலகட்டத்தில் விஜயாலயன் (கி.பி. 850- 879) தஞ்சையைப் பிடித்து சோழப்பேரரசுக்கு அடிக்கல் நாட்டினான். அவனுக்குப் பின் அவன் மகன் முதலாம் ஆதித்தன் ஆட்சிக்கு வந்தான்.

முதல் ஆதித்த சோழன்

பல்லவ மன்னனாகிய அபராஜிதவர்மனை வென்ற ஆதித்தன் தொண்டை மணடலத்தைக் கைப்பற்றிக் கொண்டான் என்பதால் ''தொண்டை நாடு பாவின இராசகேசரி வர்மன்'' என்று அழைக்கப்படுகின்றான்.[23] படையெடுத்துச் சென்று கொங்கினைக் கைப்பற்றிக் கொண்டான் என்று '' கொங்கு தேச இராசாக்கள்'' என்ற வரலாற்று நூல் கூறுகின்றது. இராசகேசரிப் பெருவழி கல்வெட்டு அவன் பொறித்த கல்வெட்டு.[24] சைவ சமயக் குரவர் மூவரும் பாடியருளிய தேவாரப் பதிகங்களைத் திருமுறைகளாகத் தொகுத்த நம்பியாண்டார் நம்பி என்பவர் தாம் இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியில்,

''சிங்கத்துருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்த ஆதித்தன்''

என்று கூறியிருப்பது ஆதித்த சோழன் கொங்கு மண்டலத்தை வென்று அங்கிருந்து பொன்னைக் கொணர்ந்து தில்லைச் சிற்றம்பலமுகட்டை அப்பொன்னால் வேய்ந்தான் என்ற செய்தி உறுதிப்படுகின்றது.

இரண்டாம் பிருதிவிபதி ஆதித்தன் ஆட்சியின் இருபத்து நான்காம் ஆண்டில் தொண்டை நாட்டிலுள்ள தக்கோலமென்னும் திருவூறற் கோயிலுக்கு ஒரு வெள்ளிக் கெண்டி அளித்தான்.[25] அதனால் ஆதித்த சோழனும், இராண்டாம் பிருதிவிபதியும் நண்பர் களாக இருந்தனர் என்பது தெரிகின்றது.

இவ்வாதித்த சோழன் காவிரியாற்றின் இரு மருங்கும் பல சிவாலயங்களை கற்றளிகளாக எடுப்பித்தான் என்று அன்பில் செப்பேடுகள் கூறும்.[26] இவன் எடுப்பித்த கற்றளிகளுள் திருப்புறம்பயத்திலுள்ள கோயிலே முதன்மை வாய்ந்தது. இவ்வேந்தன் பெயரால் இராசகேசரிச் சதுர்வேதிமங்கலம் என்று அக்காலத்தில் வழங்கப்பெற்று வந்தது என்பது தேவராயன்பேட்டையிற் காணப்படும் கல்வெட்டுகளால் அறியப்படுகின்றது.[27]

ஆதித்த சோழனுக்கு இருமனைவியர் இருந்தனர். இளங்கோப்பிச்சி, திரிபுவன மாதேவியாகிய வயரியக்கள் ஆகிய இருவர். இவ்வேந்தனுக்குப் பராந்தகன், கன்னரதேவன் என்ற இரு புதல்வர்கள் உண்டு.[28] கி.பி.880 முதல் 915 வரையில் குந்தள நாட்டில் அரசாண்ட இராஷ்டிரகூட மன்னனாகிய இரண்டாம் கிருஷ்ண தேவன் மகளும் ஆதித்தனுடைய பட்டத்தரசியுமாகிய இளங்கோப்பிச்சியின் மகனே கன்னரதேவன்.

ஆதித்த சோழனின் இறுதிநாட்கள் அரச பட்டம் ஏற்பதில் போட்டி ஏற்பட்டு சோழர் அரசியலில் குழப்பம் ஏற்பட்டது. அதனால் தொண்டை மண்டலத்தில் அவனுடைய

27-ஆம் ஆட்சி (கி.பி. 898) ஆண்டிற்குப் பின் கல்வெட்டுகள் கிடைக்கவில்லை. ஒன்பது ஆண்டுகள் (கி.பி. 898-907) தொண்டை மண்டலத்தில் சக ஆண்டிலேயே கல்வெட்டுகள் தொடங்குகின்றன.[29] அதனால் இந்த ஆண்டுகளில் தொண்டை மண்டலத்தில் அரசன் யாரும் ஆளவில்லையோ என்று கருதப்பெறுகின்றது.

சித்தூர் மாவட்டத்தில் திருக்காளத்திக்கு அண்மையிலுள்ள தொண்டைமான் ஆற்றூரில் கி.பி. 907-ஆம் ஆண்டில் ஆதித்தன் இறந்தான் என்று தெரிகிறது. இவ்வூர் இக்காலத்தில் தொண்டைமாநாடு என்று வழங்கப்படுகிறது.[30] அங்கு இவன் புதல்வனாகிய முதற்பராந்தக சோழன் ஆதித்தனின் நினைவாக ஒரு பள்ளிப்படை கோயில் எடுப்பித்தான். அக்கோயிலுக்கு ஆதித்தேசுவரம். கோதண்டராமேசுவரம் என்னும் பெயர்கள் அந்நாளில் வழங்கி வந்தன என்பது அதிலுள்ள ஒரு கல்வெட்டால் அறியப்படுகிறது.[31]

தொண்டை மண்டலத்தில் முதலாம் ஆதித்தன் கல்வெட்டுகள் கூரம், தக்கோலம், திருக்கழுக்குன்றம் ஆகிய ஊர்களில் கிடைக்கின்றன. திருமால்பூர் கோயிலுக்கு அவன் அளித்த கொடையைப்பபற்றி உத்தம சோழன் கல்வெட்டு கூறுகின்றது.[32]

முதற் பராந்தக சோழன் (கி.பி. 907-953)

சோழ மன்னர்கள் மாறி மாறிப் புனைந்து கொண்ட இரு பட்டங்களில் ஒன்றான பரகேசரி என்ற பட்டமுடையவன் இவன். அவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுகள் இவனை ''மதுரை கொண்ட கோப்பரகேசரிவர்மன்'' என்று கூறுகின்றமை யின் கி.பி. 910-ஆம் ஆண்டில் இவன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று மதுரையைக் கைப்பற்றியிருத்தல் வேண்டும் எனலாம்.[33] அந்நாளில் பாண்டி நாட்டில் ஆட்சி புரிந்து கொண்டிருந்தவன் மூன்றாம் இராசசிம்ம பாண்டியன் என்பான்.[34] பராந்தகன் நிகழ்த்திய போரில் அவன் தோல்வியுற்று இலங்கை வேந்தனாகிய ஐந்தாம் காசிபனைத் தனக்குத் துணைப்படை உதவுமாறு வேண்டிக் கொண்டான். இலங்கை வேந்தனும், இராசசிம்மன் வேண்டுகோளுக்கிணங்கி, சக்க சேனாதிபதியின் தலைமையில் பெரும்படை யொன்றைப் பாண்டிய நாட்டிற்கனுப்பினான். பின்னர் இராசசிம்ம பாண்டியன் பராந்தகனோடு போர்புரிய புறப்பட்டான். வெள்ளூர் என்ற இடத்தில் இரு வேந்தர்க்கும் பெரும்போர் நடைபெற்றது. அப்போரில், பராந்தகன் அளவற்ற வீரர்களையும், யானைகளையும், குதிரைகளையும் கொன்று குவித்து மீண்டும் மதுரை மாநகரைக் கைப்பற்றினான். பாண்டிய படையும் இலங்கையிலிருந்து வந்த துணைப்படையும் தோற்று ஓடின.[35] இராசசிம்ம பாண்டியன் இம்முறையும் தோல்வியைத்தழுவினான். இச்செய்தி களுள் சிலவற்றை இரண்டாம் பிருதிவிபதியின் உதயேந்திரச் செப்பேடுகளிலும் இலங்கைச் சரிதமாகிய மகாவம்சத்திலும் காணலாம்.[36] பாண்டிய நாட்டில் பராந்தகனது கல்வெட்டுகள் இவனது ஆட்சியின் இருபத்து நான்காம் ஆண்டு முதல் தான் காணப் படுகின்றன.

அரசை இழந்த இராசசிம்ம பாண்டியன் சிங்களத்திற்குச் சென்று அந்நாட்டு நாட்டரசனாகிய நான்காம் தப்புலன்பால் (கி.பி 923-934) உதவி பெற அங்குத் தங்கியிருந்தான். தன் முன்னோர்களிடம் இருந்து தனக்குக் கிடைத்த சுந்தர முடியையும் பிற அரச சின்னங்களையும் அவ்வேந்தன்பால் அடைக்கலப் பொருளாக வைத்துவிட்டு, தன் தாய் வானவன் மாதேவியின் பிறந்த தாயகமாகிய சேரநாட்டிற்குச் சென்று அங்கு வசித்து வந்தான்.[37]

பராந்தக சோழன், பாண்டிய நாடு முழுமையும் தன் ஆட்சிக்குட்படுத்திய பின்னர் அந்நாட்டின் தலைநகராகிய மதுரையில் முடிசூட்டுவிழா நடத்துவதற்கு முயன்றபோது பாண்டியர்க்குரிய முடியும் பிற அரசச் சின்னங்களும் அங்குக் காணப்படவில்லை. அவையனைத்தும் நாட்டைவிட்டுச் சென்ற இராசசிம்ம பாண்டியனால் இலங்கைக்குக் கொண்டு செல்லப்பெற்றது என்பதை அறிந்த பராந்தகன் அவற்றை வாங்கி வருமாறு சில தூதர்களை சிங்கள நாட்டிற்கு அனுப்பினான். அக்காலத்தில் அந்நாட்டில் அரசாண்டு கொண்டிருந்த நான்காம் உதயன் எனபான் அவற்றைக் கொடுக்க மறுக்கவே, பராந்தகன் அவன் நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அவற்றைத் தன் ஆற்றலால் கைப்பற்றிக்கொண்டுவர வேண்டும் என்று கருதினான். அதுபற்றியே ஈழநாட்டிற்குப் பெரும்படையொன்று அனுப்பபெற்றது. பராந்தகன் படை வெற்றியெய்தவே, சிங்கள வேந்தனாகிய உதயன், பாண்டியன் கொடுத்துச் சென்ற முடியையும் பிறவற்றையும் எடுத்துக்கொண்டு இலங்கையின் தென்கீழ்ப் பகுதியாகிய ரோகண நாட்டிற்குப் போய்விட்டான். சோணாட்டுப்படை அவற்றைக் கைப்பற்ற முயன்றும், அங்குச் செல்ல முடியாமல் தன் நாட்டிற்குத் திரும்பிற்று. இவ்வரலாற்றை மகாவம்சத்தில் காணலாம். இவனது ஆட்சியின் 37-ஆம் ஆண்டுக் கல்வெட்டுகள் இவனை[38] ''மதுரையும் ஈழமும் கொண்ட கோப்பரகேசரிவர்மன்'' என்று குறிப்பிடுவதால், இவனது ஈழநாட்டுப் படையெழுச்சி கி.பி. 944-ஆம் ஆண்டிற்கு முன்னர் நிகழ்ந்திருத்தல் வேண்டும் என்று உறுதிப்படுகின்றது.

பராந்தகன் ஆட்சியின் 15-ஆம் ஆண்டில் வரையப்பெற்ற உதயேந்திரச் செப்பேடுகள் இவன் இரண்டு வாணர்குல அரசர்களை வென்று பெரும்பாணப்பாடி நாட்டை கங்க மன்னனாகிய இரண்டாம் பிருதிவிபதிக்கு வழங்கியதோடு அவனுக்குச் 'செம்பியன் மாவலி வாணராயன்' என்ற பட்டமும் அளித்தான் என்று கூறுகின்றன.

''பாணர்(வாணர்) என்பார், பாலாற்றுக்கு வடக்கே சித்தூர் மாவட்டம் வரையில் அமைந்திருந்த நிலப்பரப்பாகிய பெரும்பாணப்பாடி என்ற நாட்டை ஆட்சி புரிந்த ஓர் அரச மரபினர் ஆவார். அன்னோர் வல்லம், வாணபுரம் என்ற நகரங்களைத் தம் தலைநகரங் களாகக் கொண்டு இரண்டு நூற்றாண்டுகள் அப்பகுதியில் ஆட்சி புரிந்தனர். அவர்களது நாடு பெரும்பாணப்பாடி என்று முற்காலத்தில் வழங்கப்பட்டது. தொண்டை மண்டலம் பல்லவர் ஆட்சிக்குட்பட்டிருந்த காலத்தில் வாணர்குல வேந்தர் அவர்கட்குத் திறை

செலுத்திக் கொண்டு குறுநில மன்னராக இருந்து வந்தனர். முதல் ஆதித்தசோழன் அபராஜிதவர்மனை வென்று தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றிய நாட்களில் பாணர் பல்லவர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு தனியரசு புரிந்து வந்தனர். ஆகவே, பராந்தக சோழன் அவர்களை வென்றடக்குவது இன்றியமையாததாயிற்று. அம்முயற்சியில் தான் கங்க மன்னனாகிய இரண்டாம் பிருதிவிபதி என்பான் பராந்தகனுக்கு உதவி புரிய வந்து வல்லத்தில் நிகழ்ந்த போரில் பாணர்களை வென்று அதற்குப் பரிசாக பெரும்பாணப்பாடி நாட்டையும், செம்பியன் மாவலி வாணராயன் என்ற பட்டத்தையும் பராந்தகனிடம் பெற்றான்'' என்று பண்டாரத்தார் கூறுகிறார்.[39]

பராந்தகன்பால் தோல்வியுற்றுத் தம் நாட்டை இழந்த பாண அரசர்கள் இரண்டாம் விசயாதித்தனும், அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தனும் ஆவர். பராந்தகன் பாணரை வென்று அவர்கள் நாட்டைக் கி.பி. 911-912-ஆம் ஆண்டுகளில் கைப்பற்றியிருத்தல் வேண்டும். வாணர் மரபைச் சேர்ந்த இரண்டாம் விசயாதித்தன் போரில் இறந்தமையால் அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தன் என்பவன் இராஷ்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணதேவனிடம் அடைக்கலம் புகுந்து, அவன் ஆதரவிலிருந்து கொண்டு தகுந்த நேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.[40]

மேல்பாடி பெரும்பாணப்பாடியிலிருந்த தூய்நாட்டைச் சேர்ந்திருந்தது. இவ்வூரில் உள்ள சோமநாதர் கோயில் முதலாம் பராந்தகனால் கட்டப் பெற்றிருக்க வேண்டும் என்று கருதப்பெறுகின்றது.[41] இக்கோயிலில் முதல் பராந்தகன் கல்வெட்டு ஏதுமில்லை. இருப்பினும் அவன் காலத்துக் கலைப்பாணியில் இக்கோயில் அமைந்துள்ளது. மேலும் பெரும்பாணப்பாடியை வைதும்பர் பொறுப்பில் விட்டுவிட்டமையால் இக்கோயிலில் அவன் கல்வெட்டு பொறிக்கப்பெறவில்லை என்று கருதலாம்.

இராஷ்டிரகூட மன்னனாகிய மூன்றாம் கிருஷ்ணதேவன், தன் தந்தை இறந்தபிறகு முடி சூட்டுவிழா நடத்துவதற்குக் கி.பி. 940-ல் ஏற்பாடு செய்துக் கொண்டிருந்தபோது பராந்தக சோழன் இரட்ட மண்டலத்தைக் கைப்பற்றித் தன் மருமகன் நான்காம் கோவிந்தனுக்கு அளிக்கும்பொருட்டு படையெடுத்துச் சென்றமையை அவன் மறக்கவில்லை. கி.பி 949-ஆம் ஆண்டில் அவன் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். அந்நாளில், கங்க மன்னனாகிய இரண்டாம் பூதுகனும் பெரும்படையோடு அவனுக்கு உதவிபுரிய வந்தான். எனவே, இராஷ்டிரகூடப் படையும் கங்கப் படையும் சேர்ந்து சோழ நாட்டின் வடபகுதியிலிருந்த தொண்டை நாட்டைத் தாக்கின.[42] அந்நாளில் திருநாவலூரில் படையுடன் தங்கியிருந்த இரளவரசனாகிய இராசாதித்த சோழன் இப்படையெடுப்பைத் தடுத்துப் போர் புரியத் தொடங்கினான்.

வேலூர் மாவட்டத்தில் உள்ள தக்கோலம் என்ற ஊரில் இரு பெரும் படைகளும் கடும்போர் புரிந்தன. அப்போரில், கங்க மன்னனாகிய இரண்டாம் பூதுகன் விடுத்த அம்பொன்று யானை மேலிருந்து போர் புரிந்து கொண்டிருந்த அரச குமாரனாகிய இராசாதித்தன் மார்பில் தைக்கவே அவனும் இறந்து போனான். மூன்றாம் கிருஷ்ண தேவன்

வெற்றிபெற்றான். இப்போர் நிகழ்ச்சி ஆணைமங்கலச் செப்பேடுகளிலும் திருவாலங் காட்டுச் செப்பேடுகளிலும் சொல்லப்பட்டிருக்கின்றது.[43] பங்களூர் பொருட்காட்சி சாலையிலுள்ள ஆதகூர்க் கல்வெட்டொன்று பூதுகன், இராசாதித்தன் யானை மேல் வீற்றிருந்த அம்பாரியையே தன் போர்க்களமாகக் கொண்டு போர் புரிந்து அவனைக்குத்திக் கொன்றான் என்றும், மூன்றாம் கிருஷ்ண தேவன் அவனது வீரச்செயலைப் பாராட்டி அவனுக்கு வனவாசிப் பன்னீராயிரமும், பிறவும் வழங்கினான் என்றும் கூறுகின்றது.[44]

தக்கோலப் போரில் வெற்றியெய்திய மூன்றாம் கிருஷ்ணதேவன் தொண்டை நாட்டையும், திருமுனைப்பாடி நாட்டையும் கைப்பற்றித் தன் ஆளுகையின் கீழ்க்கொண்டு வருவதற்குச் சில ஆண்டுகள் சென்றிருத்தல் கூடும் என்று தெரிகிறது.

இப்போர் நிகழ்ச்சிக்குப் பின்னர் முதல்பராந்தக சோழனது கல்வெட்டுகள் அந்நாடுகளில் யாண்டும் காணப்படவில்லை. ஆகவே, இப்போரின் பயனாக அந்நாடுகளை இவன் இழந்துவிட்டான் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இராஷ்டிரகூட வேந்தனாகிய மூன்றாம் கிருஷ்ணதேவன் கல்வெட்டுகள் அவனது ஆட்சியின் 15-ஆம் ஆண்டாகிய கி.பி. 955 முதல் தான் அந்நாடுகளில் காணப்படுகின்றன.[45] ஆகவே, கி.பி. 949 முதல் 955 வரையில் அவன் அந்நாடுகளைத் தன் ஆட்சிக்குக் கொண்டுவரும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுச் சிறிது சிறிதாக அதில் வெற்றியும் பெற்றான் எனலாம். இப்போர் நிகழ்ச்சியில் சோழ அரசின் பரப்பு சுருங்கிய நிலையை அடைந்தது எனலாம். சோழப் பேரரசும் தன் உயர் நிலையினின்றும் சிறிது வீழ்ச்சியடைந்தது.

மூன்றாம் கிருஷ்ணனின் கல்வெட்டுகள் தொண்டை மண்டலத்தில் 80க்கும் மேல் கிடைக்கின்றன. இக்கல்வெட்டுகளில் தொண்டை மண்டலத்தில் அம்மன்னன் செய்த அறச் செயல்கள் குறிக்கப் பெறுகின்றன. இவன் ஆட்சியில் சமணம், சைவம், வைணவம் ஆகிய சமயங்களுக்கு நிறைய கொடை அளிக்கப் பெற்றன. மேல்பாடியில் அவன் கல்வெட்டு ஏதுமில்லை. ஆனால் அவன் தொண்டை மண்டல வெற்றிக்குப் பின் மேல்பாடியில் பாடிவீடமைத்திருந்தபோது கார்க்காடு செப்பேட்டினை அளித்தான்.[46] அதனால் மூன்றாம் கிருஷ்ணன் வாழ்க்கையில் மேல்பாடி முக்கியத்துவம் வாய்ந்த ஊராக விளங்கியது எனலாம்.

அரிஞ்சய சோழன் (கி.பி. 956-957)

வேலூர் மாவட்டத்தில் ஊள்ள ஆற்றூரில் இவன் இறந்தான் என்று தெரிகிறது. இவனை ''ஆற்றூர்த் துஞ்சின தேவர்'' எனறு சில கல்வெட்டுகள் கூறுவதால் இச்செய்தியை அறியலாம். இவ்வரிஞ்சயன் பேரனாகிய முதல் இராஜராஜ சோழன் வேலூர் மாவட்டத்தில் உள்ள திருவல்லத்திற்கு வடக்கே உள்ள மேல்பாடி என்ற ஊரில் அரிஞ்சிகை ஈச்சுரம் என்ற கோயில் ஒன்று எடுப்பித்து அதற்கு நிவந்தங்களும் வழங்கியுள்ளான். அக்கோயில், பாட்டனை நினைவு கூர்தல் பொருட்டு முதல் இராசராசசோழன் அமைத்ததாகும்.

இச்செய்தியை ஆற்றூர்த்துஞ்சின தேவர்க்குப் பள்ளிப்படையாக உடையார் ஸ்ரீ இராசராச தேவர் எங்கள் நகரத்தில் எடுப்பித்தருளின ''திரு அரிஞ்சிகை ஈசுவரத்து மகாதேவர்'' என்னும் கல்வெட்டுப் பகுதியினால் உணரலாம்.[47] அது இந்நாளில் சோழேச்சுரம் என்று வழங்குகின்றது. அரிஞ்செயன் தொண்டை மண்டலத்தை மீட்டெடுப்பதற்காக படை நடத்தி வந்த போது ஆற்றூரில் நடந்த போரில் மாண்டிருக்க வேண்டும். இந்த ஆற்றூர் மேல்பாடி என்று சில அறிஞர்களால் கருதப்பெறுகின்றது.

முதலாம் இராசராசன் (கி.பி. 985-1014)

இவனுடைய பெற்றோர்கள் இவனுக்கு வைத்த பெயர் அருண்மொழி தேவன் என்பது, இவனது ஆட்சியின் மூன்றாம் ஆண்டு முதல் இவனுக்கு இராசராசன் என்னும் பெயரே வழங்கி வந்தது என்பது கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.[48] இவனது ஆட்சியின் நான்காம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் மதுராந்தகத்தில் வரையப் பெற்றுள்ள கல் வெட்டொன்று இவனைக் ''காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளிய கோ இராசகேசரி வர்மன்'' என்று கூறுகின்றது.[49] ஆகவே, அவ்வாண்டிற்கு முன்னரே காந்தளூர்ப் போர் நிகழ்ந்திருக்க வேண்டும். எனவே, இவன் தன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டாகிய கி.பி. 988-ல் சேரனை யும் அவனுக்கு உதவி புரிய வந்த பாண்டியனையும் காந்தளூர்ப் போரில் புறங்கண்டு வெற்றி பெற்றான் என்பது உறுதியாகின்றது. அவ்வெற்றியின் பயனாக இவன் அவ்வேந்தர்களின் இருமுடிகளையும் கைப்பற்றிக் கொண்டு மும்முடி சோழன் என்னும் சிறப்புப் பெயர் பெற்றான். அந்நாள் முதல் அரசர்க்கரசன் என்று பொருள்படும்.[50] இராசராசன் என்னும் சிறப்புப் பெயரும் இவ்வேந்தனுக்கு உரியதாயிற்று.

பிற்காலச் சோழ மன்னர்கள் வைத்துக் கொண்ட இராசகேசரி, என்னும் பட்டம் பூண்டு ஆட்சி புரியத் தொடங்கினான். பிற்காலச் சோழர்குல முதல்வனாகிய விசயாலய சோழனால் அடிகோலப்பட்ட சோழ அரசு இராசராச சோழன் ஆட்சியில்தான் உயர்நிலை எய்திற்று. அறிவும், அன்பும், நிறைந்த அரசியல் அதிகாரிகளையும், வீரஞ்செறிந்த படைத்தலைவர்களையும் இவன் தேர்ந்தெடுத்துக் கொண்டு ஆட்சி நடத்தினான்.

தன் ஆட்சியில் நிகழ்ந்த வெற்றிகளைக் கூறும் மெய்க்கீர்த்தியை தன் கல்வெட்டு களின் தொடக்கத்தில் பொறிக்கும் வழக்கத்தை முதலில் மேற்கொண்ட அரசன் முதல் இராசராச சோழனேயாவான். மெய்கீர்த்திகள் கூறுவனவெல்லாம் வெறுங் கற்பனைச் செய்திகளல்ல, முதல் இராசராச சோழனது மெய்க்கீர்த்தி ''திருமகள் போலப் பெருநிலச் செல்வியும்'' என்று தொடங்குகிறது. ஆட்சி யாண்டுகள் கூட கூட, மெய்க்கீர்த்தியும் வளர்ந்து கொண்டே போகும் என்பது ஆண்டுதோறும் தொடர்ந்து எழுதப் பெற்ற மெய்க்கீர்த்திகளால் உறுதிப்பெறுகின்றது.

இவன் தன் பாட்டனாகிய அரிஞ்சயனுக்கு வேலூர் மாவட்டத்தில் மேல்பாடி என்னும் ஊரில் அரிஞ்சிகை ஈஸ்வரம் என்ற கோயில் கட்டுவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேல்பாடி கோயில்களில் முதலாம் இராசராசனின் கல்வெட்டுகள் ஆறு உள்ளன. நான்கு கல்வெட்டுகள் அரிஞ்சிகை ஈஸ்வரத்திலும், இரண்டு கல்வெட்டுகள் சோழேந்திரசிம்மேஸ்வரத்திலும் உள்ளன. இரண்டு கோயில்களும் முதலாம் இராசராசன் காலத்தில் கட்டப்பெற்றவை. கோனேரின்மை கொண்டான் என்று தொடங்கும் கல்வெட்டு ஒன்றில் 'நாம் எடுப்பித்த சோளேந்திர சிம்மேஸ்வரர் கோயில் தேவர்'' என்று கூறுகின்றது. இக்கல்வெட்டு அம்மன்னனின் பதினான்காம் ஆட்சி ஆண்டில் (கி.பி.999) பொறிக்கப் பெற்றது. அரிஞ்சிகையீஸ்வரம் கோயில் அம்மன்னனின் இருபத்தொன்பதாம் ஆட்சி ஆண்டில் கட்டப்பெற்றது. இரண்டு கோயில்களில் சோழேந்திர சிம்மேஸ்வரர் கோயிலுக்கு நிறைய நிலக்கொடையை அளித்துள்ளான். அரிஞ்சிகை ஈஸ்வரத்திற்கு இராசராசன் அளித்த கொடை குறிப்பிடத்தக்கதாக இல்லை. சோழேந்திர சிம்மேஸ்வரர் கோயில் முதல் பராந்தகனால் கட்டப்பெற்றது என்று கருதப்பெறுகின்றது. ஆனால் அக்கோயில் கல்வெட்டு முதல் இராசராசன் அக்கோயிலைக் கட்டியதாகக் கூறுகின்றது.

முதல் இராசேந்திர சோழன் (கி.பி. 1012-1014)

பூர்வ தேசமும், கங்கையும், கடாரமுங் கொண்ட கோப்பரகேசரிவர்மன் என்று கல்வெட்டுகள் இவனைப் புகழ்ந்து கூறும்.[52] முதல் இராசராச சோழனுக்கு அவன் கோப்பெருந்தேவியருள் வானவன் மாதேவி என்று வழங்கும் திருபுவனமாதேவி பால் பிறந்த புதல்வன் ஆவான். இவன் மார்கழித்திங்கள் திருவாதிரை நாளில் பிறந்தவன் என்பது கல்வெட்டால் புலப்படுகிறது.[53] இவன் தந்தை இவனுக்கு மதுராந்தகன் என்று பெயரிட்டிருந்தனன் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் அறியக் கிடக்கின்றது.

இவன் ஆட்சியை ஏற்றுக்கொண்ட நாளில் சோழப்பேரரசு இக்காலத் தமிழகம் ஆந்திர மாநிலங்களையும், மைசூர் நாட்டின் ஒரு பகுதியையும், ஈழ நாட்டையும் தன்னகத்தே கொண்ட பேரரசாக இருந்தது எனலாம்.

சோழ மன்னர்கள் தம் ஆட்சியினைக் கைக்கொள்ளும் போது ஒருவர் பின்னொருவராக மாறி மாறிப் புனைந்து கொண்டு வந்த இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களுள் இவன் பரகேசரி என்னும் பட்டத்துடன் அரசாண்டவன்.

இவனது மெய்க்கீர்த்தி, ''திருமன்னி வளர இரு நிலமடந்தையும் போர்ச்சயப் பாவையும் சீர்த்தனிச் செல்வியும் தன் பெருந் தேவியராகி இன்புற'' என்று தொடங்கின்றது. அம்மெய்க்கீர்த்தி இவன் ஆட்சியின் மூன்றாம் ஆண்டுக் கல்வெட்டுகளில் தான் முதலில் காணப்படுகிறது. எனினும் அது மிகுதியாகக் காணப்படுவது ஐந்தாம் ஆட்சியாண்டு முதல் தான் என்பது குறிப்பிடத்தக்கது.

முதலாம் இராசேந்திரன் மதுரை மாநகரில் ஓர் அரண்மனை எடுப்பித்து அங்குத் தன் மகனைச் சோழ பாண்டியன் என்னும் பட்டத்துடன் முடிசூட்டிப் பாண்டி நாட்டை

ஆட்சிபுரிந்து வருமாறு ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும் என்று கூறப்படுகின்றது. அவ்வாறு மதுரையம்பதியிலிருந்து தன் தந்தையின் ஆணையின்படி ஆட்சி புரியத் தொடங்கியவன் சடையவர்மன் சுந்தரசோழ பாண்டியன் என்பது பாண்டி நாட்டில் காணப்படும் கல்வெட்டுகளால் அறியப்படுகிறது.[55]

இவ்வேந்தன் கப்பற்படையின் துணை கொண்டு, கடல் நடுவிலுள்ள கடாரத்தரசனாகிய சங்கிராம விசயோத்துங்கவர்மனைப் போரிற் புறங்கண்டு அவனது பட்டத்து யானையையும், பெரும் பொருளையும் வித்தியாதரத் தோரணத்தையும் கவர்ந்து கொண்டு ஸ்ரீவிசயம், மன்னை, மாயூர், மாயிருடிங்கம், இலங்காசோகம், பப்பாளம், இலிம்பங்கம், வளைப்பந்தூர், தக்கோலம், தமாலிங்கம், இலாமுரி தேசம், நக்கவாரம், கடாரம் ஆகிய இடங்களையும் கைப்பற்றினான் என்பது இவன் மெய்க்கீர்த்தியினால் அறியப்படுகின்றது.[56]

இராசேந்திரன் இளமையில் தன் தந்தையால் இடப்பெற்ற மதுராந்தகன் என்னும் பெயரும் தன் முடிசூட்டு விழாவில் பெற்ற இராசேந்திரன் என்னும் அபிடேகப் பெயரும் உடையவனாயிருந்தமையோடு வேறு சில சிறப்புப் பெயர்களையும் பெற்றிருந்தான் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளாலும் கல்வெட்டுக்களாலும் நன்கறியக் கிடக்கின்றது.[57] அவை உத்தம சோழன், சோழேந்திர சிம்மன், விக்கிரம சோழன், முடிகொண்ட சோழன், பண்டித சோழன், கடாரங் கொண்டான், கங்கை கொண்ட சோழன் என்பனவாகும்.[58]

இவனுக்குச் சைவாசாரியாராக விளங்கியவர் சர்வசிவ பண்டிதர் ஆவார். இச்செய்தி ஆசாரிய போகமாக இவருக்கு இரண்டாயிரங்கல நெல் ஆண்டு தோறும் அளிக்குமாறு இவன் செய்துள்ள ஏற்பாட்டினால் நன்கு வெளியாகின்றது.[59] மேலும் சிவநெறியின் அறுவகைப் பிரிவுகளுள் ஒன்றாகிய காளாமுகத்தைச் சார்ந்த லகுளீச பண்டிதரும் இவனால் ஆதரிக்கப்பட்டவர் என்று தெரிகிறது.[60]

அரச குமாரரை வென்ற நாடுகளுக்குத் தலைவராக அமர்த்தும் புதிய முறையை முதலில் பின்பற்றத் தொடங்கியவன் இராசேந்திர சோழனேயாவான்.

இம்மன்னனின் கல்வெட்டுகள் மூன்று மேல்பாடி கோயில்களில் பொறிக்கப் பெற்றுள்ளன. ஒரு கல்வெட்டு அவனே அளித்த ஆணையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. மற்றொரு கல்வெட்டு இலகுளீச பண்டிதரைப் பற்றிக்குறிப்பிடுகின்றது. இராசேந்திரன் அளித்த ஆணை குறிப்பிடத்தக்கது. இவ்வாணையில் அவன் தந்தை அளித்த தேவதான ஊர்களிலிருந்து அரசு தனக்கென ஒதுக்கிவைத்திருந்த வரித் தொகையையும் சோளேந்திர சிம்மேஸ்வரர் கோயிலுக்கு அளிக்கப்பெற்றது பற்றிக் கூறுகின்றது. இந்தக் கல்வெட்டில் தான் அவன் பிறந்த நாள் வழிபாடு பற்றி விரிவாகக் கூறப்பெறுகின்றது.

இராசேந்திரன் மாண்டபோது பட்டத்தரசியும் மாண்டுபோனாள். இவ்விருவருக்கும் பிரம்மதேசம் என்ற ஊரில் பள்ளிப்படை எடுக்கப்பெற்றது. அவ்வூர் மேல்பாடி அருகில் உள்ளது.

முதற்குலோத்துங்க சோழன் (கி.பி. 1070-1124)

''சுங்கத்தவிர்த்திருள் நீக்கி உலகாண்ட ஸ்ரீகுலோத்துங்க சோழதேவர்''[61] என்று கல்வெட்டில் புகழ்பெற்றுள்ளவன் இவ்வரசன். கீழைச்சாளுக்கிய மன்னனாகிய இராசராச நரேந்திரன் புதல்வன். இவன் தாய் கங்கை கொண்ட சோழன் புதல்வியாகிய அம்மங்கை தேவியாவார். எனவே, இவன் தாய் வழியில் சோழ மரபினன். மக்கள் தாயம் நிலை பெற்றுள்ள நாடுகளில் வாழும் ஆண்மக்கள் எல்லோரும் தம் தந்தையின் மரபையே தம்முடைய மரபாகக் கூறிக்கொள்வது தொன்று தொட்டு நிகழ்ந்து வரும்'' ஒரு வழக்க மாகும். அம்முறையின்படி குலோத்துங்க சோழன் கீழைச்சாளுக்கியர் மரபினனேயாவன்.

இவனுக்கு இளமையில் இராசேந்திரன் என்னும் பெயர் இடப்பெற்றிருந்தது என்பது செல்லூர்ச் செப்பேடுகளால் அறியக் கிடக்கின்றது. அது இவன் தாய்ப் பாட்டனாகிய கங்கை கொண்ட சோழனது இயற்பெயர் ஆகும். பாட்டன் பெயரையே பேரனுக்கு வைப்பது பண்டை வழக்கமாதலின் அப்பெயர் இவனுக்கு வழங்கப் பெற்றது எனலாம். இவன் பிறப்பதற்குச் சில தினங்கள் முன் கி.பி. 1044-ஆம் ஆண்டில் கங்கை கொண்ட சோழன் இறந்து விட்டமையால் இவனுக்கு அவன் பெயர் இடப்பட்டது என்று தெரிகிறது.

சோழ நாட்டில் வீரராசேந்திர சோழனுக்குப் பிறகு சில தினங்கள் வரையில் அராசண்ட அவன் புதல்வன் அதிராசேந்திரன் கி.பி. 1070-ஆம் ஆண்டின் இடையில் நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்டான்.[62] அவனுக்கு மகப்பேறின்மையாலும், சோழர் மரபில் வேறு அரச குமாரர் இல்லாமையாலும் சோழநாடு அரசனின்றி அல்லலுற்றது. குறுநில மன்னரது கலகம் ஒரு புறமும், உள்நாட்டுக் குழப்பம் மற்றொரு புறமும் எழுந்தன. கலிங்கத்துப் பரணியின் ஆசிரியராகிய சயங்கொண்டார் அக்குழப்பத்தையும், கலகத் தையும் தம் நூலில் தெளிவாகக் கூறியுள்ளார். மேலும் சோழநாடு அக்காலத்தில் அரசனின்றிக் குழப்பத்திற்குள்ளாயிருந்தது என்பது குலோத்துங்கன் மெய்க்கீர்த்திகளாலும் நன்கறியக் கிடக்கின்றது.

இங்ஙனம் சோழநாடு அரசனின்றி நிலைகுலைந்திருந்த செய்தியை வடபுலத்தில் போர் புரிந்து கொண்டிருந்த இராசேந்திரன் (குலோத்துங்கன்) அறிந்து, கங்கை கொண்ட சோழனுடைய மகள் வயிற்றுப் பேரன் என்னும் உரிமை பற்றி அச்சோழ நாட்டு ஆட்சியை ஏற்றுக்கொள்ள தலைநகராகிய கங்கை கொண்ட சோழபுரத்திற்குச் சென்றான். ''அங்கிருந்த அமைச்சர், படைத்தலைவர் முதலான அரசியல் அதிகாரிகள் எல்லோரும் சோணாட்டு ஆட்சியை இவனுக்கே அளிப்பது என்று உறுதி செய்தனர்.''[63] அங்ஙனமே இவனுக்கு முடிசூட்டுவதற்குத் தக்க ஏற்பாடு செய்யப்பட்டது. கி.பி. 1070-ஆம் ஆண்டு சூன் திங்கள் 9-ஆம் நாளில் தலைநகரில் இவன் முறைப்படி முடிசூட்டப்பெற்றான். அந்நன்னாளில் குலோத்துங்க சோழன் என்னும் அபிடேகப் பெயரும் பெற்றான்.

சோழ மன்னர் முடிசூட்டப்பெறும் நாளில் இராசகேசரி, பரகேசரி என்ற பட்டங்களை ஒருவர் பின் ஒருவராக மாறிப் மாறிப் புனைந்து கொண்டு ஆட்சி புரிந்து வந்தனர். அம் மரபின்படி குலோத்துங்கனும், இராசகேசரி என்னும் பட்டம் புனைந்து அரசாளத் தொடங்கினான்.

இவ்வாறு கீழைச்சாளுக்கிய அரச குமாரனாகிய இராசேந்திரன் குலோத்துங்க சோழன் என்னும் பெயருடன் சோழ பேரரசுக்கு சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றவுடன் உள்நாட்டுக் குழப்பம் ஒழியவே, சோழ மண்டலத்தில் யாண்டும் அமைதி நிலவுவ தாயிற்று. குறுநில மன்னர்களும் இவனுக்கு அடங்கியே வாழ்ந்தனர். இவன், நாட்டு மக்களுக்கு நலம் புரிவதையே தன் குறிக்கோளாகக் கொண்டு ஆட்சி செய்தான். இதுவரை முதல் குலோத்துங்கன் ஐம்பது ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்று கருதப்பெற்றது.[64] ஆனால், தருமபுரி மாவட்டம், ஓசூர் அருகில் உள்ள கைலாவரம் என்ற ஊரிலிருந்து கிடைத்த நடுகல் கல்வெட்டு ஒன்றுமூலம் இம்மன்னன் 54 ஆண்டுகள் ஆட்சி செய்தான் என்பது தெரிகின்றது.[65]

குலோத்துங்கனின் கல்வெட்டு ஒன்று சோமநாதீஸ்வரர் கோயிலில் பொறிக்கப் பெற்றுள்ளது.

தெலுங்குச் சோழர்

தெலுங்குச் சோழர் முதலாம் இராசராசன் காலம் முதல் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றார்கள். திக்கன், முதலாம் வீரகண்ட கோபாலன், முதலாம் விஜயகண்ட கோபாலன், இரண்டாம் வீரகண்ட கோபாலன், இரண்டாம் விஜயகண்ட கோபாலன் ஆகியோர் குறிக்கப்பெறுகின்றனர்.[66] மேல்பாடியில் கிடைக்கும் கல்வெட்டில் மதுராந்தக பொத்தப்பி சோழன் புடோலி அரசன் என்பவன் குறிக்கப் பெறுகின்றான்.[67] இவன் மூன்றாம் இராசராசன் காலத்தில் ஆட்சி செய்தான். இவன் சீயகங்கனின் மாமன் என்று கல்வெட்டு களில் குறிக்கப்பெறுகின்றான். புடோலி அரசன் என்று கூறப்பெறுவதால் புடோலி என்ற ஊரில் அரசனாக ஆட்சி செய்தான் என்று கருதலாம். இவன் கல்வெட்டில் அழகிய வெண்பா அமைந்துள்ளது.

கோப்பெருஞ்சிங்கன்

இக்கோயிலில் மூன்றாம் இராசராசன் கல்வெட்டு கி.பி. 1224 -ல் பொறிக்கப் பெற்றது. ஆனால் மைய அரசு கல்வெட்டு ஆண்டறிக்கை (1923-11 5-8) யில் கோப்பெருஞ்சிங்கன் முதல் சிறையீடு செய்தான் என்று கூறுகின்றது.[68] இரண்டாவது சிறையீடு 1231-32-ல் நடைபெற்ற காலத்தில் அரசியல் குழப்பங்களும் சிற்றரசு எழுச்சிகளும் மிகுந்து காணப் பெற்றமையால் அக்கால வரலாற்றினை நிரல்படக் கூறுவதில் பல இடர்பாடுகள் உள்ளன. மேல்பாடியில் கிடைக்கும் கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டில் ஒரு சீயகங்கன் குறிக்கப் பெறுகின்றான்.[69] இரண்டு கல்வெட்டுகளும் ஒரே பகுதியில் (மகா மண்டபத்தின் தென் சுவரில் பொறிக்கப்பெற்றிருக்கின்றன. மதுராந்தக பொத்தப்பி சோழன் (சீயகங்கனின் மாமன்) இந்த மண்டபத்தைக் (துகவ மணிவாள் மண்டபம் என்ற கல்வெட்டின் இறுதியில் கூறப் பெறுவது) கட்டினான். மண்டபம் கட்டிய பின்பே கோப்பெருஞ்சிங்கன் கல்வெட்டினைப் பொறித்திருக்க வேண்டும். அதனால் சகலபுவன சக்கரவர்த்தி மூன்றாம்

இராசராசன் இரண்டாம் முறை (கி.பி. 1231-32) சிறைப்பிடித்த பின்பு இக்கல்வெட்டினைப் பொறித்திருக்க வேண்டும். ஏனெனில் இக்கோயிலில் உள்ள மூன்றாம் இராசராசன் கல்வெட்டு கி.பி.1224. அதனால் கல்வெட்டறிக்கை முடிவுப்படி மூன்றாம் இராசராசன் கல்வெட்டு கி.பி. 1221 ஆகும். அவன் சிறை பிடிக்கப்பட்ட ஆண்டிற்குப் பின் மூன்றாம் இராசராசன் இப்பகுதியில் அதிகாரம் இழந்தவனாக இருக்க வேண்டும். மூன்றாம் இராசராசன் கல்வெட்டுகள் தொண்டை நாட்டில் கி.பி. 1245 வரை கிடைக்கின்றன. அதனால் அவன் கி.பி. 1231- ல் சிறை பிடிக்கப்பட்டிருந்தாலும் கோபெருஞ்சிங்கனாக இருக்க வேண்டும்.

சம்புவராயர்கள்

சம்புவராயர்கள் தங்களை கண்ணப்பர் வழி வந்தவர்கள் என்று கூறிக்கொள் வதாலேயே அவர்களை வேட்டுவர் என்று கருகின்றனர். உண்மையில் கண்ணப்பருக்கும், சம்புவராயர்களுக்கும் இடையில் எந்த உறவுமில்லை. தென்னிந்தியாவில் அரசினை உருவாக்கிய தொல்குடிகள் (Lineages) அரியணைக்குத் தகுதியானவர்கள் என்று மற்றவர் களை நம்பவைக்கக் கூறும் தோற்ற மரபு கதைகள் (origin myth) அடிப்படையில் கண்ணப்பர் வரலாறு நாவுக்கரசர் காலம் முதல் வழங்கி வருகின்றது.[71] அல்லது அதற்கு முன்பும் இந்த வரலாறு வழக்கத்திலிருந்திருக்க வேண்டும். சம்புவராயர்கள் முன்னூற்றுப்பள்ளி என்ற மரபிலிருந்து உருவானவர்கள்.[72] சோழர் அரசியலில் படை வீரர்களாகவும், அதிகாரிகளாகவும், எழுச்சி பெற்ற பின் தனி அரசினை உருவாக்கும் நிலைக்கு உயர்ந்தனர். அவ்வாறு உயர்ந்த போது மக்கள் அவர்களை ஏற்றுக்கொள்ளும் வகையில் கண்ணப்பர் குலத்தினர் என்று தங்களைக் கூறிக்கொண்டனர்.

சம்புவராயர்கள் மூன்றாம் குலோத்துங்கன் காலத்தில் சோழப் பேரரசின் கீழிருந்து விடுபட்டு தனியாட்சி நடத்தும் நிலைக்கு உயர்ந்தனர். முதல் குலோத்துங்கனுக்குப் பின் சோழ அரசர்கள் கல்வெட்டுகள் ஏதும் மேல்பாடியில் கிடைக்கவில்லை. தொண்டை மண்டலத்தின் பிற பகுதிகளில் சோழர் கல்வெட்டுகள் கிடைக்கின்றன.

இடைப்பட்ட காலத்தில் மேல்பாடி அரசியல் முக்கியத்துவம் பெறவில்லையோ என்று கருத வேண்டியுள்ளது. சோழர் காலத்தின் முற்பகுதியில் வளம் மிக்க வாணிக நகரக மாகத் திகழ்ந்த மேல்பாடி முதலாம் குலோத்துங்கன் காலத்திற்குப் பின் செல்வாக்கிழந்து (வாணிக வளம் குன்றி) பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்க வேண்டும். அதற்கு பின் மறுபடியும் சம்புவராயர் காலத்தில் மறுமலர்ச்சி பெற்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஊராக எழுச்சி பெற்றிருக்க வேண்டும்.

சம்புவராயர்கள் மிகக்குறுகிய காலமே அரசியல் எழுச்சி பெற்று ஆட்சி செய்திருந்த போதிலும், எழுச்சி மிக்க காலமாக அது விளங்கியது. இரண்டு பெண்ணை ஆறுகளுக்கிடையில் அவர்கள் பொறிப்புகள் இருநூற்றுக்கும் மேல் கிடைக்கின்றன.[73] கல்வெட்டில் பயின்று வரும் செய்திகளும் அந்நாளைய அரசியல், பொருளியல்,

சமூகவியல், சமயவியல் ஆகியவற்றில் உருவான எழுச்சிகள், மாற்றங்கள் முதலியற்றை அறிந்து கொள்ள பல செய்திகளைக் கொண்டு விளங்குகின்றன.

சம்புவராயர்களின் தலைநகரமாக படைவீடு விளங்கியது.[74]போளூருக்கருகில் உள்ள இவ்வூர் மலைகள் சூழ்ந்த இயற்கை அரணுடன் அமைந்திருந்தது. சம்புவராயர்கள் ஆண்ட பகுதிகளில் ஒன்று படை வீட்டு ராஜ்ஜியம்.[75] சம்புவராயர்கள், வாணகோவரையர்கள் ஆகியோர் ஆண்ட காலத்தில் விஜயநகர மன்னன் வீரகம்பண்ணன் தெற்கு நோக்கிப் படையெடுத்து வந்தான். தமிழகத்தில் அவன் முதல் தாக்குதலுக்குள்ளான பகுதி தொண்டை மண்டலமும், படைவீடு கோட்டையும் ஆகும். வீரகம்பண்ணனுக்கும், சம்புவராய மன்னனுக்குமிடையில் நடைபெற்ற போரைப் பற்றியும், வீரகம்பண்ணனின் வெற்றி பற்றியும் மதுரா விஜயத்தில் குறிக்கப்பெற்றுள்ளது.[76] மதுராவிஜயம் என்ற வரலாற்றுக் காவியம் வீரகம்பண்ணனின் மனைவி கங்காதேவியால் எழுதப்பெற்றது.[77] சம்புவராயர்களின் வீழ்ச்சி தொண்டை மண்டலத்தில் விஜயநகரர்களின் ஆட்சி எழுச்சி பெறக்காரணமாயிற்று.

மேல்பாடியில் வென்று மண்கொண்ட சம்புவராயன் (கி.பி. 1322- 39) கல்வெட்டு ஒன்று கிடைத்துள்ளது. இக்கல்வெட்டு இவன் ஆட்சியின் பதினாறாம் ஆட்சியாண்டில் (கி.பி.1338) பொறிக்கப்பெற்றுள்ளது.[78]கல்வெட்டு முற்றுப்பெறவில்லை. விஜயநகர மன்னன் வீர கம்பண்ணன் இப்பகுதியைக் கைப்பற்றும் வரை சம்புவராயர்கள் ஆட்சி தொடர்ந்து நடைபெற்றிருக்கிற வேண்டும்.

விஜய நகரப்பேரரசு

வீரகம்பண்ணன்

புக்கனுடைய மகன் கம்பணன் மதுரை சுல்த்தானியத்தை அழித்தமை அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளுள் மிகவும் குறிப்பிடத்தக்கது. புக்கனுடைய ஆட்சியின் தொடக்கத்திலிருந்தே கம்பணன் பேரரசின் தென் பகுதிக்கு அரசப் பிரதிநிதியாக இருந்தான். புகழ்பெற்ற தளபதிகளான கோபணனும், மங்குசாளுவனும் ஆட்சித்துறையில் அவனுக்குத் துணைபுரிந்தார்கள்.[79] கம்பணன் முதலில் பழைய வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய பகுதிகளில் ஆட்சி செய்து வந்த சம்புவராயர்கள் மீது தன் கவனத்தைச் செலுத்தினான். அவர்களை அடக்கியபின் அவன் மதுரைமீது படையெடுப் பதற்கு அவர்களுடைய துணையையும் பெற்றான். மதுரையை பிடிப்பதற்குக் கம்பணன் செய்த போரைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெரியவில்லை. ஆனால் அவனுடைய மனைவி கங்காதேவி எழுதிய ''மதுரா விஜயம்'' (மதுரை வெற்றி) என்னும் வடமொழிக் காவியத்தில் அவனுடைய மதுரைப் போரைப்பற்றிய செய்திகள் காப்பிய இயல்புகளுடன் தரப்பட்டிருக்கின்றன. சம்புவராயர்களை அடக்கியபின் கம்பணன் காஞ்சீபுரத்தில் தங்கியிருந்தபோது முஸ்லீம் ஆட்சியில் பாண்டிய நாடு அடைந்திருந்த இரங்கத்தக்க

நிலையை அந்நாட்டுத் தெய்வம் அவனுக்கு எடுத்துக்கூறியது மட்டுமின்றி அகத்தியன் அனுப்பிய வாள் ஒன்றினையும் அவனுக்கு கொடுத்ததாக அவன் கனவு கண்டான் என்று மதுரா விஜயம் கூறுகிறது.[80] அந்த வாள் பாண்டிய அரசின் சின்னம். அதனைக் கையிலேந்தி அரசோச்சும் தகுதியைப் பாண்டியர்கள் இழந்துவிட்டார்கள். பாண்டியர்கள் தங்கள் நாட்டை முஸ்லீம் ஆட்சியிலிருந்து மீட்க முடியாத நிலையில் இருந்ததால்தான் கம்பணன் அந்தப் பணியை மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்த வரலாற்று நிகழ்ச்சி கி.பி.1365-ல் இருந்து 1370-க்குள் நடைபெற்றது.[81] முஸ்லீம்களின் படையெடுப்புகள் நிகழ்ந்த காலத்தில் அவர்கள் கையில் அகப்படாமல் இருப்பதற்காகச் சீரங்கத்திலிருந்து எடுத்துக்கொண்டு போகப்பட்ட அரங்கநாதருடைய உருவச்சிலை 1371-ஆம் ஆண்டில் மீண்டும் சீரங்கத்தில் நிறுவப்பட்டது. கம்பணன் 1374-ல் இறந்தான்.[82]

வீரக்ம்பணின் கல்வெட்டு ஒன்று மேல்பாடியில் உள்ளது. அக்கல்வெட்டில் ஆட்சி ஆண்டு கூறப்பெறவில்லை.[83]

இரண்டாம் ஹரிஹரன்

முதலாம் புக்கனுக்குப் பின் அவனுடைய மகன் இரண்டாம் ஹரிஹரன் பட்டத்துக்கு வந்தான். அவன் கி.பி. 1377 முதல் 1404 வரையில் இருபத்தேழாண்டு ஆட்சிபுரிந்தான். அவன் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்தை தென்னிந்தியா முழுவதிலும் நிலை ந்ாட்டினான்.[84] மாதவரின் உடன் பிறந்தவரும், மிகவும் புகழ் பெற்றவருமாகிய சாயனச்சாரியர் ஹரிஹரனுடைய முதலமைச்சராயிருந்தார். ஹரிஹரன் தன்னுடைய சிற்றப்பன், பெரியப்பனுடைய மக்களுக்குப் பதிலாகத் தன்னுடைய மக்களையே மாகாண ஆளுநர்களாக நியமித்தான். அவ்வாறு தான் தேவராயன் உதயகிரி ஆளுநன் ஆனான். சற்றுத் தள்ளிய உறவினர்கள் மாகாண ஆளுநர்களாயிருந்தால் அவர்களுக்கு அரச பதவியின் மேல் ஆசை தோன்றக்கூடும். அது பேரரசின் சிதைவுக்குக் காரணமாகலாம். அத்தகையதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பது ஹரிஹரனுடைய நோக்கம்.

இம்மன்னுடைய கல்வெட்டு ஒன்று மேல்பாடியில் கிடைக்கின்றது. அக்கல்வெட்டு சக ஆண்டு 1321(கி.பி.1399)-ல் பொறிக்கப்பெற்றது.[85]

கிருஷ்ணதேவராயர்

கிருஷ்ணதேவராயருடைய முதற் பொறிப்பில் குறிக்கப்பட்டுள்ள தேதி 1509 ஜூலை 26 என்பது. அதற்குப்பின் இரு வாரங்கழித்து அவன் கிருஷ்ண ஜயந்தியன்று முடிசூட்டிக் கொண்டான். அரசன் திருமாலின் அவதாரம் என்ற எண்ணத்தை உண்டாக்குவது அவன் நோக்கம். கிஷ்ணதேவராயனுடைய ஆட்சிக்காலம்'' விஜயநகரத்தின் மிகச் சிறந்த காலம்; அப்போது அந்தப் பேரரசின் படைகள் சென்ற இடமெல்லாம் வெற்றி டெற்றன. அந்தக் காலத்தில் தலைநகரம் மிகச்செழித்த வளமுடையதாயிருந்தது.'' கிருஷ்ணதேவராயன்

அரியணையேறிய போது அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும் பத்தாண்டுக்குப்பின் கிருஷ்ணதேவராயனைப் பார்த்த பேயிஸ் பின்வருமாறு கூறுகிறார்.

''அரசன் நடு உயரமும் சிகப்பு நிறமும் அழகிய தோற்றமும் உடையவன். அவன் சிறிது தடித்திருக்கிறான் என்றே கூறவேண்டும். அவனுடைய முகத்தில் அம்மை வடுக்கள் அஞ்சக்கூடும் என்று நாம் கருதலாமோ, அவ்வளவு அதிகமாக இருந்தன. அவனைக் காணும் மக்கள் அஞ்சுகின்றார்கள். அதுபோலவே அவன் எல்லா வகையிலும் குறைபாடற்ற வனாக இருக்கின்றான். அவன் இனிய இயல்புடையவனாகவும், எப்போதும் களி மகிழ்வார்ந்தவனாகவும் இருக்கின்றான். அவன் வெளிநாட்டாரை வரவேற்று அவர்களை மதித்து நடக்கின்றான். அவர்கள் எந்த நிலையில் இருப்பவர்களாயினும் அவர்களுடன் இனிமையாகப்பேசி அவர்களைப் பற்றிய செய்திகள் அனைத்தையும் விசாரிக்கிறான். அவன் ஒரு பெரிய அரசன்; நீதி நெறி வழுவாதவன்; ஆனால் அவனுக்குத் திடீர் திடீரென்று அடக்கமுடியாத கோபம் வந்துவிடும். அவன் கடுமையான உடற்பயிற்சியின் மூலம் தன்னுடைய உடல் வலிமையைக் காத்துக்கொண்டான். குதிரையேற்றத்தில் அவன் வல்லவன்; காண்போர் களிக்கும் கம்பீரமான தோற்றமுடையவன்; தானே போர்க்களம் புகுந்து தன் போர் வீரர்களுக்குத் தலைமை தாங்கி நடத்துவதில் விருப்பமுடைவன்; ஆபத்தைக் கண்டு அஞ்சாத வீரமும், தளராத ஊக்கமும் உடையவன்.''[86]

தன்னுடைய போர் வீர்கள் எலலாரிடத்திலும் அவன் அன்புடையவன்; அவர்கள் நலத்தில் எப்போதும் கவனமுடையவன். ஒவ்வொரு சண்டைக்குப் பின்னும் காயமடைந்வர்களைப் பார்த்து அவர்களுக்குத் தேவையான மருத்துவத்திற்கு ஏற்பாடு செய்வதற்கு அவன் தவறமாட்டான். அவனை அனைவரும் மதித்து அன்பு பாராட்டினார்கள். பேயிஸ் கூறுவதைப் போல் அவன் ''எல்லாரிடமும் நட்பும், நயமுடையவனாயும் எல்லா வகையிலும் குறைபாடற்றவனாயும்''இருந்தான். பத்தே ஆண்டுகளுக்குள் கிருஷ்ண தேவராயன் விஜயநகரத்தின் ஆதிக்கத்தை நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் உறுதியாக நிலைநாட்டிவிட்டான். அவனுடைய பரந்த ராஜ்ஜியத்தில் அவனை எதிர்க்க நினைப்பவர் யாரும் இலர்.[87]

கிருஷ்ணதேவராயன் ஒப்புயர்வற்ற போர்த்திறமை பெற்றிருந்தது மட்டுமின்றி அரசியல் நயத்திறத்திலும் நிர்வாகத் திறமையிலும் மிக உயர்ந்த இடத்தை வகித்தான். அதுபோலவே, கவின் கலைகளிலும் அவன் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்ததால், அவற்றிற்குப் பேராதரவு தந்தான். வெளிநாட்டிலிருந்து வந்த பலர் விஜயநகரத்தின் பேரழகையும், கம்பீரமான தோற்றத்தையும் கண்டு உள்ளக் கிளர்ச்சியடைந்தனர். அதனால், அவர்கள் அவனைப் பலவாறு புகழ்ந்து வியந்து பாராட்டினார்கள். அந்த நகரத்தின் செல்வச் செழிப்பையும், அவனுடைய போர் வலிமையையும் அங்கு நடைபெற்ற விழாக்களையும், அதற்காரசனாயிருந்த கிருஷ்ணதேவராயனுடைய வீரத்தையும் அவர்கள் மிகவும் புகழ்ந்து பாராட்டியிருக்கிறார்கள்.

தென்னிந்தியா முழுவதும் கிருஷ்ணதேவராயனுடைய ஆட்சியில் இருந்தது. பங்காப்பூர், கெர்சப்பா, பட்கல் முதலிய இடங்களில் ஓரளவு சுதந்திரமாக ஆட்சி செய்து வந்த சிறறசர்கள் அவனுடைய மேலாதிக்கத்தை ஏற்றுக் கொண்டார்கள்.[88] பேரரசு அவனுடைய நேர் ஆட்சியில் இருந்த போதிலும், அதனுடைய பல்வேறு மாகாணங் களிலும் ஆளுநர்களாய் பணியாற்றிய தளபதிகள் நடைமுறையில் ஏறக்குறைய சுயேச்சை யாகவே தங்களுடைய ஆட்சியை நடத்தி வந்தார்கள். அவர்கள் குறிப்பிட்ட எண்ணிக்கை யுள்ள காலாட் படையினர், குதிரைப்படையினர், யானைப் படையினர் ஆகியவர்களைக் கொண்ட ஒரு படைப்பிரிவை எந்த நேரத்திலும் ஆயத்த நிலையில் வைத்திருக்க வேண்டும். அவன் கல்வி கேள்விகளிற் சிறந்தவன். அவனே ஒரு கவிஞன். ''ஆமுக்த மால்யதா'' என்னும் கவிதை நூல் அவன் எழுதிய ஒன்று என்று சொல்லப்படுகிறது. அரசன் கடைப்பிடித்த ஆட்சி முறையின் அடிப்படைக் கொள்கைகளின் விளக்கம் அந்த நூலில் ஏனைய செய்திகளோடு இடம் பெறுகிறது.[89] புகழ்மிக்க தெலுங்குக் கவிஞர் அல்லசாணி பெத்தன்னா அரசவைக் கவிஞராக இருந்து கிருஷ்ணதேவராயனுடைய அவைக்கு அணி செய்தார். தகுதியறிந்து பரிசில் வழங்கும் அவனுடைய வல்லமை நாடு முழுதுமிருந்த தலைசிறந்த புலவர்கள் பலரை அவனுடைய அவைக்கு ஈர்த்தது. அதனால் அவனுடைய புகழ் மேலும் மேலும் ஓங்கியது. ''அவனுடைய சமயப் பற்றும், மதக் காழ்ப்பின்மையும் ஏனைய துறைகளில் அவனடைந்த புகழுக்கு ஒத்த புகழை அவனுக்கு அளித்தன.''[90]

அவனுக்கு வைணவத்தில் மிகுந்த பற்று இருந்தது என்பது உண்மையே.எனினும், இந்து மதத்தின் ஏனைய பிரிவுகளையும் அவன் சமமாக மதித்து நடந்தான்.

கிருஷ்ணதேவராயன் பல கட்டடங்களைக் கட்டி, தலைநகரின் வசதியையும், அழகையும் பெருக்கினான். தன்னுடைய ஆட்சியின் தொடக்கத்தில் அவன் விருபாட்சர் கோயிலில் ஒரு பழைய கோபுரத்தைப் பழுதுபார்த்ததோடு ஒரு புதிய கோபுரத்தையும் கட்டினான். 1513 -ல் கிருஷ்ணசாமி கோயிலொன்றைக் கட்டி உதயகிரியிலிருந்து எடுத்துக் கொண்டு வந்த பாலகிருஷ்ண விக்கிரகத்தை அதில் எழுந்தருளச் செய்தான்.[91] கோவாவில் ஆளுநர் முதல்வர்(கவர்னர்- ஜெனரல்) இசைவின் பேரில், அங்கிருந்த போர்ச்சுக்கீசியப் பொறியியல் வல்லுநன் ஒருவனை விஜயநகரத்துக்கு வரவழைத்து அவனுடைய உதவியால் விஜயநகரத்தை சுற்றியிருந்த புன்செய் நிலங்களின் பாசன வசதியை கிருஷ்ணதேவராயன் பெருக்கினான். தலைநகரின் தென்புறத்தில் அழகிய புறநகர் ஒன்றை நிர்மாணித்து அதற்குத் தன்னுடைய தாயாரான நாகலாதேவியின் நினைவாக நாகலாபுரம் என்று பெயரிட்டான்.[92]

அந்த நகரத்திற்குத் தேவையான தண்ணீர் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து வந்தது. அந்தத் தொட்டியை விஜயநகரத்திற்குத் தாம் சென்றிருந்த போது கட்டிக்கொண்டிருந்தார்கள் என்று பேயிஸ் கூறுகிறார்.[93] நதிக்கரையிலிருந்த விட்டலாசாமியின் கோயிலுக்குக் கிருஷ்ணதேவராயன் புதிய ஒப்பனை செய்தான்.

விஜயநகர கட்டடக் கலையின் ஒப்பனை நயவளத்தினுடைய உச்ச நிலையை அந்தக் கோயிலிலிருந்து நாம் காண்கிறோம். அந்த அழகுபடுத்தும் பணி கிருஷ்ணதேவராயன் இறந்த பின்னும் பல ஆண்டு தொடர்ந்து நடைபெற்றது. 1565-ஆம் ஆண்டில் முஸ்லீம்கள் விஜயநகரத்தைத் தகர்த்தெறியும் வரையிலும் அந்த வேலை தொடர்ந்து நடந்ததென்று நாம் கருதலாம். கிருஷ்ணசாமி கோயிலின் தென்மேற்குக் கோணத்திற்கருகில் இருந்த ஒரு பாறையைச் செதுக்கி உருவாக்கிய மிகப் பெரிய நரசிம்மச் சிலை கிருஷ்ணதேவராயன் ஆட்சிக்காலத்தைச் சேர்ந்த கடைசித் தொல்பொருட் சின்னங்களுள் ஒன்றாக இருக்கிறது[94] (1528). அது பல சிதைவுகளுக்குள்ளாகிய போதிலும் விஜயநகரத்தின் இடிபாடுகளுள் நம் கவனத்தைப் பெரிதும் கவருகின்ற ஒரு கலைச்சின்னமாக இன்னும் திகழ்கிறது.

அடிக்குறிப்புகள்

1. M.S. Govindasamy, The Role of the Feudatories in the Pallava History, P. 1.
2. ஆர். பூங்குன்றன், தொல்குடி-வேளிர்-அரசியல், ப. 107
3. மேலது, ப. 106.
4. M.S. Govindasamy, Op. Cit, PP. 3-4
5. Ibid. P. 1-2
6. Ibid. P. 2
7. Ibid.
8. Ibid. P. 3
9. Ibid.
10. ஆர். பூங்குன்றன், முன்.கு.நூ, ப. 107
11. M.S. Govindasamy, Op. Cit, P. 4
12. Ibid. P. 5
13. Ibid. P.
14. Ibid. PP. 7-8
15. Ibid. P. 10
16. Ibid. P.
17. Ibid. P. 13
18. Ibid.
19. Ibid. P. 14

20. Ibid. P. 23

21. Ibid. PP. 24-25

22. S.I.I. Vol. III, No.16

23. S.I.I. Vol. III, No.89

24. கொங்குதேச இராஜாக்கள், ப. 10.

25. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்கால சோழர் வரலாறு, ப. 32.

26. மேலது

27. மேலது, ப. 34.

28. மேலது, பக். 34-35.

29. S. Swaminathan, The Early Cholas History, Art and Culture. P. 34

30. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், முன். கு. நூ. ப. 36.

31. ARE 286 of 1906

32. S.I.I. Vol. III, No.142

33. S. Swaminathan, Op. Cit PP. 31-33.

34. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், முன். கு. நூ. ப. 34.

35. மேலது

36. மேலது, பக். 38-39.

37. மேலது, ப. 40.

38. மேலது, ப. 41.

39. மேலது, ப. 42.

40. மேலது, ப. 45.

41. S.R. Balasubrahmaniyam, Early Chola Temples, P. 270.

42. S. Swaminathan, Op. Cit P. 53-54

43. S.I.I. Vol. III, No.205

44. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், முன். கு. நூ. ப. 34.

45. S. Swaminathan, Op. Cit P. 59-60

46. E.I. Vol. IV, P. 281

47. S.I.I. Vol. III, No.15

48. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், முன். கு. நூ. ப. 97.

49. மேலது

50. மேலது

51. மேலது, ப. 266

52. S.I.I. Vol. III, No.982

53. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், முன். கு. நூ. ப. 145.

54. மேலது, பக். 146-147.

55. மேலது, ப.156.

56. மேலது, ப. 169

57. மேலது, ப. 146

58. S.I.I. Vol. III, No.205

59. S.I.I. Vol. III, No.20

60. S.I.I. Vol. III, No.18

61. ARE, 408 of 192

62. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், முன். கு. நூ. பகுதி II, ப. 5

63. மேலது, ப. 7

64. மேலது, ப. 10

65. திரு. க. குழந்தைவேலன், (சி.நி. கல்வெட்டாய்வாளர், (ப.நி.) சென்னை.) உரையாடல்

66. M.S. Govindasamy, The role of the Feudatories in Later Chola History, PP. 125-26

67. பின்னிணைப்பு

68. M.S. Govindasamy, The role of the Feudatories in Later Chola History, PP. 125-26

69. பின்னிணைப்பு

70. ஆர். பூங்குன்றன், முன்.கு.நூ, ப. 104

71. திருநாவுக்கரசர் தேவாரம், திருவாரூர்ப் பதிகம்

72. கோ. தங்கவேலு, தியாகராஜன், சம்புவராயர் வரலாறு, ப. 9

73. மேலது, ப. 4

74. மேலது, ப. 20

75. மேலது, ப. 103

76. மேலது, ப. 78

77. கே.ஏ.நீலகண்டசாஸ்திரியார், தென்னிந்திய வரலாறு, முதல் பகுதி, ப. 417

78. பின்னிணைப்பு

79. கே.ஏ.நீலகண்டசாஸ்திரியார், முன். கு. நூ, ப. 416

80. மேலது. ப. 417

81. மேலது

82. மேலது

83. பின்னிணைப்பு

84. கே.ஏ.நீலகண்டசாஸ்திரியார், முன்.கு.நூ. ப. 417

85. பின்னிணைப்பு

86. கே.ஏ.நீலகண்டசாஸ்திரியார், முன். கு. நூ. ப. 436

87. மேலது. ப. 437

88. மேலது

89. மேலது

90. மேலது

91. மேலது. ப. 448

92. மேலது

93. மேலது

94. மேலது

அரசியல் பூகோளம்

பாடி

பாடி என்ற சொல் எல்லாத் திராவிட மொழிகளிலும் பயின்று வரக்காணலாம். இம்மொழிகளில் பாடி என்ற சொல் முல்லை நிலத்திலுள்ள ஊரினையும், சிற்றூர்களையும் குறித்து வந்தது. குடகு மொழியில் குறும்பர்களுடைய வீட்டினைப் ''பாடி'' என்று கூறுவதைக் காண்கிறோம். ''பாடி'' என்ற சொல் ''படு'' என்ற பகுதியின் அடியாக வந்தது. அதனால் விலங்கு துயிலிடம் என்ற பொருளில் தொடக்கத்தில் வழங்கப்பட்டிருக்கலாம் என்று கருதுவர். முல்லை நிலம் மிகுந்திருந்த பகுதியில் நாட்டினைக் குறிப்பதற்குப் பாடி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. வாணகோப்பாடி, சிந்தகப்பாடி போன்ற பெயர்களைச் சான்றுக்குக் கூறலாம். இப்பெயர்கள் அனைத்தும் முல்லை நிலம் மிகுதியாக இருந்த பகுதியில் பயின்று வருகின்றன.[1] இப்பெயர்களில் குறிப்பிடத்தக்க மற்றொரு அம்சம் குலப் பெயர் (Lineage) களுடன் அமைந்திருப்பதாகும். பெரும்பாணரைசர் பெயரால் பெரும்பாணப்பாடி என்ற பெயர் வந்தது.[2]

பாடி என்ற பிரிவு தொண்டை மண்டலத்து கோட்டம் என்ற பிரிவோடு ஒப்பிடத்தக்கதாய் உள்ளது. மேல்பாடியில் பெரும்பாணப்பாடி என்ற ஒரு பிரிவு குறிப்பிடப்படுகிறது. இப்பெயர் பெரும்பாணர் என்ற குடிப்பெயருடன் தொடர்புடையது. இதுபோன்றே நுளம்பாடி (நுளம்பர்), வாணகோப்பாடி (வாணகோகள்), திருமுனைப்பாடி (முனையதரையர்), வேசாலிப்பாடி, (வேசாலியர்), இரட்டபாடி (இரட்டர்), கங்கபாடி (கங்கர்) ஆகிய பெயர்கள் கல்வெட்டுகளில் பயின்று வருகின்றன.[3] இப்பெயர்கள் பண்டைக் காலத்தில் அந்தந்த பகுதிகளில் வாழ்ந்த முல்லைக் குடிகளின் பெயர்கள். இக்குடிகள் ஆடு, மாடுகளை மேய்த்துக் கொண்டு குறிப்பிட்ட பாடி எல்லைக்குள் குடிபெயர்ந்து மேய்ச்சல் புல் நிறைந்த பகுதிகளில் மாட்டுப்பட்டிகளை அமைத்து சிறிது காலம் தங்கி மேய்ச்சல் நிலம் வேண்டிக் குடிபெயர்ந்தனர். பாடி எல்லைக்குட்பட்ட நிலப்பகுதி முழுவதும் மேய்ச்சல் நிலம் வேண்டி குடிபெயர்ந்து கொண்டேயிருந்தனர். சோழர்கள் முல்லை நிலப்பகுதிகளைத் தங்கள் ஆதிக்கத்தில் கொண்டு வந்தபோது அந்தந்த குடிப்பெயர்களாலேயே அப்பகுதிகளை அழைத்தனர்.

கோட்டம்

தொண்டை மண்டலத்தில் உட்கிடை அரசியல் பூகோளம் பிரிவுகளுக்குக் ''கோட்டம்'' என்று பெயர். கோட்டம் என்ற பெயர் பல்லவர் வருகைக்கு முன்பே இருந்தது. இப்பெயர் ''கோடு'' என்ற வேர்ச் சொல்லிலிருந்து வந்தது என்றும் ''கோஷ்டம்'' என்ற சொல்லின் திரிபென்றும் இரு கருத்துக்கள் உள்ளன.[4] முன் கருத்துக்கு ஆதரவாகத் தொண்டை மண்டலத்துப் புவியியல் அமைப்பினைச் சான்றாகக் கூறுவர். ''கோடு'' என்பதற்குக் குன்றின் உச்சி என்றும், தரைப்பகுதியில மேடான பகுதி என்றும் கொண்டு ''கோட்டம்'' என்று பெயர் உருவாவதற்கு இதுவே காரணம் என்பர்.[5] மற்றொரு சாரார் கோஷ்டம் என்ற வட சொல்லிற்கு ''மாட்டுப்பட்டி'' என்று பொருள் கொண்டு தொண்டை மண்டலத்தில் முல்லை வாழ்க்கை மிகுந்திருந்தமையால் இப்பெயர் வந்தது என்பர்.[6]

கோஷ்டம் என்ற வடசொல்லிற்கு ''மேய்ச்சல் நிலம்'' என்ற பொருளும் உண்டு.[7] குறிப்பிட்ட ஊருக்குரிய(அ) குழுவிற்குரிய மேய்ச்சல் நிலம் என்ற பொருளில் கோஷ்டம் என்ற சொல் தொண்டை மண்டல நாட்டுப் பிரிவுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். எது எப்படியிருந்த போதிலும் ''கோட்டம்'' என்ற பெயர் கால்நடை வளர்ப்புடன் தொடர்புடையது என்பது மறுக்க முடியாத உண்மை.

கோட்டம் என்ற பிரிவினை ஆளுவதற்குக் ''கோட்டத்தார்'' என்ற சபையினர் இருந்துள்ளனர். கந்த சிஷ்யன் அளித்த இராயக்கோட்டை செப்பேட்டில் அரசாணை நாட்டார்க்கு மட்டுமன்றி கோட்டத்தார்க்கும் அளிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.[8]

நிலம் பற்றிய அரசாணை நாட்டார்க்கு மட்டும் கொடுப்பது வழக்கம். ஆனால் இராயக்கோட்டை செப்பேட்டில் ஆணை கோட்டத்தார்க்கும் அளிக்கப்படுகின்றது. கால்நடை வளர்ப்பு சமூகத்தில் உருவான கோட்டத்தார்க்கும் அளிக்கப்படுகின்றது. கால்நடை வளர்ப்பு சமூகத்தில் உருவான கோட்டத்தாரை அத்தொழில் மிக்கிருந்த பகுதியில் நாட்டார்களுக்குச் சமமாகக் கருதினர் என்பது இதனால் புலப்படும். செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள படூரில் உள்ள மூன்றாம் நந்திவர்மன் கல்வெட்டு ''ஆமூர்க் கோட்டத்துக் கோட்ட மன்றாடிகள்'' என்று கூறுகின்றது.[9] மன்றாடிகள் என்ற சொல் கால்நடை வளர்ப்பவர்களையும், நீதிபதிகளையும் குறித்து வந்தது.[10] கோட்டத்தோடு இப்பெயர் சேர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. இது பெரும்பாலும் நாட்டுச் சபையைப் போன்றமைந்த கோட்டச் சபையாகலாம். கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து இச்சபை இருந்துள்ளது. ஆனால் கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து இச்சபையின் செல்வாக்குக் குறைந்துபோயிற்று. வேளாண் மக்களின் ஆதிக்கம் மேலோங்கியது.

மேல்பாடிக் கல்வெட்டுகளில் படுவூர்க்கோட்டம், தாமற்கோட்டம் ஆகிய கோட்டங்கள் குறிக்கப்படுகின்றது. மேல்பாடி எந்தக் கோட்டத்திலும் இடம்பெறவில்லை. அது பெருப்பாணப்பாடியைச் சேர்ந்த ஊராக விளங்கியது.

நாடு

ஈரோட்டுப் பள்ளி கொண்ட பெருமாள் கோயிலில் கிடைத்த செப்பேட்டில், (இரவிகோதை காலத்தைச் சேர்ந்தது) ''நாடு'' என்பது வேளாண் நிலம் என்ற பொருளில் ஆளப்பெற்றது.[11] இரவிகோதையிடம் ஒருவன் ''எனக்கு நாடு வேண்டும்'' என்று கேட்கிறான். இங்கு ''நாடு''என்பது பயிர் செய்யும் வேளாண் நிலத்தைக் குறிக்கும். இது சங்க காலத்திலிருந்து உருவான போக்கு. பட்டினப்பாலையில் ''காடு கொன்று நாடாக்கி'' என்று கூறுவதைப் பார்க்கின்றோம்.[12] புறநானூற்றில் குன்று, மலை, காடு, நாடு என்று கூறுவதைப் பார்க்கிறோம். இவ்விடங்களில் ''நாடு'' என்பதற்கு வேளாண்மை நிலம் என்று பொருள்படும். இந்தப் பொருள் கொங்கு நாட்டில் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் பயின்று வந்துள்ளது என்பது புலப்படும். பழஞ்சொற்கள் சமூக மாற்றங்கள் ஏற்பட்ட பின்னும் வழக்கத்தில் இருந்துள்ளன.

தமிழகத்தில் நாட்டுப் பிரிவுகள் உருவான தன்மை பற்றி விரிவாக ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. பேராசிரியர் ஏ. சுப்பராயலு தான் எழுதிய ''சோழ மண்டலத்து அரசியல் புவியியல்'' என்ற நூலில் நாடு உருவான முறை பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். இவ்வாய்வு பின்னாளில் உருவாகும் ஆய்வுகளுக்கு அடிப்படையாக அமைந்திருக்கின்றது அவர் கருத்துப்படி சங்க காலத்திலேயே நாடு என்பது வேளாண்மையை அடிப்படையாகக் கொண்டு உருவாயிற்று.[13] அது காடழித்துத் திருத்தப் பெற்ற நிலப்பகுதி என்ற பொருள்பட நின்றது.

நாடு என்பது பற்றி பேராசியர் சுப்பராயலு அவர்கள் கூறுவது எடுத்துக்காட்டத் தக்கது. நாடு என்பது ஒரு குறிப்பிடட நிலப்பரப்பு என்று கொள்வதைக் காட்டிலும் வேறு பொருள் கொண்டு விளங்கியது. சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு நாடு பற்றிக் கூறுவது எடுத்துக்காட்டத்தக்கது. சேர மன்னனைப் பாடும் புலவர் ஒருவர் குன்று என்பது நாடு, குன்று, மலை, காடு என்பவற்றிலிருந்து வேறுபட்டு விளங்குகின்றது. இங்கு நாடு என்பது நாகரிகம் பெற்றதும், மக்கள் வாழ்வதுமான பகுதி என்று பொருள்படுகின்றது. மேலும் பட்டினப்பாலையில் ''காடு கொன்று நாடாக்கி'' என்று கூறப்பெறுவதும் எடுத்துக் காட்டத்தக்கது. இந்தச் சான்றுகள் நாடு என்பது வேளாண் நிலம் என்ற பொருளிலும், வேளாண்மையில் ஈடுபடுவோர் பகுதி என்ற பொருளிலும் வழங்கியது. இதனுடைய உருவாக்கம் வேளாண்மைக்குகந்த இயற்கை வளம் மிக்க பகுதிகளில் அமைந்திருந்தது. அந்த நாட்டிற்குள் வாழும் வேளாளர்கள் தங்களுக்குள் ஒரு சபை வைத்திருந்தனர். அதுவே நாட்டுச் சபை. ஆனால் கல்வெட்டுகளில் ''நாடு'' என்ற சொல் பிரிவின் புவியியலையும், நாட்டுச் சபையையும் குறித்தது. பல்லவர் காலத்திலிருந்து இந்தப் போக்கு உருவாகிவிட்டது.[14]

மேல்பாடிக் கல்வெட்டுகளில் தூய்நாடு, கரிவேடு நாடு, ஒழுகை நாடு, நெடி நாடு, புலியூர் நாடு, ஏரி கீழ்நாடு, மருதாடு நாடு ஆகிய நாடுகள் குறிக்கப் பெறுகின்றன. மேல்பாடி

தூய்நாட்டைச் சார்ந்த ஊராக விளங்கியது. மேலும் சோழ மண்டலத்தைச் சேர்ந்த நென்மலி நாடு, பாம்புணிக் கூற்றம் ஆகிய நாடுகள் குறிக்கப் பெறுகின்றன. கூற்றம் என்பதும், நாடு என்பதும் ஒரே பொருளில் வழங்கப்பெற்றவை என்பது பேராசியர் சுப்பராயலு அவர்கள் கருத்து.[15]

வளநாடு

முதலாம் இராசராசன் காலத்தில் வளநாடு என்ற அரசியல் பூகோளப் பிரிவு உருவாக்கப் பெற்றது. இந்தப் பிரிவு மண்டலம் என்ற பிரிவுக்கும், நாடு என்ற பிரிவுக்கும் இடையில் வைத்துக் கூறப்பெற்றது. வளநாடு என்ற பிரிவிற்குள் சில நாடுகள் அடக்கப் பெற்றிருக்கும்.[16] வளநாடு என்ற பிரிவு நாடு முழுவதிலும் நில அளவு செய்தபோது உருவாக்கப் பெற்றது. வளநாட்டின் தலைமைப் பொறுப்பில் இருந்தவர்கள் அப்பகுதி நிலவருவாய்க்கும் பொறுப்பானவர்களாக விளங்கினர். தனியூர்கள் பற்றிய கல்வெட்டுக் குறிப்புகள், அவை வளநாட்டுடன் தொடர்புப்படுத்திக் கூறப்பெறுகின்றனவே ஒழிய, நாட்டுடன் தொடர்புப்படுத்திக் கூறப்பெறவில்லை.[17]

மேல்பாடிக் கல்வெட்டுகளில் நித்தவினோத வளநாடு, ஷத்திரிய சிகாமணி வளநாடு, அருள்மொழி தேவ வளநாடு ஆகிய வளநாடுகள் குறிக்கப் பெறுகின்றது. அப்பகுதியி லிருந்து வந்த அரசு அதிகாரிகளைப் பற்றிக் கூறும்போது இப்பிரிவுகள் குறிக்கப் பெறுகின்றன.

இடப்பெயர்கள்

மேல்பாடிக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் இடப்பெயர்களில் பெரும்பாலானவை தொண்ட மண்டலத்தில் அமைந்துள்ள ஊர்களின் பெயர்களாகவே உள்ளன. ஊர்ப்பெயர்கள் பாக்கம், பேடு பாடி, ஊர், இல், மங்கலம், பாலை, புரம், பந்தல் முதலிய பின்னொட்டுகளைப் பெற்று விளங்குகின்றன. அரசூர், சிறுப்பைமூர் (கீழ்பிடாகை), மும்முடி சோழீஸ்வர சருப்பேதி மங்கலம், காஞ்சிக்குறி, அந்தியூர், பாத்தி, ஒழுகையூர், மருதம்பாக்கம், பெரும்பானூர், வேள்பாலை(தென்பிடாகை), பொன்னை, கரை வழிக்காரையாகிய வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலம், கரைவழி, காவனூர், மேல்பாடியான வீர நாராயணபுரம், மேல்பாடியான ராஜாஸ்ரயபுரம், கரிவேடு, வாங்கூர், வாழைப்பந்தல், பல்லவபுரம், சாத்தனூர், சிற்றியம்பாக்கம், பழவூர், கோட்டை, மழிசை, புலிக்குன்றம், குக்கநூர், பாலை நல்லூர், ஏழயலூர், இலுப்பையூர், ஒழுகையில், வாயலூர், கண்ணாடிபுத்தூர், ஆகிய ஊர்கள் குறிக்கப்பெறுகின்றன. ஊர் என்ற பின்னொட்டு சங்க காலத்தில் மருத நிலத்திலிருந்த வாழ்விடத்தைக் குறித்து வந்தது என்பர். ஆனால் பல்லவர் சோழர் காலங்களில் மற்ற திணைகளிலிருந்த வாழ்விடங்களையும் குறித்து வந்ததென்று கருதும் வகையில் இடப்பெயர்கள் கிடைக்கின்றன.

பேடு என்ற பின்னொட்டு வேடு என்று திரிந்து வழங்குவதைக் காணலாம். பேடு என்ற பின்னொட்டு தொண்டை மண்டலத்தில் மட்டும் வழக்கத்திலிருந்தது. இன்றும்

இப்பகுதியில் நூற்றுக்கும் அதிகமான ஊர்களுக்குப் பேடு என்ற பின்னொட்டு வழங்கப்பெறுகின்றது.

பாக்கம்

பாக்கம் என்ற பின்னொட்டு நெய்தல் நிலத்திலிருந்த வாழ்விடங்களுக்கு வழங்கப்பெற்ற பின்னொட்டு,[18] ஆனால் பின்னாளில் மற்ற திணைகளிலிருந்த வாழ்விடங்களுக்கும் வழங்கப்பெற்றது. மேல்பாடி கல்வெட்டுகளில் இப்பெயர் மிகுதியான இடங்களில் பயின்று வருகின்றது.

இல்

இல் என்ற பின்னொட்டு ஒழுகையில் என்ற ஊரைக் குறிக்கும்போது குறிக்கப் பெறுகின்றது. பண்டை நாளில் கள்ளில், பாச்சில் ஆகிய ஊர்கள் குறிக்கப் பெறுகின்றன. இல் என்ற சொல் வீடு, குடும்பம், குலப்பிரிவு, இடம் ஆகிய பொருள்களில் வழங்கப்பெற்றது.[19] பிற திராவிட மொழிகளிலும் இல் என்ற சொல் இதே பொருள்களில் வழங்கப்பெற்றது. இவ்வூர் ஒழுகையூர் என்றும் கல்வெட்டில் குறிக்கப் பெறுகின்றது.

புத்தூர்

புத்தூர் என்ற பின்னொட்டு கண்ணாடிபுத்தூர் என்ற பெயரில் அமைந்துள்ளது. புத்தூர் என்ற பின்னொட்டு இவ்வூர் சோழர் காலத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட வாழ்விடத்தைக் குறித்து வந்தது என்பதைச் சுட்டுகின்றது. சோழர் காலத்தில் காடுகளை அழித்துப் புதிதாக வேளாண்மைக்குக் கொண்டு வந்தனர். அவ்வாறு கொண்டு வரப்பட்ட பகுதிகளில் உருவாக்கப்பட்ட வாழ்விடங்கள் புத்தூர் என்ற பின்னொட்டுடன் அழைக்கப் பெற்றன. தொண்டை மண்டலம், நிகரிலி சோழ மண்டலம், கொங்கு மண்டலம் ஆகிய பகுதிகளில் பல புத்தூர்கள் உருவாக்கப்பெற்றன.[20] கண்ணாடிபுத்தூர் சோழ அரசர்கள் தங்கி நிருவாகம் செய்யுமிடமாகக் கல்வெட்டில் கூறப்பெறுகின்றது. ''கோனேரின்மை கொண்டான்'' என்று தொடங்கும் கல்வெட்டில் கண்ணாடிபுத்தூர் நடுவிட்டீளுள்ளால் ஓலக்க கூடத்துள் நாம் பண்ணுவித்த'' என்று கூறப்பெறுகின்றது.

புரம்

சோழ நாட்டின் மையப்பகுதியான தஞ்சாவூர் பகுதியில் நகரங்கள் பற்றிய குறிப்புகளில் புரம் என்ற விகுதியே அதிகளவில் கிடைத்துள்ளன. புரம் பகுதிகள் அரசன் மற்றும் அரசி, அரசு அதிகாரிகள் பெயர்களையே பெற்றுள்ளன.[21] இப்பகுதியில் இருந்த வணிகக் குடிகள் பெரும் வணிகக்குழுவோடு தொடர்பு கொண்டிருந்தன.

இந்நகரில் குறிப்பிட்ட வணிகத் தொழில் செய்யும் வணிகர்களும், வணிகக் கூட்டத்தோடு பிற கைத்தொழில் செய்யும் மக்களும் சேர்ந்து வசித்திருக்க வேண்டும்.

புரம் பகுதிகளில் **நகரத்தார்** என்ற கூட்டத்தை அதிக அளவு குறிப்பிடாது, மாறாக வியாபாரிகள் என்ற தனிப்பட்ட நபரின் பெயரே அதிகளவு காணப்படுகின்றன.[22] எ.கா. ''கிழார்க் கூற்றத்து பரகேசரிப் புரத்து நகரத்தார், குமாரமார்த்தாண்ட புரத்து வியாபாரி நப்பன்'' போன்றவற்றைக் குறிப்பிடலாம். கிடைத்துள்ள 27 புரம் பகுதிகளில் 24 இல் தனிப்பட்ட நபரின் பெயரோடு வியாபாரி என்ற வணிகச் சொல்லாட்சி முன்னொட்டாக குறிக்கப்பட்டுள்ளன.[23] சில கல்வெட்டுகளில் வணிகக் குழுக்களின் பெயரும் காட்டப் பட்டுள்ளன.[24]

புரம் பகுதிகளில் வியாபாரி என்ற சொல்லாட்சி அதிக அளவில் இடம் பெற்றுள்ளது தெளிவு. எனவே, புரம் பகுதிகளில் மட்டும் இச்சொல்லாட்சி வழக்கத்தில் இருந்துள்ளதும் தெரிய வருகிறது.[25] பிரம்மதேயங்கள் அதிகளவு காணப்படுகின்ற இடங்களில் தான் இவ்வணிகக் குடியேற்றங்களும் இருந்துள்ளன.

அடிக்குறிப்புகள்

1. ஆர். பூங்குன்றன், செங்கம் நடுகற்களில் தொறுப்பூசல், தொல்குடிகள், அரசியல், (எம்.பில்., ஆய்வேடு, பாரதியார் பல்கலைக் கழகம், கோவை1989) ப. 60
2. Y. Subhurayalu, The Political Geography of the Chola Country, P. 72
3. Ibid.
4. Burton Stein, Peassant State and Society in Medieval South India.P. 91
   R. Gopalan, Pallavas of Kanchi PP 147-148
5. R. Gopalan, Pallavas of Kanchi, P. 91
6. Ibid
7. Romila Thapar, From Lineage to State, P. 77
8. பல்லவர் செப்பேடுகள் முப்பது, ப. 106
9. S.I.I. Vol. III, No.54
10. ஆர். பூங்குன்றன், முன்.கு.நூ, ப. 63
11. க. அ. புவனேசுவரி, கொங்கு சோழர். ப. 61
12. பட்டினப்பாலை. வரி. 283
13. Y. Subhurayalu, Op Cit PP. 32-33
14. Ibid. P. 33
15. பின்னிணைப்பு
16. Y. Subhurayalu, op. cit, P. 67
17. Ibid. P. 69

18. Tamil Lexicon, Vol IV. P. 2577

19. Ibid. Vol.I, P. 336

20. க. அ. புவனேசுவரி, அன்னூர் வரலாறு, ப. 98

21. சீ. நீலாவதி, வணிகச் சமூக நகரங்கள், in Kaveri, P. 691

22. Ibid

23. Ibid

24. Ibid

25. Ibid

நிருவாகம்

பண்டைக்காலம் முதல் தொண்டை மண்டலத்தில் பல்வேறு வகையான நிருவாகங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. சங்க காலத்தில் வேளிர் நிருவாகம் நிலை பெற்றிருந்தது. நன்னன் ஆண்ட வேணாடு, இளந்திரையன் ஆண்ட தொண்டை நாடு, நல்லியக் கோடன் ஆண்ட ஓய்மாநாடு ஆகிய வேளிர் ஆட்சி நடைபெற்ற நாடுகள் நிலைபெற்றிருந்தன. வேளிர் ஆட்சியின் நிருவாக அமைப்பு மிகவும் எளிமையானதாக விளங்கியது. கி.பி. 5-6- ஆம் நூற்றாண்டிலிருந்து பல்லவர்கள் இப்பகுதியில் ஆட்சி செய்தனர். அவர்கள் காலத்தில் கோட்டம், நாடு, ஊர் ஆகிய படி நிலைகளில் நிருவாகம் அமைக்கப்பெற்றது. கோட்டம் என்ற பிரிவின் அடிப்படையில் உருவான கோட்டத்தார் சபை இருந்தது. கோட்ட மன்றாடிகள் வைத்திருந்த சபை இருந்தது. நாடு என்ற அரசியல் பூகோளப் பிரிவு நாட்டார் என்ற வேளாளர் சபையாலும், எல்லைப்புறத்தில் குடித்தலைவர்களாலும் நிருவகிக்கப் பெற்றது. தொண்டை மண்டலத்தின் கிழக்குப் பகுதியில் நாட்டார் நிருவாகமும், மேற்குப் பகுதி எல்லையில் குடித்தலைவர் ஆட்சியும் நிலை பெற்றிருந்தது. ஊர் அளவில் நடை பெற்ற நிருவாகம் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை.

சோழர்கால அரசியல் நிருவாகம் பன்முகப்பட்டதாக விளங்கியது. முதலாம் ஆதித்தன் காலம் முதல் அரசு நிருவாகம், உள்ளாட்சி நிருவாகம் என இருவேறு நிருவாக அமைப்புகள் உருவாக்கப்பெற்றன. அரசு நிருவாகத்தில் அரசன், மந்திரி, திருவாய்க் கேள்வி, திருமந்திர ஓலை, திருமந்திரவோலை நாயகம், விடையில் அதிகாரி, உடன்கூட்டம், நடுவிருக்கை புரவுவரித்திணைக்களக் கண்காணி, முகவெட்டி, வரியிலிடு, வரிப்பொத்தகக் கணக்கு, பட்டோலை. ஆகிய அதிகாரிகள் இருந்தனர்.[1]

அரசன் அளிக்கும் ஆணையை ஓலையில் எழுதுபவன் திருமந்திரவோலை. இவ்வாறு எழுதப்பெற்ற ஓலையைப் படித்து ஒப்புதல் அளிப்பவன் ஓலை நாயகம். இந்த ஆணை நிலையான ஆணையாக மாறும்போது தீட்டு என்று அழைக்கப்பெறுகின்றது. விடையில் அதிகாரி என்பவன் ஆணையை நிலையான வரிப்பொத்தகத்தில் எழுத ஆணை யிடுகின்றான். உடன்கூட்டம் என்ற அதிகாரி இந்த ஆணையை வரிப்பொத்தகத்தில் எழுத ஏற்பாடு செய்கிறான். வரிப்பொத்தகத்தில் எழுதும்போதுநடுவிருக்கை, புரவுவரித்திணைக்களக் கண்காணி, வரிப் பொத்தக அதிகாரி, முகவெட்டி, வரிப் பொத்தகக் கணக்கு, பட்டோலை ஆகிய அதிகாரிகள் வரிப்பொத்தகத்தில் எழுதும்போது உடன் நிற்பர்.[2]

நடுவிருக்கையும், ஆணத்தியும் ஒன்று என்று நீலகண்ட சாஸ்திரியார் கருதுகின்றார். தீட்டு எழுதப் பெற்றபின் இந்த ஆணைகள் உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பப் பெறும். அவ்வாறு அனுப்பப்பெறும்போது அதற்கு ஸ்ரீமுகம் அல்லது திருமுகம் என்று பெயர்.[3] அரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கு அனுப்பப்பெறும்போது அந்த ஆணையை நாட்டார் பணிவுடன் வாங்கித் தலைமேல் வைத்துக்கொள்வர். அதன் பிறகே அந்த ஆணையை வாசிப்பார்கள்.

சோழர் நிருவாகத்தோடு தொடர்புடைய வேறு சொற்களும் இங்கு எடுத்துக் காட்டத்தக்கவை. வரிப்பொத்தகம், வரிப்பொத்தகக் கணக்கு ஆகிய சொற்கள் நிலவுரிமை, நிலவரி ஆகியவற்றோடு தொடர்புடையவை. புரவு வரி + திணைக்களம் என்ற சொல் குறிப்பிடத்தக்க சொல்லாகும். இச்சொல்லில் புரவு, வரி, திணைக்களம் ஆகிய மூன்று சொற்கள் கலந்துள்ளன. இவற்றில் புரவு என்பது விளை நிலத்தையும், வரி என்பது நில வரியையும், திணைக்களம் என்பது வரி வாங்கும் அலுவலகத்தையும் குறிக்கும். திணைக்களம் என்ற சொல்லையும் இரண்டாகப் பிரித்துப் பொருள் கொள்ள முடியும்.

திணை என்பது பண்டை நாளில் குடி, குலம், வீடு, ஆகிய பொருளில் விளங்கியது. அதிலும் குடியிலிருந்த உயர்ந்தோர் குழுவைக் (Peer guoup) குறிக்கும் எனலாம்.[4] இக்குழுவினர் குடியிடமிருந்து ஒரு காலத்தில் வாங்கிய காணிக்கையே பின்னாளில் வரியாக மாறியிருக்கலாம். திணைக்குரிய அலுவலகம் என்ற பொருளில் திணைக்களம் என்ற சொல் ஆளப்பட்டிருக்க வேண்டும்.[5] தொடகத்தில் குடிக்குரிய அலுவலகமாக விளங்கிய திணைக்களம் சோழர்கள் ஆட்சி ஏற்பட்டபின் அந்தக் குடியின் பெயரில் உள்ள நாட்டுப் பெயரால் வழங்கப்பெற்றது. தொண்டை நாட்டுப் புரவுவரித் திணைக்களம் என்று கூறுவது இங்கு எடுத்துக்காட்டத்தக்கது.[6]

மேல்பாடிக் கோயில்களில் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் கல்வெட்டுகளில் அரசு நிருவாகம் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன. முதலாம் இசராசன் கல்வெட்டு, மந்திர ஓலை, மந்திர ஓலை நாயகம், தொண்டை நாட்டுப் புரவுவரித் திணைக்கள நாயகம் செய்வார், முகவெட்டி, திணைக்கள கண்காணி ஆகியோர் குறிக்கப்பெறுகின்றனர். முதலாம் இராசராசன் காலத்தில் அரசு அதிகாரியாகச் செயல் பட்டவனே முதலாம் இராசேந்திரன் காலத்திலும் அதிகாரியாக இருந்துள்ளான் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் சோழர்கள் அரசு அதிகாரிகளை வழிவழியாக வந்த குடும்பங் களிலிருந்தே தேர்ந்தெடுத்தார்கள் எனலாம்.[7] உள்ளூர் நிருவாகத்தில் அரசு தலையிடும் போது அரசன் நேரடியாக விசாரிக்கும் நிலையைக் காண்கிறோம்.

மேல்பாடிக் கல்வெட்டுகளில் அரசு அதிகாரிகள் படி நிலைப்பற்றியும், பிரிவுகள் பற்றியும் அறிந்து கொள்ள இரண்டு கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. ''கொனேரின்மை கொண்டான்'' என்று தொடங்கும் கல்வெட்டு வெள்ளாண் வகையிலிருந்து தேவதான இறையிலியாக மாற்றப்பெறும்போது செயலாற்றும் அதிகாரிகள் பற்றிக் குறிப்பிடுகின்றது.

''யாண்டு பதினான்காவது பசான முதல் தேவதானம் இறையிலியாக வரியிலிட்டுக் கொள்க வென்று நாஞ்சொல்ல நம் ஓலை எழுதும் ஆலத்தூர் உடையான் தினகரன் கண்ணப்பனான ராஜகேசரி மூவேந்த வேளான் எழுத்தினாலும் நம் ஓலை நாயகன் சிக்கலுடையான் நகைச்சளான இருமடி சோழ மூவேந்த வேளானும் பருத்திக் குடையான் வேளான்பொன்னம்பலமான சோளேந்திர சிங்கப் பல்லவரையனும் அரசூருடையான் ஈராயிரவன் பல்லவரையனான மும்முடி சோழ போசனும் உறத்தூர் உடையான் அறிஞ்சிகை சத்துரு கெசரியான செம்பியன் பல்லவரையனும் ஒப்பிட்டுப் பகுந்த தீட்டுப்படியே வரியிலிட்டுக் கொள்ள வென்று நாம் சொல்ல நங்கருமமாராய்கின்ற உத்தரங்குடையான் கோன் வீதிவிடங்கனான வில்லவன் மூவேந்த வேளானும், வாயலூர் உடையான் சேவகன் பாளூரான் மீனவன் மூவேந்தன் வேளானுங் கழுமங்கலங்கிழான் சேந்தன் மாதனும் யெழலூர்கிழவன் நந்திரன்னாபரை கேசரி விழுப்பரையனும், நடுவிருக்கும் பயலத்தியம்ப கட்டமே சொல்ல புரவுவரித்திணைக்களம் இலுப்பையூர் கிழவன் வேளான் வெண்காடனும், நெற்குன்றம் உடையான் மனழக் கண்ணன் மிடர் நீக்கியுங், கிளிநல்லூர் கிழவன் கொற்றன் பொற்காரியும், செம்பங்குடையான் பிச்சன் குலமாணிக்கனும், வரிப்பொத்தகம் மணலூர் கிழவன் வீரசோழன் உதையாதி வாகரனும், தொண்டை நாட்டுப் புரவுவரி சாத்தனூர் உடையான் நா.... இறக்கனும், மணற்பாக்கிழான் குன்றன் மாயிலெட்டியும் இருந்து.''[8]

இக்கல்வெட்டு வாசகத்தில் சோழர் கால அரசு நிருவாகத்தில் நிலை பெற்றிருந்த அதிகாரி வகுப்பினை அறிந்து கொள்ளும் செய்திகள் உள்ளன. ஓலை, ஓலைநாயகம், வரியிலிடு, கருமம் - ஆராய்வார், புரவுவரிதிணைக்களம் (அதிகாரி) வரிப்பொத்தகம் (அதிகாரி) தொண்டை நாட்டுப் புரவுவரி (அதிகாரி) முதலிய அதிகாரிகள் குறிக்கப் பெறுகின்றனர். அதிகாரிகள் உடையான், கிழான், கிழவன், வேளான், மூவேந்த வேளான் அரையன் ஆகிய பின்னொட்டுடன் குறிக்கப்பெறுகின்றனர். குறிப்பிட்ட ஊரைச் சொல்லி ஊர் உடையான் என்று கூறப்பெறும்போது வேளான் மூவேந்த வேளான் என்று வேளான் பொறுப்பினைச் சுட்டுவது மூவேந்த வேளான் குறிப்பிட்ட ஊரின் தலைவன் என்று கருதும் வகையில் உடையான் என்று கூறப்பெறுகின்றனர். சோழ அரசு நிருவாகத்தில் வேளான் மூவேந்த வேளான் முழுப்பங்கு வகித்துள்ளனர். இவர்கள் அந்நாளைய வேளாண் மரபிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

உள்ளாட்சியைப் பொறுத்தவரை கோட்டம், நாடு, நகரம், ஊர், சபை, கணிமுற்றூட்டு, வேட்டப்பேறு என ஏழு உள்ளூர் நிருவாக சபைகளைப் பார்க்கின்றோம்.

கோட்டம் என்ற பிரிவுக்கான ஆட்சிக்குழு கோட்ட மன்றாடிகள் சபை என்று அழைக்கப் பெறுகின்றது.[9] கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் கோட்டத்தளவில் ஒரு சபையை வைத்திருந்தனர். வேறு எந்தத் தொழிலைச் செய்தவர்களும் கோட்டத்தளவில் சபையை வைத்திருக்கவில்லை. வேளாண்மை செய்பவர்கள், வாணிகம் செய்பவர்கள், கைவினைத் தொழில் செய்பவர்கள் என்று கூறப்பெற்ற வேறெந்த பிரிவினரும் கோட்ட அளவில் சபை எதையும் வைத்திருக்கவில்லை. ஸ்கந்த சிஷ்யனின் இராயக்கோட்டை செப்பேடுகளில் கோட்டத்தார் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.[10] ஆமூர் கோட்டத்துக் கோட்ட மன்றாடிகள் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது. இக்கல்வெட்டு பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன் காலத்தைச் சேர்ந்தது. அதனால் கோட்ட மன்றாடிகள் கி.பி. 8-ஆம்

நூற்றாண்டிலிருந்து குறிக்கப் பெறுகின்றார்கள் என்று கருதலாம்.[11] அதற்கு முன்பும் அவர்கள் நிருவாகத்தில் செயல்பட்டிருக்க வாய்ப்பு உண்டு.

மேல்பாடி கல்வெட்டுகளில், ''பெரும்பாணப்பாடி கோட்ட மன்றாடிகள்'' என்று குறிக்கப் பெறுகின்றது.[12] சோழர் காலத்தில் தொண்டை மண்டலத்து பகுதிகள் தவிர வேறெந்தப் பகுதியிலும் கோட்ட மன்றாடிகள் அமைப்பு இல்லை என்று கூறலாம். பெரும்பாணப்பாடியில் மட்டும் கோட்ட மன்றாடிகள் இருந்துள்ளனர். அதனால் குலப் பெயரால் உருவான அரசியல் புவியியல் (பெரும்பாணப்பாடி) தொண்டை நாட்டுக் கோட்டப் பிரிவுக்கு சமமாகக் கருதப்பெற்றது எனலாம். பெரும்பாணப்பாடியில் சோழர்கள் ஆட்சி ஏற்பட்ட பின்பும் கால்நடை வளர்ப்பே மேலோங்கி நின்றது என்பது கோட்ட மன்றாடிகள் செல்வாக்கு பெற்றிருந்தமையால் உறுதிப்படுகின்றது. கோட்டம், பாடி, ஆகிய அரசியல் புவியியல் பிரிவுகள் கால்நடை வளர்ப்போடு தொடர்புடையவை.

பெரும்பாணப்பாடி நிலப்பரப்பில் மிகப்பெரியது. கருநாடகம், ஆந்திரம், தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் உள்ள எல்லைப்புறங்களைத் தன்னுள் அடக்கிய பகுதி. இப்பகுதியில் தமிழ், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் எழுதப்பெற்ற கல்வெட்டுகள் மிகவும் கிடைக்கின்றன. வடமொழியில் பெரும்பாணப்பாடி பாண மண்டலம் என்று வழங்கப்பெற்றது. மண்டலம் என்ற அரசியல் புவியியல் பிரிவு சோழர்களுக்கு முன் பெரும்பாண நாட்டைக் குறிப்பதற்குப் பயன்பட்டது.[13] கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து இப்பெயர் வழக்கத்திலிருந்தது.''[14]

கோட்ட மன்றாட்டு

மேல்பாடி கல்வெட்டு ஒன்றில் மன்றாடிகள் ஆடுகளைப் பெற்று அந்த ஆடுகளை அவர்கள் மரபினைச் சேர்ந்த இடையர்களுக்கு அளித்து வளர்க்கச் செய்கின்றனர். ஆடு வளர்க்கும் இடையர்கள் குழுவினைக் குடி என்ற பெயரால் அழைத்துள்ளனர்.[15] ஆடுகளை வளர்ப்போர் குழுவாக வாழ்ந்தனர் என்பதற்கு இந்தக் கல்வெட்டே சிறந்த சான்று. கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் இடையர் என்றும் அம்மக்களிடையில் கோட்ட அளவில் சபையாக இயங்கிய குழுவினை மன்றாடிகள் என்றும் அழைத்தனர்.[16] கோட்ட மன்றாட்டு என்ற சொல் குறிப்பிடத்தக்கது. இச்சொல் கோட்ட அளவில் வைக்கப்பட்டிருந்த மன்றத்தில் ஆட்சியில் பங்கு பெறுவதற்கான கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்த காலம் முதல் அந்தச் சபை மூலமே செயல்பட்டனர்.[17] மன்றாடிகள் சபை கோட்ட அளவில் மட்டுமே செயல்பட்டது நாடு அளவில் செயல்படவில்லை. நாட்டுக் கோட்ட மன்றாடிகள் என்று சில கல்வெட்டுகள் குறிப்பிட்டாலும் குறிப்பிட்ட நாட்டுப் பிரிவில் வசிக்கின்ற கோட்ட மன்றாடிகள் என்பதைக் குறிக்கவே இந்தச் சொல்லாட்சி உருவாயிற்று. மன்றாடிகள் கால்நடை மேய்ப்பர்களில் உயர் நிலையிலிருந்து குழுவினர் ஒவ்வொரு ஊரில் மன்றாடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும். அவர்கள் அளிக்கின்ற எந்த ஒரு

நிருவாக ஆணையும் கோட்ட மன்றாடிகள் பெயரில் வெளியிடப்பெற்றது. மன்றாடிகள் கால்நடை தொடர்பான நிருவாகத்தில் பங்கு ஏற்றுள்ளனர். இம்மன்றாடிகள் குழு கோட்ட அளவில் இருந்ததற்கான காரணம் இருந்திருக்க வேண்டும். மேல்பாடியில் கிடைக்கின்ற கல்வெட்டு ஒன்று மன்றாடி நிருவாகத்தை விளக்குவதாக அமைந்துள்ளது.

"பெரும்பாணப்பாடி கோட்ட மன்றாடி விஜயந்தன்
மன்றாடிகளும் சிக்காலி உயியனும் மாகதேவன்
பழத்தியும் புலயனும் வேங்கடமும் மேடந்பட்டனான
கோன் மன்றாடியும் உள்ளிட்ட கோட்ட மன்றாடி
களோம் திருந்தாவிளக்கு நெய்யபட்ட ஓட்டிக்
குடுத்த பாசிவது....."[18]

மன்றாடிகள் அரசுக்கும் கோயிலுக்கும் கோயில் அதிகாரிகளுக்கும் கொடை பற்றிய உறுதிமொழியை அளிக்கின்றனர். மன்றாடிகள் தங்கள் குலத்தினைச் சேர்ந்தவர்களிடம் ஆடுகளை அளித்து அவர்கள் அளிக்கும் நெய்யினைக் கோயிலுக்கு அளப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் ஆடுகளைப் பராமரிப்பவர்களுக்கும் இந்த மன்றாடிகளுக்கும் இடையிலான உறவு தெரியவில்லை. பெரும்பாலும் இவர்கள் இந்த மக்களுக்குத் தலைமைப் பேராளர்களாக இருந்திருக்க வேண்டும்.

மன்றாடிகள் கோயில் பண்டாரத்திலிருந்து பெற்ற ஆடுகளை ஆண்டாண்டு தோறும் உடையார் கன்மிகளிடமும், தேவகன்மிகளிடமும் கொண்டு சென்று காட்டுவதாகக் கூறுகின்றனர்.

"நெய் இரு நாழியும் தேவர் பண்டாரத்தேய் அளப்பிக்க
கடவோம் ஆகவும் அவ்வாடு எழுநூற்றிருபதும் ஆட்டாண்டு
தோறும் உடையார் ஸ்ரீகாரியம் செய்வார்களும் தேவர்
கன்மிகளும்.... காட்ட கடவோமாகவும்"[19]

இந்தக் கல்வெட்டு வாசகம் மன்றாடிகள் கோயில் அளிக்கும் கால்நடைகளைப் பாதுகாக்கும் பொறுப்பிலிருந்தவர்கள் என்பதை வலியுறுத்துகின்றது.

மன்றாட்டு செய்வாந், ஊராண்மை செய்வாந் ஆகியவர்கள் போக கோட்ட மன்றாடிகளிடம் அளிக்கப் பெற்ற ஆடும் குடியும் நிலையானவர்களாக அந்நாளில் கருதியுள்ளனர்.

"ஆட்டாண்டு தோறும் பெரும்பாணப்பாடி கோட்ட
மன்றாட்டு செய்வாரும் ஊராண்மை செய்வாரும் போக
இவ்வாடும் குடியும் நிலையாகக் காட்டி நெய்யட்டுவிக்கக்
கடவார்களாகவும், இக்குடிகள் முன்பு நில்லா தொழியில்

நிலையான குடியில் நிலை நிறுத்த செய்வோமாகவும்,
நாங்கள் இக்குடிகளை வுலகுக் குறைவுபட்ட இறை
காட்ட பெறாதோமாகவும்''[20]

இக்கல்வெட்டினை வெட்டிக் கொடுத்தவர்களே கோட்ட மன்றாடிகளாவர். கோட்ட மன்றாட்டு செய்வானும், ஊராண்மை செய்வாரும் என்று கூறுவதில் மன்றாட்டு செய்வது ஒருமையிலும், ஊராண்மை செய்வது பன்மையிலும் குறிக்கப்பெறுவது எடுத்துக் காட்டத்தக்கது. கால்நடை வளர்ப்பில் ஈடுபடுபவர்கள் ஊர் அளவிலும் சபையினை வைத்திருந்தனர் என்பது ஊராண்மை செய்வார் என்பதால் தெளிவாகிறது. குறைந்த அளவில் ஆடுகளைக் கொடையாகக் கொடுத்தால் அந்த ஆடுகளைப் பராமரிக்க ஊர்ச் சபையே பொறுப்பேற்றுக் கொள்கின்றது. இந்தச் செய்தி மற்றொரு கல்வெட்டாலும் அறிய முடிகின்றது. தொன்னூற்றாறு ஆடுகளைப் பெற்றுக் கொண்ட பெரும்பாணூர் மன்றாடிகள், கோயிலுக்கு நெய்யட்ட உறுதி கூறும்போது ஒட்டிக் குடுத்தோம் பெரும்பாணூர் ஊரோம் என்று மேல்பாடியில் கிடைக்கும் மற்றொரு கல்வெட்டு கூறுகின்றது.[21] அதனால் ஊர் அளவில் முடிவெடுக்கும்போது மன்றாடிகள் சபை முடிவெடுக்கவில்லை.

கோட்ட மன்றாட்டு என்பது பற்றி ஆய்வு செய்ய வேண்டும். தொண்டை மண்டலத்தில் மன்றாட்டு இருந்தமை இந்தக் கல்வெட்டால் உறுதிப்படுகின்றது. அதிலும் ''பெரும்பாணப்பாடி கோட்ட மன்றாட்டு'' என்று கூறுவது கோட்ட மன்றாட்டு கோட்டத்திற்குட்பட்ட உள் பிரிவுகளிலும் நிலை பெற்றிருந்ததை வலியுறுத்தும். மன்றாட்டு என்பது மன்றினை ஆள்வது அல்லது மன்றத்தினை ஆள்வது என்று கொள்ளலாம். இங்கு மன்று என்பது கால்நடை நிறுத்தி வைத்த இடம் அல்லது கால்நடை மேயுமிடம் என்ற பொருளில் வழங்கியிருக்கலாம்.[22] பெரும்பாலும் முதலில் கூறப்பெற்ற பொருளே சரியானது.

தஞ்சை மாவட்டத்தில் நிலத்திற்கு எல்லை சொல்லும்போது மன்றுக்கு மேற்கு, மன்றுக்குக் கிழக்கு என்று கூறப்பெறுவதைக் காணலாம்.[23] இந்த இடங்களில் மேய்ச்சல் நிலத்தைக் குறித்து வந்தது. எது எப்படி இருப்பினும் மன்று கால்நடை வளர்ப்புடன் தொடர்புடையது. மன்றினை ஆள்பவன் மன்றாடி என்றும், மன்றினை ஆளும் உரிமை மன்றாட்டு என்றும் குறிக்கப்பெறும். மன்றாட்டு கோட்ட மன்றாட்டு என்று கூறுவது பல்வேறு கேள்விகளை எழுப்புவதற்கு இடம் தருகின்றது. கோட்ட மன்றாட்டு என்பது ஒவ்வொரு குடியிருப்பிலும் இருந்த மன்றாட்டுகளைத் தொகுத்து கோட்ட மன்றாட்டு என்று கூறப்பெறுகின்றதா? அல்லது தொடக்கத்தில் கோட்டம் என்ற வடமொழிச் சொல் மாடு தங்கும் இடத்தைக் குறித்தபோது அச்சொல்லுக்குச் சரியான தமிழ்ச்சொல் மன்று ஏற்கனவே மாட்டுப்பட்டியைக் குறித்து வந்தது எனலாம். அதன் அடியாக உருவான மன்றாட்டு, மன்றாடி ஆகிய சொற்கள் தொடர்ந்து வழக்கத்திலிருந்திருக்க வேண்டும் என்று கொள்வதா? கோட்டத்திற்கு அல்லது கோஷ்டத்திற்குரிய சபை கோஷ்டி என்றிருக்க

வேண்டும். அதற்கு மாறாக மன்றாடி என்ற சொல்லும், கோட்டத்தார் என்ற சொல்லும் வழக்கத்திலிருந்துள்ளன.

கோஷ்டம் என்ற இடப்பெயர் தொடக்கத்தில் சிறிய வாழ்விடத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பெற்று அதுவே பின்னாளில் பெரும்பகுதியைக் குறித்து வந்திருக்கலாம். இங்கு ஊர்ப்பெயர்களுடன் நாட்டுப் பெயர்கள் பயின்று வருவதை எடுத்துக்காட்டலாம்.

ஊர் என்ற அடைமொழியுடன் குறிக்கப்பெறும் இடப்பெயர்கள் வேளாண்மையில் ஈடுபட்டோர்கள் குடியிருக்கும் இடத்தைக் குறிக்கும். ''ஊராய் இசைந்து ஊரோம்'' என்று கல்வெட்டுகள் கூறும்.[24] நாட்டுச் சபையை நாட்டார் என்போர் ஊழுவித்துண்ணும் வேளாளர்கள் சபை. ஆனால் ஊரோம் என்று குறிக்கப்பெறும் சபை உழுதுண்ணும் வேளாளர்கள் சபையைக் குறிக்கும். கால்நடை வளர்ப்பு அல்லது கால்நடை பாதுகாப்பு பற்றிய கல்வெட்டில் ஊரார் குறிக்கப் பெறுவது ஊர் என்ற அடைமொழி கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் வாழும் இடமாகவும் கருதப்பெற்றது. அல்லது உழுதுண்ணும் வேளாளர்கள் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தனர் என்று கருத வாய்ப்புண்டு. அல்லது பண்டைக் காலந்தொட்டுக் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டவர்கள் வேளாண்மைக்கு மாறியிருக்கலாம். இவ்வாறு கொள்வதற்குக் காரணம் உள்ளது. தொண்டை மண்டலத்தில் இன்று தொழு வெள்ளாளர் (இவர்களைத் தவறாகத் துளு வெள்ளாளர் என்று கூறுகின்றனர்) என்ற பிரிவினர் உள்ளனர். இவர்கள் வேளாண்மையுடன் கால்நடை வளர்ப்பினையும் செய்தமையால் இந்தப் பெயர் பெற்றிருக்கவேண்டும் பெரும்பாலும் கால்நடை வளர்ப்பு வர்களின் தலையாய தொழிலாக விளங்கி வேளாண்மை துணைத் தொழிலாக உருவாகி இருக்கலாம்.

மண்டலம்

மேல்பாடி கல்வெட்டில் ஜெயங்கொண்ட சோழ மண்டலம், சோழ மண்டலம் ஆகிய மண்டலங்கள் மட்டுமே குறிக்கப்பெறுகின்றன. தொண்டை நாட்டிற்கு ஜெயங்கொண்ட சோழ மண்டலம் என்று பெயர் குறிக்கப்பெறுகின்றது. முதலாம் இராசராசன் தான் சோழப் பேரரசு விரிவடைந்தபோது அவன் ஆட்சிக்குட்பட்ட பகுதியை பதினான்கு மண்டலங் களாக பிரித்தான்.[25] அவற்றில் ஒன்று ஜெயங்கொண்ட சோழமண்டலம் என்பது. சோழர்கள் மண்டலங்களை நிருவகிக்க மண்டல முதலி என்ற அதிகாரியை நியமித்திருந்தனர்.[26]

நாட்டார் சபை

மண்டலத்தில் உள்ள உட்கிடை நாடுகளில் (Micro regions) ஒவ்வொன்றும் தனக்கென நாட்டுச் சபையைக் கொண்டிருந்தது. இந்தச் சபையில் செல்வவளம் மிக்க வெள்ளாளர்களே- குறிப்பாக உழுவித்துண்ணும் வேளாளர்களே உறுப்பினர்களாக விளங்கினர். நிலக்கொடை தொடர்பான அரசன் ஆணைகள் நாட்டுச் சபைக்கே சென்றது.

இறையிலி நிலங்களுக்கு ஊர்களுக்கு எல்லை வகுத்துக் கொடுப்பவர்களும் நாட்டுச் சபையினரே. முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு ஒன்று நாட்டார்க்கும், பிற சபையார்க்கும் (தேவதானம், பள்ளிச்சந்தம், கணிமுற்றூட்டு, வேட்டப்பேற்றூர், பழவறச்சாலா போகம்) அளிக்கப் பெற்றுள்ளது.[27] அக்கல்வெட்டு கூறும் அரசாணையில் வெள்ளாண் வகையிலிருந்து தேவதானத்திற்கு மாற்றப்பெற்றதை உறுதி செய்கின்றது. அரசுக்கு வெள்ளாண் வகை ஊர்கள் செலுத்த வேண்டிய காணிக்கடனை மேல்பாடி சோளேந்திர சிம்மேஸ்வர முடையார்க்கு அளித்தன என்ற செய்தி குறிக்கப் பெறுகின்றது. கல்வெட்டுத் தொடக்கத்தில் நாட்டார் சபை குறிக்கப் பெறுகின்றது.

ஸ்வஸ்திஸ்ரீ கோனேரின்மை கொண்டான் தாமர்க்கோட்டத்துக்
கரிவேட்டு நாட்டு நாட்டார்க்கும் பெரும்பாணப்பாடி
ஒழுகையில் நாட்டு நாட்டார்க்கும் நெடி நாட்டு
நாட்டார்க்கும் தூய்நாட்டு நாட்டார்க்கும்
.....
.....இவ்வனைத்தூர்களும் வெள்ளாண் வகையில்
முதல் தவிர்த்து காராணமை மீயாட்சி மிகுதிக் குறை
வுள்ளடங்க....யாண்டு பதினான்காவது
பசான முதல் தேவதான இறையிலியாக வரியிலிட்டுக்
கொள்க..... இவ்வனைத்தூர்களிலும் பதினான்கவது
பசாநமுதல் தேவதான இறையிலியாக வரியிலிட்டுக்
குடுத்துது இவ்வூர்கள் பிடி சூழ்ந்து பிடாகை நடப்பிப்பதாக
வாழைப் பந்தல் கலந்தை அறிவாளன் பூமி சுந்தரனான
சுந்தரசோழ மூவேந்த வேளானும் புரவுவரி நாயகம்
கொற்றன் சாத்தன் நம்பியும்..... உத்தரமேலூர்
ஸ்ரீ.....யூர் பொத்த.....தாங்களும் இவர்களுட
நின்ற எல்லை தெரிந்துக் நாட்டிப் பிடி சூழ்ந்து
பிடாகை நடந்து கல்லுங்கள்ளியும் நாட்டி
யறவோலை செய்து பொதுக வென்று''[28]

இக்கல்வெட்டில் வரிக்கொடையே அளிக்கப் பெற்றாலும், நிலக் கொடையாகக் கருதப்பெற்ற தன்மை புலப்படுகின்றது. இக்கல்வெட்டு பல சபையார்க்கும் கொடுக்கப் பெற்றாலும் நாட்டார் முதன்மை பெற்ற பேராளர்களாகக் கருதப்பெற்றுள்ளனர்.

நகரத்தார்

நகரம், நகரத்தார் ஆகிய சொற்கள் இடைக்காலக் கல்வெட்டுகளில் வாணிகர் மிகுந்திருந்த இருப்பிடத்தையும் அவர்கள் சபையையும் குறித்து வந்தன. மேல்பாடி இராஜாஸ்ரயபுரம் என்று அழைக்கப்பெறுவதால்

இவ்வூர் நகரம் என்ற இருப்பிடத்தைக் குறித்து வந்தது எனலாம். தொடக்கத்தில் இவ்வூர் கால்நடை வளர்ப்பவர்கள் தங்கியிருந்த இருப்பிடமாக இருந்து, சோழர் காலத்தில் நகரமாக உருவெடுத்தது. நகரமாக எழுச்சிப் பெற்ற பின் புரம் என்ற அடைமொழியுடன் அழைக்கப்பெற்றது. இவ்வூரில் நகரத்தார் சபை மட்டுமே இருந்தது. வேறு குடியிருப்பு இல்லாமையால் இவ்வூரில் ஊரார், பிரம்மதேயக் கிழவர், (வேட்டப்பேற்றூர் சபை, கணிமுற்றூட்டு சபை, தேவதான சபை ஆகியவை பற்றிக் கல்வெட்டு ஏதும் குறிக்கவில்லை.[29]

மேல்பாடி நகரத்தார் முதலாம் இராசராசன் காலம் முதல் செல்வாக்கு பெற்று விளங்குகின்றனர். முதலாம் இராசராசனின் 24-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டில் நகரத்தார் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

``.....இப்பொந்நுக்காக இத்தெவர்க்கு
முப்பதிந் கழைஞ்சுங் கொண்டு இந்நகரத்தோம்
இறைஇழிச்சி விற்றுக்குடுத்த நிலமாகவது எங்கள்
கீழ்பிடாகைச் சிறுப்பையமூர்.....
நாற்பாலெல்லையுள்ளகப்பட்ட நீர் நிலமும்
நஞ்செய்யும் புஞ்செய்யு முண்ணிலமொழிவிந்றி
எம்மிலிசைந்த விலை புரவுவங்கைய்வரக்
கொண்ட தேவநாத இறையிலியாக.....
இப்ஹீ ிஸவ்வரிஹாரமாக இத்தேவர்க்கு
விற்றுவிலை சிராவணை செய்து குடுத்தோம்
இவ்விராஜாஸ்ரய்புரத்து நகரத்தோம்.....
சிலாலேகை செய்து குடுத்தோம் இராஜாஸ்ரய
புரத்து நகரத்தோம்''[30]

நகரத்தார் தங்கள் நகரத்தில் உள்ள நிலங்கள் அனைத்திற்கும் உரிமையுடைய வர்களாக இருந்துள்ளனர். நகரத்தார் சபையில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும் கையொப்பமிட்டுள்ளனர்.[31] அதனால் நகர சபை கூட்டு அமைப்பாக செயல்பட்டது எனலாம்.

நகரத்தார், நகரத்திற்குட்பட்ட பகுதியில் உள்ள நிலத்தை விற்பது, வாங்குவது, நகரத்து மக்களுக்கு நிலத்தினைப் பிரித்துக் கொடுப்பது ஆகியவற்றின் மீது அதிகாரம் உடையவராக இருந்தனர். மேல்பாடியில் உள்ள கல்வெட்டு ஒன்றில் மனைவழிக் கூறிடாது நகரப் பொதுவாய் கிடந்த நிலம் என்று கூறுவது எடுத்துக்காட்டத்தக்கது.[32] பொதுவாக நிலம் தொடர்பான ஆணைகள், முடிவுகள் ஆகியவை நாட்டார் சபை அதிகாரத்திற்குட்பட்டவை. ஆனால் நகரத்தார் ஆளுகைக்குட்பட்ட நிலங்கள் நாட்டார் ஆளுகைக்குக் கீழ் வைக்கப்

பெறவில்லை. நகரம் தனியொரு நிருவாக அமைப்பாகவும், பகுதியாகவும் நிலைப்பெற்றிருந்து.

பிரம்மதேயசபை

தொண்டை மண்டலத்தில் பிரம்மதேயங்கள் காலத்தால் முற்பட்டவையாக இருந்தன. ஆந்திர மாநிலத்தில் பல்லவர்கள் அளித்த பிரம்மதேயங்கள் கி.பி. 4-5-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தவை.[33] பல ஊர்களைப் பிரம்மதேயமாக்கி அளிக்கும்போது அரச அதிகாரிகள், நாட்டு அதிகாரிகள் அலுவல் நிமித்தமாக பிரம்மதேயத்திற்குள் புகக்கூடாது என்று அரசன் ஆணையிட்டுள்ளான்.[34] பிரம்மதேயங்கள் தரிசாய்க் கிடந்த காட்டுப் பகுதியில் அளிக்கப் பெற்றுள்ளன. தொண்டை மண்டலத்தில் மேற்குப் பகுதியில் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்ட மக்கள் வாழ்ந்த வேணாடு, மண்டைக்குளநாடு ஆகிய நாடுகளில் உள்ள ஊர்களை அளித்துள்ளனர்.[35] அதேபோல் வாணியம்பாடிப் பகுதியில் உதயசந்திர மங்கலம் என்ற பெயரில் பிரம்மதேயம் உருவாக்கியுள்ளனர்.[36] தொண்டை மண்டலத்து மேற்குப் பகுதி வேளாண்மைக்குக் கொண்டு வரப்பெற வேண்டும் என்ற அடிப்படையில் பிரம்மதேயங்கள் அளிக்கப்பெற்றன.

பிரம்மதேயங்களில் பல குடும்புகள் இருந்தன, உத்தரமேரூரில் முப்பது குடும்புகள் இருந்தன.[37] இங்கு ஆண்டுதோறும் வாரியங்களுத்குத் தேர்தல் நடைபெற்றது.[38] தேர்தலில் நிற்பதற்கு பல தகுதிகள் வகுக்கப்பெற்றன.[39] உத்திரமேரூர் கல்வெட்டுகள் பண்டைநாளில் பிரம்மதேயங்கள் செயல்பட்ட தன்மையை அறிய உதவியாக இருந்து வருகின்றன. பிள்ளைப்பாக்கம், திருநின்றவூர், கூரம் ஆகிய ஊர்களில் கிடைக்கும் கல்வெட்டுகள், பிரம்மதேயத்தில் வரிவசூல், நீதி மன்றச் செயல்பாடு குடும்பு அமைப்பிற்குரிய நிலம் ஆகியவற்றை அறிந்து கொள்ள உதவுகின்றன.[40] குடும்பிற்கு அந்த ஊரில் அளிக்கப்பெற்ற நிலம், குடும்பு என்ற பெயராலேயே அழைக்கப்பெற்றது.[41] அதனால் பிரம்மதேயங்களில் நிலவுரிமை குடும்பு என்ற அமைப்பிற்குட்பட்டதாகவே விளங்கியது என்று கருதமுடிகின்றது. மேல்பாடிக் கல்வெட்டில் திருவல்லத்தில் செயல்பட்ட பிரம்மதேயசபை குறிக்கப்படுகின்றது. அங்கு நிலை பெற்றிருந்த சபையும் பொதுவாக பிரம்மதேயத்திற்குரிய இலக்கணத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

சங்கரப்பாடி

சங்கரப்பாடி என்ற சொல் சக்கரப்பாடி என்பதிலிருந்து உருவாகியிருக்கலாம் என்று கே.எஸ்.வைத்தியநாதன் கருதுகின்றார்.[42] எண்ணெய் ஆட்டும் வாணியர் பயன்படுத்தும் செக்கினை சக்கரம் என்று கூறுவார் என்றும், அதிலிருந்து சக்கரபாடி என்ற சொல் உருவாகி மெலித்தல் விகாரமாக சங்கரப்பாடி என்று மருவியது என்றும் அவர் கூறுவார். ஆனால் கே.ஜி. கிருஷ்ணன் அவர்கள் சம்கரம் என்று பிரித்துப் பொருள்கொள்வார். சம்கரம் சங்கரம் என்றாகியது. சங்கரம் என்பதற்கு கலப்பு சாதி என்று பொருள் கொண்டு சங்கரப்பாடியில்

வாழ்பவர்கள் கலப்பு சாதியினர் என்று கூறியுள்ளார்.[43] சங்கரப்பாடியில் வாழும் மக்கள் எண்ணெய் ஆட்டும் தொழிலைச் செய்தனர்.

அவர்கள் கோயிலுக்கு எண்ணெய் அளிக்கும் பணியினைச் செய்தனர்.[44] இவர்களுடைய சபை, அச்சபை செயல்பட்ட தன்மை ஆகியவைபற்றி கல்வெட்டுச் செய்தி ஏதும் கிடைக்கவில்லை. இவர்கள் இடங்கைப் பிரிவினைச் சேர்ந்தவர்கள் என்று பிற்காலப் பட்டையங்கள் கூறும்.[45] இவர்கள் மரபில் உயர்ந்தவர்கள் மாயிலெட்டி என்று கூறப்பெறுகின்றனர்.

ஊர்ச்சபை

வேளாண்மையில் ஈடுபட்ட உழவர்கள் சபை ஊர் என்றும், ஊரார் என்றும் அழைக்கப்பெற்றது. இவர்கள் உழுவித்துண்ணும் வேளாளர்களாக இருந்திருக்க வேண்டும். ஊர்ச்சபை செயல்பட்ட விதம் அதன் அமைப்பு ஆகியவை பற்றி செய்தி ஏதும் கிடைக்கவில்லை. ஊர் பல இடங்களில் பிரம்மதேயத்தின் ஆளுகையின் கீழ் இருந்துள்ளது. ஊர்ச்சபை தான் பிரம்மதேய சபையைவிடக் காலத்தால் முற்பட்டதாக இருந்திருக்க வேண்டும். மேல்பாடிக் கல்வெட்டு ஒன்று ஊரார் ஆடுகளைப் பெற்றுக் கொண்டு நெய் அளப்பதாக உறுதி கூறியுள்ளமைபற்றிக் கூறுகின்றது. அதனால் தொண்டை மண்டலத்தில் ஊர் வேளாளர் கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டனர் என்பது தெரிவிக்கின்றது.

கோயில் நிருவாகம்

சோழர் காலத்திற்கு முன்பும் பின்பும் கோயில், அரசியல், பொருளியல், சமூகம் ஆகிய நிலைகளில் மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தது. அதனால் அந்நாளைய அரசர்கள் கோயிலுக்கு மிகுந்த கொடையினை அளித்துப் போற்றினர். கோயில்கள் சுயாட்சி பெற்ற அமைப்பாகச் செயல்பட்டது. அரசியல் செல்வாக்கினை உயர்த்திக் கொள்ளவும், கோயிலுக்குக் கொடையளித்தனர். அரசர்கள், படைத்தலைவர்கள், அமைச்சர்கள், அதிகாரிகள், நாட்டார், வாணிகர்கள், பொதுமக்கள் ஆகிய பல சமூக நிலைகளில் இருந்தவர்கள் கோயிலுக்குக் கொடை அளித்தனர். கோயிலுக்கு அளிக்கப்பெற்ற கொடைகளை நிருவகிக்க கோயிலுக்கென நிருவாக அமைப்பு இருந்தது. கோயில் நிருவாக அமைப்பில் அரசர்கள் கண்காணிப்பும் இருந்தது. அக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் மேல்பாடி கல்வெட்டுகள் சான்று பகரும்.

“ராஜாஸ்ரயபுரத்து சொஸைந்ர ஸிம்ஹஸ்வரமுடைய
மஹாதெவர்க் கோயிலுக்கு ஸ்ரீ காய்ஞ் செய்கின்ற
உடையார் ஸ்ரீ ராஜேந்ரசொள தெவர் பெருந்தரத்து
சோணாடு நித்தவி நொத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து
அரசூருடையான் ஈராயிரவன் பல்லவநா நசோழப்

பல்லவரயர் இஒவர் பாண்டாரத்துக் குடியிருந்த பொன்னை
அதிகாரிகள் உஒயஉர்தாணு மூவேந்த வேளாளர்க்குக்
கூட்டித் திருநொந்தாவிளக்கு ஆடு கொண்டு வைக்க வென்று
சொல்ல அதிகாரிகள் உதைய
இக்கோயிலுக்கு நாயகந் செய்கின்ற நித்த விநோதத் தெரிந்த
பரிவாரத்து பெரும்பாணூர் கிழவந் கண்ணந் இராமன்
கண்காணி ஆகவும் திருவுண்ணாழிகை உடைய
சிவபிராஹமணன் கெங்காதிரன் அக்கானி பட்டதும்
கணபதி ஏறபட்டநும் கண்காணி ஆகவும் தேவர்க்கு
பண்டாரமேன மலை ஓகை வளநாட்டு சோழ குல
சுந்தரி சதுர்வேதி மங்கலத்து சபை யாரிட்ட பண்டாரி
பொற் குமாரன் பண்டாரமாகவும்''[47]

இக்கல்வெட்டு வாசகம் கோயில் நிருவாகத்தில் செயல்பட்ட அதிகார வகுப்பினைச் சுட்டுகின்றது. கோயில் ஸ்ரீ காரியம் செய்கின்றவர் இராசேந்திர சோழப் பெருந்தரம் என்று குறிக்கப் பெறுவதால் கோயில் நிருவாகத்தில் அரசின் நேரடிப் பார்வை இருந்தமை புலப்படுகின்றது.

இந்தக் கல்வெட்டு கோயில் பண்டாரத்திற்குட்பட்ட ஆட்டு மந்தை குறைபட்டு விட்டது என்ற அடிப்படையில் அதனைச் சரிபார்க்க ஆடுகளைக் கொண்டுவந்து காட்டும் படி கோயில் ஸ்ரீகாரியம் செய்பவர் கேட்கிறார். அவ்வாறு கொண்டு வரப்பெற்ற ஆடுகளைச் சரிபார்க்க கண்காணிகள் மூவரை நியமிக்கின்றனர். மேலும் கோயில் பண்டாரத் திற்கு பண்டாரியையும் நியமிக்கின்றனர். கண்காணி அரசு அதிகாரிகள் குழுவிலிருந்தும், கோயில் பூசை செய்யும் சிவப்பிராமணர் குழுவிலிருந்தும் நியமிக்கப் பெறுகின்றனர். கோயில் நாயகம் செய்கின்ற நித்திவிநொதந் தெரிந்த பரிவாரத்திலிருந்து ஒருவனையும், உண்ணாழிகை உடைய சிவப்பிராமணர்களிடையில் இருவரையும் கண்காணியாக நியமிக் கின்றனர். ஆனால், பண்டாரத்திற்குரிய அதிகாரியை சோழகுல சுந்தரி சதுர்வேதி மங்கலத்துச் சபையார் நியமிக்கின்றனர். கோயில் கணக்குகளைப் பார்வையிட கணக்கரை இரண்டு சபைகள் நியமிக்கின்றன என்பது பின்வரும் கல்வெட்டு வாசகத்தால் விளங்குகின்றது.

''பெரும்பாணப்பாடிக் கரை வழிக்காரையாகிய
வானவன் மஹாதேவிச் சதுர்வேதி மங்கலத்துச் சபை
யாரிட்ட நந்தி சுப்பிரமணியநும் கரைவழி காவநூர்
சபையாரிட்ட விஞ்சாதிருக்க வாலியும் கணக்கினாலும்''[48]

இந்தக் கல்வெட்டு வாசகம் கோயில் நிருவாகத்தில் பிரம்மதேய சபையாரும் அதிகாரம் பெற்றிருந்தனர் என்பதை விளக்குகின்றது.

பதிபாத மூலப்பட்டுடைய பஞ்சாசாரியர்

கோனேரின்மை கொண்டான் என்று தொடங்கும் கல்வெட்டில் இந்த அதிகாரக் குழு பற்றி கல்வெட்டு கிடைக்கின்றது.

''பதிபாத மூலப்பட்டுடைய பஞ்சாரிய தேவர்
கன்மிகளுக்கும் சாலைக்கும் உள்ளிட்டு வேண்டும்
நிவந்தங்களுக்கும்''[49]

இக்கல்வெட்டு வாசகத்தில் பதிபாத மூலப்பட்டுடைய தேவர்கன்மிகள் குறிக்கப் பெறுகின்றனர். இவர்கள் கோயில் பூசை செய்வோர் என்றும், அவர்கள் அமைத்த சபையே பதிபாத மூலப்பட்டுடைய பஞ்சாசாரியார் என்றும் கருதப்பெறுகின்றனர்.

கோயில் நிருவாகத்திலும், வளர்ச்சியிலும் சோழ அரசர்கள் காட்டிய ஆர்வத்தைப் பின்வரும் கல்வெட்டு வாசகம் வலியுறுத்தும்.

''பரகேஸரிவர்மரான ஸ்ரீராஜேந்திர சோழ தேவர்க்கு
யாண்டு பத்தாவது நாள் னூற்றெழிநால் அதிகாரிகள்
சி(வி)சாக கிழவர் காஞ்சிபுரத்து கோயில் திருவணுக
வாசலில் கீழ்ப்பக்கத்துச் சுற்றுக் கல்லூரியிலே கோயிற்
கருமமாராயாவிருந்து பெரும் பாணப்பாடித் தூய்நாட்டு
மேற்பாடி ஆந இராஜாஸ்ரயபுரத்து சோளேந்திர சிங்க ஈஸ்வர
முடையார் கணக்கு கேட்டு இத்தேவதாந ஊர்களாற்
தேவர்க்கு நீக்கி இறை கட்டிந நெல்லும் பொன்னும்
காசும் இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்கு யாண்டு
மூன்றாவது முதல் தேவதாநமாகக் குடுத்தருளினமையில்''[50]

இக்கல்வெட்டு வாசகத்தில் இராசேந்திர சோழனின் அதிகாரிகள் மேல்பாடி சோளேந்திரசிங்க ஈஸ்வரமுடையார் கோயில் கணக்கினைக் கேட்கின்றனர்.

அதிகாரிகள்

சோழர் காலக் கல்வெட்டுகள் மக்கள் பெயர்களைக் குறிக்கும் முறையே தனித் தன்மை உடையது. பணியிலிருப்பவர்கள் அவர்கள் பணியைக் குறிப்பிட்டுப் பெயரைக் குறிக்கும் முறை பின்பற்றப் பெறுகின்றது. அதனால் அன்றைய நிருவாக முறையை அறிய முடிகின்றது. அதிகாரிகளைக் குறிப்பிடுகின்றபோது அவருடைய பதவி, ஊர், விருதுப் பெயர் ஆகியவை குறிக்கப்பெறுகின்றன. ஓலையெழுதும் ஆலத்தூருடையான் தினகரன் கண்ணப்பனான ராஜகேசரி மூவேந்த வேளான், பருத்திக்குடையான், வேளான், பொன்னம் பலமான சோளேந்திர சிங்கப் பல்லவரையன், அரசுருடையான் ஈராயிரவன் பல்லவரை யனான மும்முடிச்சோழப் போசன், உறத்தூருடையான் அறிஞ்சிகை சத்துரு கேசரியான

செம்பியன் பல்லவரையன், உத்திரங்குடையான் கோன் வீதிவிடங்கள் ஆன வில்லவன் சேந்தன் மாதன் நந்தி தரண்ணா பரகேசரி விழுப்பரையன், வேளான் பொற்காடன், ஆகிய பெயர்கள் குறிப்பிடத்தக்கவை. இந்தப் பெயர்களில் உடையான், கிழான், கிழவன், வேளான் ஆகிய முன்னொட்டுகள் பெயருக்குரியவர்கள் செல்வ வளத்தில் சமூக நிலையில் உயர்ந்தவர்கள் என்பதை அறிய உதவுகின்றன.

இந்தப் பெயர்களில் பல்லவரையன், மீனவன், வில்லவன், மும்முடி சோழ மூவேந்த வேளான் ஆகிய பெயர்கள், அந்த அதிகாரிகள் பல்லவர், சேரர், பாண்டியர், சோழர் ஆகிய நாடுகளிலிருந்து உருவானவர்கள் என்பதை வலியுறுத்துகின்றன.

சோழப் பேரரசில் அதிகாரிகளாக நியமிக்கப் பெற்றவர்கள் செல்வ வளத்தில் சிறப்புற்றவர்கள் ஆக இருந்தார்கள். அவர்களில் வேளான்கள் செல்வத்தில் மேம்பாடு அடைந்தவர்களாக இருந்தார்கள். சோழர்கள் வேளாண்மையை ஊக்கப்படுத்தினார்கள். அதனால் தென்னிந்தியா முழுவதும் வேளாண்மை வளர்ச்சி பெற்றது. அதன் விளைவாக பல ஊர்கள் செல்வம் மிக்க ஊர்களாக விளங்கின. அவ்வூர்களின் தலைவர்களாக இருந்தவர்கள் தான் அரசு அதிகாரிகளாக நியமிக்கப் பெற்றனர். அதிகார அமைப்பில் படிநிலைகள் இருந்தன என்பது பின்வரும் கல்வெட்டு வாசகத்தால் உறுதிப்படும்.

''அதிகாரிகள் இராஜராஜ மூவேந்த வேளாரும் சோழ
மூவேந்த வேளாரும் நடுவிருக்கும் கொட்டையூர்ப்
பூவத்தப்பட்டவரும் ஏவ இவர்கள் ஏவிந படியேய்
அதிகாரிகள் செம்பியன் மூவேந்த வேளாரும் முன்னாந்சாத்தனூர்
உடையாரும் நடுவிருக்கும் கந்தாடைத் திருவெண்
காடபட்டரும் ஏவ புரவு வரிதினைக் களத்து
கண்காணி சிதறியம்பாக்கமுடையானும் புரவுவரித்
திணைக்களம் சேலூர் உடையானும் பழவூர்
உடையானும் சிக்கல் உடையானும் பாலையூர்
கிழவனும் வரிப்பொத்தகம் கதசிநமுடையாநும்
முகவெட்டி கோட்டை கிழானும் மழிசை
கிழானும் ஆலங்குடையானும் இருந்து''[51]

இக்கல்வெட்டு வாசகத்தில் இரண்டு இடங்களில் ''ஏவ'' என்று வருவது அதிகாரி அடுக்குகள் இருப்பதாக கருத முடியும்.

அடிக்குறிப்புகள்

1. K. A. Nilkanta Sastri, The Colas, PP. 467-68
2. Ibid. P.
3. Ibid. P. 466
4. ஆர். பூங்குன்றன், பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம், (பி.எச்.டி. ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்,1999) ப. 171
5. மேலது. ப. 172
6. பின்னிணைப்பு
7. பின்னிணைப்பு
8. மேலது
9. S.I.I. Vol. III, No.54
10. பல்லவர் செப்பேடுகள் முப்பது, ப. 106
11. S.I.I. Vol. III, No.54.
12. பின்னிணைப்பு
13. M. S. Govindasamy,The role the Feudatories in the Pallava History, P. 4
14. Ibid. PP. 8-15
15. பின்னிணைப்பு
16. சி. கோவிந்தராசன், கல்வெட்டுக் கலைச் சொல் அகர முதலி, ப. 405
17. பின்னிணைப்பு
18. மேலது

19. மேலது

20. மேலது

21. மேலது

22. மேலது

23. Tamil Lexicon, Vol.V, 3628

24. திருத்துறைப்பூண்டி கல்வெட்டுகள், ப. 176

25. பின்னிணைப்பு

26. மேலது

27. மேலது

28. மேலது

29. மேலது

30. மேலது

31. Y. Subhurayalu, op. cit. PP. 14-15

32. Ibid.P. 16

33. பின்னிணைப்பு

34. பின்னிணைப்பு

35. பின்னிணைப்பு

36. பின்னிணைப்பு

37. S.I.I. Vol. III, No.15.

38. Ibid.

39. பல்லவர் செப்பேடுகள் முப்பது. ப. 321

40. மேலது. ப. 194

41. மேலது. ப. 187

42. மேலது. ப. 187

43. K.V. Subrahmaniya Ayer, Historical Sketches of Ancient Deccan, Vol.II, PP. 286- 88

44. Ibid.

45. Ibid.

46. ஆவணம், இதழ், 7.பக். 165-67

47. S.I.I. Vol. III, No.321

48. கே.எஸ். வைத்தியநாதன், சங்கரப்பாடி, சித்தாந்தம் 1952, ப. 521

49. Burton Stein, Peasant State and Society in Medieval South India, P.249.

50. S.I.I. Vol. III, No.17

51. புலவர் செ. இராசு. கொங்கு நாட்டுச் சமூக ஆவணங்கள், ப.26-28

52. S.I.T.I. Vol. III Part, Glossary.

பொருளியல் வாழ்க்கை

மேல்பாடி, சோழர் காலம் முதல் சிறப்பு பெற்றுள்ள ஊர். இவ்வூரில் கிடைக்கும் கல்வெட்டுகளைக் கொண்டு சோழர் காலம் முதல் இவ்வூர் பொருளியல் வாழ்க்கை எந்தத் தரத்திலிருந்தது என்பது ஆய்வு செய்யப்பெறும். கி.பி. 10-ஆம் நூற்றாண்டிலிருந்து மேல்பாடி நகரமாக மாற்றப் பெற்றிருக்க வேண்டும். அதன்பின் மேல்பாடியான ராஜாஸ்ரயபுரம் என்று அழைக்கப்பெற்றது.[1] அது மட்டுமின்றி இவ்வூரில் ''நகரத்தார்'' சபையுமிருந்தது. மேல்பாடி வாணிக மையமாக விளங்கியமைக்குப் பல கல்வெட்டுச் சான்றுகள் கிடைக்கின்றன. இவ்வூர் நகரத்தார் ஆளுகையின் கீழிருந்தது. இவ்வூர் தொடர்பாக மேல்பாடி வரும் அரசாணை நகரத்தார்க்கு மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது. அதனால் மேல்பாடி வாணிக மையமாகக் கருதப்பெற்றது என்று கூறமுடியும்.

கால்நடை வளர்ப்பு

மேல்பாடியும், அவ்வூர் அமைந்துள்ள பெரும்பாணப்பாடியும் சங்க காலந் தொடங்கி முல்லை நிலமாக விளங்கியது. அதனால் இப்பகுதி வேளாண்மையுடன் கால்நடை வளர்ப்பு சிறப்புற்றிருந்த பகுதியாக விளங்கியது. கோயிலுக்கு அளிக்கப் பெற்ற கால்நடைளைப் பற்றிய குறிப்புகள் மிகுதியும் பயின்று வருகின்றன. சாவா மூவாப்பேராடு நல்லெருது, நற்கிடா ஆகியவை கால்நடை தொடர்பாகக் குறிக்கப் பெறுகின்றன. மன்றாடிகள் பற்றிய குறிப்புகள் குறிப்பிடத்தக்கவை. கோட்ட மன்றாடிகள், நாட்டுக் கோட்ட மன்றாடிகள் என்று இருவேறு மன்றாடி சபைகள் குறிக்கப் பெறுகின்றன. 'பெரும் பாணப்பாடி கோட்ட மன்றாடிகள்' என்று கூறப்பெறுவதால், கோட்ட மன்றாடிகள் சபை தொண்டை மண்டலத்தில் கோட்டப் பிரிவுகள் உருவானபோது வழக்கத்தில் இருந்திருக்க வேண்டும் எனலாம்.[2]

கோட்ட மன்றாடிகள் ஆடுகளை வாங்கிக் கொண்டபின் அவர்கள் தங்கள் மரபினைச் சேர்ந்த இடையர்களுக்குப் பிரித்தளிப்பர்.

சோழர் காலத்தில் ஒரு கழஞ்சுக்குப் பத்து ஆடுகள் வாங்கப்பட்டுள்ளன. 72 கழஞ்சுக்கு 720 ஆடுகள் வாங்கப்பட்டுள்ளன.[3] அவ்வாறு வாங்கியமைப்பற்றி இவ்வூர் கல்வெட்டுகளும் குறிப்பிடுகின்றன. இந்த 720 ஆடுகளையும் பெரும்பாணப்பாடி கோட்ட மன்றாடிகள் சபை வாங்கிக்கொள்கின்றது. கோட்ட மன்றாடி சபையில் நான்கு

உறுப்பினர்கள் இருந்துள்ளனர். இந்த நால்வருக்கும் இவ்வாடுகளைப் பெற்றுக் கொண்டு நெய் அளிப்பதாக உறுதி அளித்துள்ளனர். கோட்ட மன்றாடிகள் (சபை) ஆடுகளை தங்கள் மரபினைச் சேர்ந்தவர்களுக்குப் பிரித்து அளித்துள்ளனர். ஒவ்வொருவரும் பெற்றுக் கொண்ட ஆட்டின் எண்ணிக்கையும் அவரவர் அளிக்க வேண்டிய நெய்யின் அளவும் கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றன.[4]

மேலே கூறப்பெற்ற கல்வெட்டில் சோழர் காலத்தில் ஒரு கழஞ்சுக்கு எத்தனை ஆடுகள் அளிக்கப் பெற்றன என்பது பற்றியும் குறிக்கப்பெறுவதால், சோழர் காலத்தில் ஆட்டின் விலையை அறிந்து கொள்ள இயலும்.

தொண்டை நாடு பண்டைக் காலந்தொட்டு கால்நடை வளர்ப்பில் சிறப்புற்றிருந்த தன்மை பல்வேறு சான்றுகளால் உறுதிப்படுகின்றது. பெரும்பாணாற்றுப்படையில் கால்நடைகள் அடைத்து வைத்திருந்த தொழு, அவை மேயும் இடங்கள் ஆகியவை பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.[5] கி.பி. ஆறாம் நூற்றாண்டிலிருந்து குறிக்கப் பெறும் கோட்டம் என்ற பிரிவும், 'கோஷ்டம்' என்ற வடசொல்லிலிருந்து உருவானது என்று கருதப் பெறுகின்றது.

வடமொழியில் கோஷ்டம் என்பது மாட்டுப்பட்டியையும், மாடு மேயும் நிலத்தையும் குறித்து வந்தது என்பர். அந்தக் கோஷ்டம் மாட்டு வளர்ப்போடு தொடர்புடையது என்பது உறுதிப்படும்போது, தொண்டை மண்டலத்து முதல் மக்கள் குழுவாக அமைந்தது''கோட்ட மன்றாடிகள்'' என்ற அமைப்பாகும் எனலாம்.

பல்லவர் காலத்து இறுதிப்பகுதியிலிருந்து இவ்வமைப்பு அரசியல் நிருவாகத்தின் ஒரு கூறாக இணைக்கப் பெற்றது.[6] அதற்கு முன் இவ்வமைப்பு இருந்திருக்க வேண்டும். தானே செயல்பட்டுக் கொள்ளும் அமைப்பாக இருந்தது, இவ்வமைப்பு உருவாக்கப்பட்ட விதம், அதன் உட் கூறுகள் ஆகியவை பற்றி இலக்கியத்திலோ, கல்வெட்டுகளிலோ குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை. கோட்ட மன்றாடிகள் என்போர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தோர் உயர்ந்தோராக (ELITE)க் கருதப்படுவோர் என்று கருதப்பெற வேண்டும். அதனால் மன்றாடி என்ற சொல்லைப்பற்றி ஆய்வு செய்தல் சிறப்புடையது.

மன்றாடி என்ற சொல் சோழ நாட்டுக் கல்வெட்டுகள், தொண்டை நாட்டுக் கல்வெட்டுகள், கொங்கு நாட்டுக் கல்வெட்டுகள் ஆகியவற்றில் மிகுதியும் பயின்று வரக்காணலாம். ஆனால், ஒவ்வொரு பகுதியிலும் ஒரு பொருள் கூறப்பெறுகின்றது. தொண்டை நாட்டிலும், சோழ நாட்டிலும் கால்நடை வளர்ப்போரின் பேராளர் என்ற பொருளில் வழங்கப்பெற்றது.[7] ஆனால் கொங்கு நாட்டில் தேவதான ஊர்களில் உருவாக்கப் பெற்ற மன்றாட்டு பங்கினை ஆள்பவன் என்று பொருள் கொள்ளப்பெறுகின்றது.[8] கொங்கு நாட்டில் தேவதானமாக அளிக்கபெற்ற ஊர்கள் அளவின் தன்மைக்கேற்ப ஐந்து மன்றாட்டு, ஏழு மன்றாட்டு, எட்டு மன்றாட்டு என்று பிரிக்கப் பெறும். இங்கு மன்றாட்டு பங்கு என்ற

பொருளில் வழங்கப்பெறுகின்றது. கொங்கு நாடு சங்க காலந்தொட்டு கால்நடை வளர்ப்பில் சிறப்பிடம் பெற்று விளங்கியது. அதனால் மன்றாட்டு என்பது கால்நடை வளர்ப்புடன் தொடர்புடைய சொல்லாக எடுத்துக் கொள்ளப்பெறுகின்றது. மன்றாட்டு என்ற சொல்லை மன்று+ ஆள்+து என்று பிரித்துப் பொருள் கொள்ள முடியும். இங்கு மன்று என்பது கால்நடை தங்கி இருக்கும் இடத்தையும், அவை மேயும் இடத்தையும் குறிக்கும் என்று கொள்ளும் வகையில் இச்சொல் ஆளப்பெறுகின்றது. மன்றாட்டை ஆள்பவன் மன்றாடி என்று கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப் பெறுகின்றான்.

பண்டைக் காலந்தொட்டு மன்றாட்டு வழக்கில் இருந்திருக்க வேண்டும்.[9] அச்சொல் மாட்டுப் பட்டியையும், மாடு மேயும் இடத்தையும் குறித்து வந்திருக்க வேண்டும். காரணம் மாடு மேயும் இடமும், பட்டியும் ஒரே இடமாகக் கொங்கில் கருதப் பெறுவதால் இக்கருத்து உருவானது. மேலும் சோழர் காலத்தில் மாடு மேயும் நிலப்பகுதி வேளாண்மைக்கு மாற்றப் பெற்றது. வேளாண்மைக்கு மாற்றப்பெற்ற பிறகும் இச்சொல் வழக்கத்திலிருந்தது. பொருளியல் மாற்றங்கள் நிகழ்ந்த பின்னரும் பழைய சொல்லே வழக்கத்திலிருந்தது. வேளாண்மை வளர்ச்சி ஏற்பட்ட பின்னரும் கால்நடை வளர்ப்பிற்குரிய மன்றாட்டு என்ற சொல் வேறு பொருளில் வழங்கி வந்தது.[10] மன்றாட்டுடன் தொடர்புடைய மன்றாட்டுக்காணி, மன்றாட்டுப்பேறு, மன்றாட்டுத் தோட்டம், மன்றாட்டுச்செய், மன்றாட்டு நிலம் ஆகியவை கொங்கு நாட்டுக் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் சொற்கள்.[11] கொங்கு நாட்டிலும், தொண்டை நாட்டிலும் மன்றாடி என்ற சொல் வழக்கத்திலிருந்தாலும், இருவேறு பகுதிகளிலும் இருவேறு பொருள்கள் இருந்துள்ளன என்பது கல்வெட்டுச் சான்றுகளால் உறுதிப்படுகின்றது. கொங்கு நாட்டில் கால்நடைக் கொடை பற்றி ஓரிரு குறிப்புகளே கிடைக்கின்றன.[12] ஆனால் தொண்டை நாட்டில் கால்நடைக் கொடை, நிலக்கொடையுடன் ஒப்பிடத்தக்கதாய் உள்ளது.

சோழர்கள் தொண்டை நாட்டுப் பொருளியல் வாழ்க்கையை வேளாண்மைப் பொருளாதாரத்தோடு இணைந்த வாழ்க்கையாக மாற்ற முயற்சி செய்தனர். அந்த முயற்சியில் படிப்படியாக மாற்றம் கொண்டு வர ஏற்பாடு செய்தனர். அதனால் கால்நடை வளர்ப்பினையும் போற்றினர். கால கதியில், கால்நடை வளர்ப்பு செல்வாக்கிழந்து வேளாண்மை மேலோங்கி நின்றது.

வேளாண்மை

சோழர்கள் வேளாண் பொருளாதாரத்தை வளர்ப்பதில் பெரும்பங்கு வகித்தனர். மேல்பாடியில் வேளாண்மைத் தொடர்பான கல்வெட்டுகள் பிரம்மதேயம், பள்ளிசந்தம், தேவதானம், வேட்டப்பேறு, வெள்ளாண்வகை ஆகிய வகைகளாகப் பிரித்து ஆய்வு செய்யலாம். பிரம்மதேயங்கள் பற்றிய செய்திகளை முதலில் ஆய்வு செய்யலாம்.

பிரம்மதேயம்

தமிழ்நாட்டில் பிரம்மதேயம் பற்றிய குறிப்புகள் கி.பி.5-ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றது. பிரம்மதேயம் பிராமணர்கள் குடியிருக்கும் குடியிருப்புகள் என்று பொருள் கொள்ளப்பெறுகின்றது.[13]

பல்லவர் ஆட்சியில் கி.பி. 4-ஆம் நூற்றாண்டு முதல் பிரம்மதேயங்கள் உருவாக்கப் பெற்றன.[14] கி.பி. 501-600 கால கட்டத்தில் பிரம்மதேயம் உருவாக்கப்பெறவில்லை. கி.பி. 601-700-ல் மூன்று பிரம்மதேயங்கள் உருவாக்கப்பெற்றன. கி.பி. 701-800 காலகட்டத்தில் பதினான்கு பிரம்மதேயங்கள் உருவாக்கப்பெற்றன. கி.பி. 900-க்குப்பின் ஒன்பது பிரம்மதேயங்கள் உருவாக்கப்பெற்றன. கி.பி. 701 முதல் 900 வரையிலான காலகட்டத்தில் பிரம்மதேயங்கள் மிகுதியாக உருவாக்கப்பெற்றன. பிரம்மதேயம் உருவாக்கம் பற்றி பல்வேறு கருத்துக்கள் கூறப்பெறுகின்றன. பிரம்மதேயங்கள் நீர் வளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப் பெற்றன. பெரும்பாலான பிரம்மதேயங்கள் ஆற்றங்கரை ஓரத்திலேயே அமைந்திருந்தன. பிரம்மதேயத்தில் வாழ்ந்த பிராமணர்கள் சுற்றியுள்ள வெள்ளாண் வகை ஊர்களில் வாழ்ந்த வெள்ளாளர்கள் வேளாண்மை செய்வதற்கு பருவ நிலை, விதைப்புக் காலம் ஆகிவற்றைக் கூறும் பஞ்சாங்க விற்பன்னர்களாக வாழ்ந்தனர்.[15]

தொண்டை நாட்டுப் பிரம்மதேயங்களில் சில காட்டுப்பகுதிகளிலும் அமைக்கப் பெற்றன. நந்திவர்மனின் காப்பலூர் செப்பேடுகளும், உதயேந்திரம் செப்பேடுகளும் காட்டுப் பகுதியில் பிரம்மதேயங்கள் உருவாக்கப் பெற்றன என்பதை உறுதிப் படுத்துகின்றன.[16] பிரம்மதேயங்கள் பி மணர் குடியிருப்புகளாக மட்டுமின்றி, காட்டுப் பகுதியில் வேளாண்மையை வளர்க்கவும் செயல்பட்டன. வேளாண்மை வளர்ச்சி முதலிடம் வகித்த நிலையில், பிரம்மதேயங்கள் நில உரிமைகளுடன் தொடர்பு கொண்டு விளங்கியது. திருநின்றவூர், பிள்ளைப்பாக்கம் ஆகிய ஊர்களிலிருந்து கிடைக்கும் கல்வெட்டுகள் பிரம்மதேயங்கள் குடும்புகளாகப் பிரிக்கப்பெற்று நிருவாகம் செய்யப்பெற்றன என்று கூறுகின்றன.[17] பிரம்மதேயங்களில் வரும் வருவாயை பிராமணர்களே பகிர்ந்து கொண்டனர். அதனால் பிரம்மதேயங்கள் இறையிலி இருப்பிடமாக செயல்பட்டன எனலாம்.

தேவதானம்

மேல்பாடி கல்வெட்டுகளில், தேவதானம் பற்றிய குறிப்புகள் மிகுதியாகக் கிடைக்கின்றன. இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் மேல்பாடி கோயில்களுக்கு நிலக்கொடை, வரிக்கொடை ஆகிய கொடைகளை அளித்தனர். முதலாம் இராசராசனின் ஆட்சியில் அரிஞ்சிகை ஈஸ்வரத்து மகாதேவர்க்கு நிலக்கொடை அளித்துள்ளான்.

> ''மிந்நாற் பேரெல்லையுள்ளுமகப்பட்ட நிலம் எங்களூரளந்து கூறிட்ட
> பதினெண் சாண் கொலாற்குழி ஐய்யாயிரத்தொருநூற்று

முப்பத்தாறரையும் மித்தெவற்கு தேவதான இறையிலியாகக் குடுத்தோம்''[18]

இக்கல்வெட்டு இராசராசனின் 29-ஆம் ஆட்சி ஆண்டில் வெட்டப்பட்டுள்ளது. இதே ஆட்சி ஆண்டில் மற்றொரு நிலக்கொடை அளிக்கப்பெற்றது.

''அறிஞ்சிகை ஈஸ்வரத்து மகாதெவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்குத் தேவதாநமாக நாங்கள் குடுத்த நிலமாவது எங்களுக்குப் பிடாகையாகப் பெற்றுடைய வூருகளில் மனைவழி கூறிடாது நகரப் பொது வாய்க் கிடந்த..... புலிக்குன்றம் நீர்நிலமுங் கொல்லையுங் காடும் உட்பட வுண்ணில மொழிவின்றி இப்புலிக்குன்றத்து நிலம் எப்பேற்பட்டதும் இத்தேவர்க்கு வேண்டும் நிவந்தங்களுக்குத் தேவதான இறையிலியாக சிலாலேகை செய்து குடுத்தோம்..... நகரத்தோம்''[19]

இக்கல்வெட்டில் தேவதான அளவு குறிக்கப் பெறவில்லை.

முதலாம் இராசராசனின் 14-ஆம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு அந்நாளில் நிலை பெற்றிருந்த நிலவிலையை அறிந்து கொள்ள உதவுகிறது. பதினைந்து கழஞ்சிற்கு 1000 குழி நிலம் வாங்கியிருக்கிறார்கள். அதனால் ஒரு கழஞ்சிற்கு 66.66 குழி விலைக்கு விற்கப் பெற்றது என்று கருதலாம்.

'' படுவூர்க் கோட்டத்து மியாற்று நாட்டு திருவல்லத்து ஸஹெயோம் சோணாட்டு தெண்கரைப் பாம்புணிக் கூற்றத்து அரசூருடையான் ஈராயிரவன் பல்லவரையனான மும்முடிச் சோழ போசன் பக்கல் நாங்கள் கொண்டு கடவ பொன் தர்ம்மக் கட்டளைத்துளை நிறை பதினைங் கழஞ்சு அப்பொன் 15 கழஞ்சுக்கு மாகத் தூய்நாட்டு ராஜாஸ்ரயபுரத்து சோழந்திரசிங்க ஈஸ்வரமுடைய மகாதேவர்க்கு சந்திராத்தியவத் ஒரு திருநந்தா விளக்கெரிப்பதற்கு எங்கள் மேல்பிடாகை வாணஸமுத்திரத்தின் கீழ் மஞ்சிக்குமான நிலம் சிற்றம்பலத்துக் கோலால் வைத்த நிலம் குழியாயிரம்''[20]

இந்நிலத்தில் எள் விளைவித்து எண்ணெய் ஆட்டி விளக்கெரிக்க எண்ணெய் அளிக்கும் பொறுப்பு சங்கரப்பாடியார் மரபினைச் சேர்ந்த கண்டன் மறவனான சோழேந்திர சிங்க மாயிலட்டியைச் சேர்ந்தது.

முதலாம் இராசராசனின் 24-ஆம் ஆட்சி ஆண்டில் நிலத்தினை விலைக்கு வாங்கித் தேவதானமாக அளித்துள்ளனர். இவ்வரசனின் மந்திரவோலை நாயகம் செய்வான் கோனாட்டு நித்த வினோத வளநாட்டுப் பாம்புணிக் கூற்றத்து அரசுருடையான் பல்லவரைய நாந மும்முடி சோழ போசந் என்பவன் நகரத்தாரிடம் நிலத்தை வாங்கிக் கொடையாக அளித்துள்ளான்.

''மும்முடி. சோழ போசந் பக்கல் நாங்கள் கொண்ட பொன்
முப்பதின் கழஞ்சு.....இப்பொந்நுக்காக இத்தேவர்க்கு முப்பதின்
கழைஞ்சுங் கொண்டு இந்நகரத்தோம் இறை இழிச்சி விற்றுக் குடுத்த
நிலமாவது..... இந்நாற்பாற்கெல்லையுள்ளகப்பட்ட
நீர்நிலமும் நஞ்செயும் புஞ்செயும் முண்ணில மொழிவின்றி
எம்மிலிசைந்த விலை ஆவ்ங் கையவரக் கொண்டு தேவதான
யிறையிலியாக இப்ஹீசிக்கு முந்நீர்ப் பாய்ந்துயிறுக்கின்ற பரிசு
நீர்பாயப் பெறுவதாகவும் இப்ஹிஸவ்வரிஹாரமாக இத்தேவர்
க்கு விற்றுவிலை ஹ்ராவணை செய்து குடுத்தோம்''[21]

இக்கல்வெட்டில் நிலத்தின் அளவு குறிக்கப்பெறாமையால், ஒரு கழஞ்சுக்கு எத்தனை குழி விற்றார்கள் என்பது புலப்படவில்லை.

இராசராசனின் 24-ஆம் ஆட்சி ஆண்டில் மேல்பாடி நகரத்தார் தங்கள் பங்கினை நிலக் கொடையாக அளிக்கின்றனர்.

''நகரத்தோம் இவ்வூர் முற்பெருடைய ராஜாஹ்ரய புரவிடங்கர்க்கு
முற்பொ முறைமையால் தம்முடைய பங்கு இந்நகரத்தோம் குடுத்த நிலமாவது
தெந்பிடாகை வெள் பாலை நிலம்.....
இந்நாற்பாற்கெல்லை உள் அகப்பட்ட நீர் நிலமும் நஞ்செயும் புஞ்செயும்
உண்நில மொழிவின்றி இத்தேவர்க்கு இறையிலி ஸவ் பரிஹாரமாக்
குடுத்தோம். இத்தேவரு நாங்கள் பெறுவது பெறுவதாகவும் இறுப்பது
இறாததாகவும் இப்பரிசு பங்கு சிலாலேகை செய்து குடுத்தோம்''[22]

இக்கல்வெட்டு நகரத்தார் தம் பங்கினை அளித்துள்ளனர் என்று கூறுகின்றது. பங்கு எவ்வளவு என்பது புலப்படவில்லை.

தேவதானக் கொடை ஊர்களாகவும், நிலங்களாகவும் மட்டுமின்றி, வரிக்கொடையாகவும் அமைந்திருந்தது. முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு வரிக்கொடையைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. இம்மன்னனின் பதினான்காம் ஆட்சி ஆண்டில் ஐந்து ஊர்களின் வரி சோளேந்திர சிம்மேஸ்வரத்திற்கு அளிக்கும்படி அரசன் ஆணை பிறப்பித்துள்ளான். கல்வெட்டு வாசகம் பின்வருமாறு அமைந்துள்ளது.

''பெரும்பாணப்பாடித் தூய்நாட்டு மேற்பாடியாகி ராஜாஹ்ரயபுரத்த
நாமெடுப்பித்த சோளேந்திரசிங்க ஈஸ்வர மஹாதேவர்க்குத்
தாமர்க் கோட்டத்து கரிவேட்டு நாட்டுக் கரிவேடும் பெரும்பாணப்பாடி
ஒழுகையில் நாட்டு ஒழுகையிலும் இன்னாட்டு வாங்கூர்
கடவ பொன்னீக்கி ஆக இவ்வனைத்தூர்களிலும் யாண்டு

பதினான்காவது பசாந முதல் தேவதான இறையிலியாக வரியிலிட்டுக் குடுத்து இவ்வூர்கள் பிடி சூழ்ந்து பிடாகை நடப்பிப்பதாக வாழைப்பந்தல் கலந்தை அறிவாளன் பூமி சுந்தரனான சுந்தரசோழ மூவேந்த வேளானையும் புரவுவரி நங்கொற்றன் சாத்தன் நம்பியும் ஹட்டந் உத்தரமெலூர் ஸ்ரீகூரஷஹட்டன்யூர் பொத்தொம் தாங்களும் இவர்களுட நின்று எல்லை தெரிந்துக் காட்டிப்பிடி சூழ்ந்து பிடாகை நடந்து கல்லூங் கள்ளியும் நாட்டியற வோலை செய்து போதுக வென்று''[23]

இக்கல்வெட்டில் பயின்று வரும் ஊர்களும், அவற்றில் வந்த வருவாயும் கல்வெட்டின் முற்பகுதியில் குறிக்கப்பெறுகின்றது. கரிவேட்டுக் காணிக்கடன் நெல் 3483 கலம், பொன்[24] 7/8 கழஞ்சு ஒழுகையில் காணிக்கடன் நெல் 1601 கலம், பொன் 131 கழஞ்சு ஒரு குன்றி வாங்கூர் காணிக்கடன் நெல் 527 கலம் பொன் நீக்கப் பெற்றது. பெரும்பானூர் காணிக்கடன் நெல் 527 கலம், பொன் 105 கழஞ்சு ஒரு மஞ்சாடி என தந்து ஊர்களின் வரி கோயிலுக்குத் திருப்பிவிடப்பெற்றது. வரியை மட்டும் கொடையாக அளித்தாலும் அந்த ஊர்கள் தேவதானங்களாகக் கருதப்பெற்றன என்பது இக்கல்வெட்டில் அறிய முடிகின்றது.

முதலாம் இராசேந்திரனின் பத்தாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு கரிவேடு, வாங்கூர், மருதம்பாக்கம், பெரும்பாணூர் ஆகிய ஊர்களில் வரும் வருவாய் கோயிலுக்கு அளிக்கப் பெற்றது என்று கூறுகின்றது. இக்கல்வெட்டில் ஒரு கழஞ்சினுக்கு நெல் 18 கலம் என்று கூறப்பெறுவது அந்நாளில் நிலை பெற்றிருந்த நெல் விலையை அறிந்து கொள்ள உதவுகின்றது.மேலும் ஒரு காசுக்கு நான்கு கல நெல் என்று கூறப்பெறுவது அந்நாளில் நிலை பெற்றிருந்த நெல் விலையை அறிந்து கொள்ள உதவுகின்றது. மேலும் ஒரு காசுக்கு நான்கு கல நெல் என்று கூறுவதால் கழஞ்சுக்கும் காசுக்குமிடையிலான மதிப்பு அறிந்து கொள்வதற்கு உதவியாகவும் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. ஒரு கழஞ்சு 4 காசுகள் என்பது உறுதிப்படுகின்றது.

சோழர் காலத்தில் காசு, கழஞ்சு ஆகிவற்றிற்கும் நெல்லாகப் பெறும் வழக்கம் இருந்தது என்பது இக்கல்வெட்டால் உறுதிப்படுகின்றது.

வாணிகம்

மேல்பாடி சோழர் காலம் முதல் அல்லது அதற்கு முன்பிருந்து வாணிக நகரமாக விளங்கியது. இந்நகரத்தில் வாழ்ந்த வாணிகர்கள் நகரம் என்ற குழுவின் ஆட்சிக்குட் பட்டவர்கள் நானாதேசி, வளஞ்சியர், ஐந்நூற்றுவர் ஆகிய பிரிவினைச் சேர்ந்தவர்கள் அல்ல. ஆனால் நகர வாணிகர் என்ற பிரிவினைச் சேர்ந்தவர்கள் மேல்பாடி நகர வாணிகர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது.

மேல்பாடி நிருவாகம் நகரத்தார் ஆட்சிக்குப்பட்டிருந்தது. மேல்பாடிக்குரிய பிடாகை களும் இவர்கள் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மேல்பாடி நகர சபையில் பலர் உறுப்பினர்களாக விளங்கினர்.[24] இவர்கள் அமைப்பிற்கு கணக்கெழுதும் காரணத்தான் இருந்துள்ளான்.[25]

மேல்பாடி வாணிக நகரத்தின் கட்டுப்பாட்டிலிருந்த போதிலும் வேளாண்மையுடன் தொடர்புடைய நில விற்பனை கூட வாணிக நகரத்தார் ஆட்சிக்குட்பட்டிருந்தது. மேல்பாடியில் சங்கரப்பாடியார் என்ற வாணிகப் பிரிவினர் வாழ்ந்தனர். அவர்கள் எண்ணெய் ஆட்டி வாணிகம் செய்தனர். சங்கரப்பாடி என்பது சாதிக்கலப்பினால் உருவான பிரிவினர் என்று ஒரு சாரார் கருதுகின்றனர்.[26]

வரிகள்

மேல்பாடிக் கல்வெட்டில் இருபதுக்கும் மேற்பட்ட வரிகள் குறிக்கப்பெறுகின்றன. அவை சோழர் காலம் முதல் வழக்கத்திலிருந்தன. சில வரிகள் சோழர்களுக்கு முன்பிருந்தே வழக்கதிலிருந்தன. கடமை, இறை, காணிக்கடன், வெட்டி, தனியாள், சிறுபாடி காவல், கண்காணி எடுத்தக்கொட்டி அரிக்கை கனக்கு மிகுதி, வெட்டிப்புடவை, கார்த்திகை காசு, நாற்காசு, ஏரிமீன்பாட்டம், ஆசுவிகள் பேர்கடமை, ஆச்சுத்தறி, பறைத்தறி, சாலியத்தறி, வேலிப்பயறு, தரப்படி அரிசிதுணி, நிலத்திற்பசுகடமை, செக் கடமை, பேர்கடமை பரிமாறுவார் பேர்கடமை, வாணியர் பேர்கடமை, வாசர் மஞ்சாடிக் கடமை, பாலிக்கப்பாட்டம், மன்றாடிகள் போர்க்கடமை, பொன்வரி, வேண்டுகோள், நல்லெருது, நற்கிடா, காணிக்கை, கார்த்திகை பச்சை புடவை, மாவடையப்படி, ஆகிய வரிகள் குறிக்கப்பெறுகின்றன.[27]

சோழர் காலத்தில் வாங்கப் பெற்ற வரிகளைக் குறிக்கும் சொற்களின் பொருளைத் தெரிந்து கொள்வது கடினமாக உள்ளது. ஒவ்வொரு சொல்லும் பயன்படும் இடம் நோக்கிப் பொருள் கொள்ள வேண்டும். சோழர் காலத்தில் வாங்கப்பட்ட அனைத்து வரிகளும் சில கல்வெட்டுகளில் கூறப்பெற்றுள்ளன. இந்த வரிகள் நெல்லாகவும், காசாகவும் வாங்கப் பெற்றுள்ளன. வரி ஒவ்வொன்றும் வாங்கப்பெற்ற அளவு பற்றி ஏதும் குறிக்கப் பெறவில்லை. வரிகள், ஆயம், கடன், இறை, புரவு, சிற்றாயம், அந்தராயம் எனப்பல பெயர்களால் அழைக்கப்பெற்றன. கானம் என்ற சொல்லும் வரியைக் குறிக்கப் பயன்படுத்தப் பெறுகின்றது.

அந்தராயம்

இவ்வூர் உள்வரி என்று பொருள் கொள்ளப் பெறுகின்றது. ஊர்ச்சபை நாட்டவர் போன்ற குழுக்களுக்கு அளிக்கும் வரி என்று பொருள் கொள்ளப் பெறுகின்றது.

அரிபணம்

பொருள் விளங்கவில்லை.

ஆச்சுத்தறி

இது நெசவுத் தொழிலில் ஈடுபட்டோர் இறுக்கும் வரி எனலாம்.

ஆசுவிகள் பேர் கடமை

இந்த வரி பற்றி பல அறிஞர்கள் கருத்து கூறியுள்ளனர். சக்கரவர்த்தி நயனார், ஏ. எல். பாஷாம், தி. ந. சுப்ரமணியம், ர. விஜயலட்சுமி ஆகியோர் இவ்வரி பற்றி ஆய்வு செய்துள்ளனர். இந்த வரி கோலார் மாவட்டம் (கர்நாடகம்), சித்தூர், நெல்லூர் மாவட்டங்கள்(ஆந்திரம்) பழைய வடாற்காடு மாவட்டம்(தமிழ்நாடு) ஆகிய பகுதிகளில் உள்ள கல்வெட்டு செப்பேடு ஆகியவற்றில் பயின்று வருகின்றது. [28] மேலே கூறப்பெற்ற அறிஞர்களில் இறுதியில் குறிக்கப்பெற்ற ர. விஜயலட்சுமி அவர்கள் ஆசுவிபேர்கடமை பற்றி விரிவாக ஆய்வு செய்துள்ளார். ஏ.எல்.பாஷாம் எடுத்துக்காட்டும் கல்வெட்டுச் சான்றுகள் முழுமையும் தந்துள்ளார். அவர் காட்டும் சான்றுகள் குறிப்பிடத்தக்கவை.

கல்வெட்டுகளில் ஆசுவக்கடமை, ஆசுவிக்கடமை, ஆசுவிகள் பேர்கடமை, ஆசுவி பொதுமக்கள் பேரால் வந்த கடமை, ஆசுவிப் பேறு, ஆசுவம் அவலம்பலம், ஆசுவம் ஒளலம்பல.....ரிகை, சிறுசுங்கத்திற்கு ஆசுவி மக்கள் ஆசுவம் உண்ணும்பேரால் ஒரு காவிடுவது, ஆசுவுலப்பற்று, ஆசுவி காசு, ஆசுவிகள் பேரால் காசு என்று பலவாறாக இந்த வரி குறிக்கப்பெறுகின்றது.[29]

ஏ.எல்.பாஷாமிற்கு முன்பு தி.ந.சுப்பரமணியம் அவர்கள் விழவெட்டி செப்பேடுகளைப் பதிப்பித்தார். அவர் செப்பேட்டில் வரும் ஆபணாஜீவிகா என்ற சொல்லை ஆபணா + ஆஜீவிகா என்று பிரித்துப் பொருள் கொள்கின்றார்.[30] அவ்வாறு கொள்ளும் போது ஆஜீவிக என்று வரும் சொல் ஆசீவகர்களைக் குறிக்கும் என்றும் பொருள் கொள்கிறார். இவருக்கு முன்பே கிருஷ்ணமாச்சார்லூ இச்செப்பேட்டைப் பதிப்பிக்கும் போது இதே போல் பிரித்து ஆஜீவிகா என்பது ஆசீர்வகர்களைக் குறிக்கும் என்று கொண்டார்.[31] ஆனால் அவரே ஒரு சந்தேகத்தை எழுப்பியுள்ளார்.[32] இச்சொல்லைப் பிரிக்காமல் ஆபணாஜீவீகா என்று ஒரே சொல்லாக கொண்டு கடை வைத்துப் பிழைப்போர் என்று பொருள் கொள்ளவும் வாய்ப்புண்டு என்கிறார். இச்சொல்லை இரண்டாகப் பிரிப்பதன் குழப்பத்தை ர. விஜயலட்சுமி அவர்களும் எடுத்துக்காட்டியுள்ளார்.[33]

இச்சொல் குதிரை வளர்ப்போர் தொடர்பான சொல் என்று விஜயலட்சுமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

"இந்த வரி, பல இடங்களில் நெசவாளர், தறி மேலிட்டவரி, தட்டார் மேல் இட்டவரி, செக்கு வரி, உவச்சர் வரி முதலியவற்றுடன் சேர்ந்தே வருவதை நாம் காணலாம். முன்னர் எடுத்துக்காட்டிய முள்பாகல் (Mulbagal) கல்வெட்டொன்றில் (எண் 4) இவ்வரி பசு, எருது முதலியவற்றுடன் சேர்ந்து வருவதால், இவ்வரி குதிரை வளர்ப்போர் மேல் இடப்பட்ட வரியே என்ற கருத்தை வலுப்பெறச் செய்கின்றது. குறிப்பாக இக்கல்வெட்டில் பசுவுடனும், எருது

வரி கூறப்பட்டிருப்பதுவே பொருத்தமாகின்றது. இது தவிர்த்து, ஆசுவி என்பது ஆசீவகர்கள் மேல் இடப்பட்ட வரி எனப்பொருள் கொள்வது ஏற்புடையதாகாது, ஏனெனில்,

> ''.....ஊர்க்கீழ் இரு.....குமாகச்சனம் வணணர்
> நல்லெருது நற்..... பசு உள்ளிட்ட அந்த.....
> பேரால் இரண்டு காசிடுவதாகவும் சிறு..... சுங்கத்துக்கு
> ஆசுவி மக்கள் ஆசுவம் உண்ணும் பேரால் ஒரு
> காசிடுவதாகவும்

எனும் பகுதியில் ஆசுவிமக்களை ஆசீவகர்களாகக் கொண்டால் ''ஆசுவம் உண்ணும் பேரால்'' என்பதற்குப் பொருத்தமான விளக்கமளிக்க முடியாது. அதே நேரத்தில் '' ஆசுவம் உண்ணுபேரால்'' என்ற தொடருக்குக் குதிரைகள் மேய்வதனால் அந்த நிலத் திற்கு இடப்பட்ட வரியைக் குறிப்பதாகக் கொள்ளின், அது பொருத்தமானதாக அமைகிறது.''[35]

சக்கரவர்த்தி நயினார் அவர்கள். ஆசு என்பது அச்சைக் குறிக்கும் என்று கூறுவார். அதனால் அச்சு தயார் செய்யும் அல்லது வார்ப்படம் தயார் செய்யும் தொழிலைச் செய்பவர்கள் செலுத்திய வரி என்று அவர் பொருள் கொள்கிறார்.[35]

ர.விஜயலட்சுமி அவர்கள் முடிபுக்குத்தடையாக ஒரு கல்வெட்டு உள்ளது. வேலூர் மாவட்டம், காவனூர் கல்வெட்டில் ஆசிவி மாக்கள் என்பது ஆஜீவி பேர் பொதுமக்கள் என்று கூறுகின்றது. [36] அதனால் ஆசிவி மக்கள் என்பது வேறு பொருளில் வழங்கியிருக்க வேண்டும் எனலாம்.

நீர்ப்பாசனம்

தொண்டை மண்டலத்தில் சங்க காலத்தில் நீர்ப்பாசன வாய்ப்புகள் உருவாக்கப் பெற்றன என்பது பெரும்பாணாற்றுப்படையால் உறுதிப்படுத்தப்படுகின்றது.[37] சங்க காலத்தை அடுத்து ஆட்சி செய்த பல்லவர்கள் தொண்டை மண்டலத்தின் வடபகுதி யிலும், மேற்குப் பகுதியிலும் ஏரிகள், வாய்க்கால்கள் ஆகிவற்றை உருவாக்கிச் சிறப்படைந்தனர். வைரமேகதடாகம், மகேந்திர தடாகம் என அரசர் பெயராலேயே ஏரிகளை உருவாக்கும் நிலை பல்லவர் காலம் முழுவதும் நிலை பெற்றிருந்தது.[38] சோழர் களும் பல்லவர்களைப் போலவே நீர்ப்பாசன வாய்ப்புகளை உருவாக்கிப் பெருமை பெற்றனர்.[39]

நூகாவாறு

மேல்பாடிக் கல்வெட்டில் இவ்வாறு பற்றி பல குறிப்புகள் கிடைக்கின்றன. நீர்ப்பாசனம் பற்றிய குறிப்புகளில் இவ்வாறு குறிக்கப் பெறவில்லையானாலும், எல்லை குறிப்பிடும்போது இவ்வாறு குறிக்கப்பெறுகின்றது. பத்து இடங்களிலாவது இவ்வாறு பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.[40] இந்தச் செய்திகள் நூகாவாறு மேல்பாடி மக்கள்

வாழ்க்கையில் வரலாற்றுக் காலந்தோறும் இரண்டறக் கலந்து நின்ற தன்மையை வலியுறுத்தும்.

ஆற்றுக்கால்வாய்

பல்லவர்கள் பாலாற்றிலிருந்து பல்வேறு ஏரிகளுக்குக் கால்வாயினை வெட்டி நீர் வளத்தினை பெருக்கினர். அதுபோலவே தொண்டை மண்டலத்தில் பாய்ந்த ஆறுகளிலிருந்து வாய்க்கால்களை வெட்டி ஏரிக்கு நீர் பாயச் செய்தனர். சோழர்களும், பல்லவர்களைப் பின்பற்றி ஏரிகளுக்கு ஆற்றிலிருந்து கால்வெட்டி நீர்வரத்தினை அதிகரிக்க செய்தனர். மேல்பாடியில் கிடைக்கும் இரண்டு கல்வெட்டுகள் ஏரிக்கு நீர்பாய வெட்டப் பெற்ற கால்வாயைப் பற்றிய குறிப்புகளை தருகின்றன.[41]''மும்முடி சோழீஸ்வர சதுர்வேதி மங்கலத்து ஏரிக்குப் பாய்ந்த வாய்க்கால்''என்றொரு வாய்க்கால் குறிக்கப்பெறுகின்றது.[42]

ஏரிகள்

பெரும்பாணப்பாடியிலும், படுவூர்க் கோட்டத்திலும் பல்வேறு ஏரிகள் குறிக்கப் பெறுகின்றன. தொண்டை மண்டலத்தின் நிலப்பரப்பு வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் எல்லாம் ஏரிகளை வெட்டி நீர்ப்பாசன வாய்ப்புகளை உருவாக்கினர். அந்த மரபினைப் பின்பற்றி மேல்பாடிப் பகுதியிலும் இரண்டு ஏரிகள் வெட்டப்பெற்றன. ஓர் ஏரியின் பெயர் குமிழனேரி என்பதாகும்.[43] மற்றொரு ஏரி ஊர்ப்பெயருடன் சேர்த்து மும்முடி சோழீஸ்வர சதுர்வேதிமங்கலத்து ஏரி என்று குறிக்கப்பெறுகின்றது.[44]

கிணறுகள்

கிணறுகள் பற்றிய குறிப்பு ஏதும் கிடைக்கவில்லை. அதற்கான காரணம் விளங்கவில்லை. அந்நாளில் ஆற்று நீராலோ, ஆற்றில் வெள்ளம் வரும்போது வாய்க்கால் மூலம் நீரினைத் தேக்கி ஏரி மூலம் நீர்ப்பாசன வாய்ப்புகள் உருவாக்கப் பெற்றமையால் கிணறு வெட்ட வேண்டிய அவசியம் இல்லாமல் போயிருக்கலாம். மேல்பாடியிலிருந்த நிலம் நகரத்திற்குப் பொதுவாக வைக்கப் பெற்றிருந்தமையால், கிணறு வெட்ட வேண்டிய வாய்ப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும்.

நீர் நிருவாகம்

தொண்டை மண்டலத்தில் நீர்வளம் குறைந்திருந்தமையால் நீரினை முறைப்படுத்தி செலவழிக்க வகை செய்திருந்தனர். ''முந்நீர் பாய்ந்தபடியே இப்பூமிக்கு நீர் பாய்வதகாவும்'' என்று நீர் பாய்ச்சுதல் பற்றி குறிப்புகள் கிடைக்கின்றன.[45]

வாய்க்கால் வடகடை நீர் பாயும் நிலம் என்று மற்றொரு கல்வெட்டு கூறுகின்றது. மேல்பாடியில் நிலம், கால்வாய், கண்ணாறு, பாத்தி, பாடகம், குடும்பு என்று பிரித்து பயிர் செய்யும் வகையில் நீர்ப்பாசனம், நிலப்பிரிவினை அமைத்திருக்கவில்லை. அதனால்

நீர்ப்பாசனம் விரிவான நிருவாக அமைப்பிற்குள் அமையவில்லை எனலாம். மேலும் நீர் நிருவாகத்தை நகரத்தாரே மேற்பார்வையிட்டிருக்க வேண்டும். அதனால் நீர் நிருவாகம் பற்றி விரிவான செய்திகள் கிடைக்வில்லை எனலாம்.

நாணயங்கள்

மேல்பாடிக் கல்வெட்டில் கழஞ்சு, காசு ஆகிய சொற்கள் நாணங்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. இவற்றில் கழஞ்சு தான் மிகுதியும் குறிக்கப்பெறுகின்றது.[46] சோழர் காலத்தில் 20 மஞ்சாடி கொண்ட கழஞ்சு 72 தானிய எடை கொண்டது[47] பராந்தகன் கல்வெட்டு ஒன்று கழஞ்சுவை வடமொழி நிஷ்காவுக்கு சமமானதென்று கூறுகின்றது. மாடை என்ற சொல் காசினைக் குறிக்கப் பயன்படுத்தப் பெறுகின்றது. மாடையும், பொன்னும் கழஞ்சுக்குச் சமமாக கருதப்பெற்றது.[49] மதுராந்தகன் மாடை என்ற காசு முதலாம் இராசராசனின் இருபத்தி ஒன்றாம் ஆட்சி ஆண்டில் குறிக்கப் பெறுகின்றது.[50] ஆனால் மேல்பாடிக் கல்வெட்டில் பொன் என்ற காசு வகை குறிக்கப்பெறவில்லை. மாடை என்ற காசு வகை மூன்றாம் இராசராசன் காலத்தில் குறிக்கப்பெறுகின்றது.

காசு

காசு என்ற நாணய வகை இரண்டாம் ஆதித்தன் காலத்தில் முதல் முதலாகக் குறிக்கப் பெறுகின்றது. அவன் கல்வெட்டில் காசுக்கும், கழஞ்சுக்குமிடையிலான மதிப்பீடு தரப்பெற்றுள்ளது.[51] அந்த மதிப்பீட்டில் 20 காசுகள் 10 கழஞ்சுக்குச் சமமாகத் தரப்பட்டுள்ளது. அதனால் ஒரு கழஞ்சுக்கு இரண்டு காசு சமமாகப் கருதப்பட்டது தெரிகின்றது. ஆனால் மேல்பாடிக் கல்வெட்டு இந்த மதிப்பீட்டை சிறிது வேறுபடுத்திக் காட்டுகின்றது. கல்வெட்டு வாசகத்தை எடுத்துக்காட்டினால் உண்மை விளங்காமல் போகாது.

> ''பொன் கழஞ்சினுக்கு நெல்லுப் பதின்கலமாக
> ..... காசு ஒன்றினுக்கு நெல்
> நாற்கலமாக''[52]

என்று கூறுவது கழஞ்சினுடைய மதிப்பு சிறிது வேறுபட்டுக் காணப்படுவது விளங்கும். ஒரு கழஞ்சுக்கு இரண்டு காசு என்ற நிலைமாறி ஒரு கழஞ்சனுக்கு இரண்டரை காசு என்ற நிலை ஏற்பட்ட சிறிய அளவிலான மாற்றத்தைக் காட்டுகின்றது.

அளவுகள்

நில அளவுகள் மிகுதியும் பயின்று வருகின்றன. குழி என்ற அளவு தான் மிகுதியும் குறிக்கப் பெறுகின்றது. குழியை அளக்க பதினெண்சாண் கோல் என்று குறிக்கப்பெறு கின்றது. கோல் பல்வேறு அளவுகளால் குறிக்கப்படுகின்றது.[53] கோலைக் குறிக்கும் போது பதினெண் சாண், 24 சாண் என வேறுபட்ட அளவுகள் குறிக்கப் பெறுகின்றன. அதனால் நிலத்தின் அளவு வேறுபடுகின்றது.

முகத்தல் அளவை

நெல் அளவைக் குறிக்கும் போது கலன், தூணி, பதக்கு என்று கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அளவைக் குறிப்பிடும்போது ராசகேசரி என்ற பெயரால் குறிக்கப் பெறுகின்றது. நெய் அளப்பதற்கும் ராசகேசரி என்ற உழக்கு குறிக்கப் பெறுகின்றது.[54]

நிறுத்தல் அளவு

நிறுத்தல்அளவுக்கு கழஞ்சு, மஞ்சாடி, குன்றி என்று நிறுத்தல் அளவுகள் குறிக்கப் பெறுகின்றன.[55]

அடிக்குறிப்புகள்

1. S.I.I. Vol. III, Nos.16, 17
2. ஆர். பூங்குன்றன், தொல்குடிவேளிர் அரசியல், ப. 43
3. பின்னிணைப்பு
4. மேலது
5. பெரும்பாணாற்றுப்படை, வரி, 185
6. S.I.I. Vol. III, No.54
7. சி. கோவிந்தராசன், கல்வெட்டுக்கலைச் சொல் அகர முதலி, ப. 405
8. ஆர். பூங்குன்றன், மன்றாடியார், தீரன் சின்னமலை சிலை திறப்பு விழா மலர், 1996
9. மேலது
10. மேலது
11. மேலது
12. தி.ஸ்ரீ. ஸ்ரீதர், கோயம்புத்தூர் மாவட்டக் கல்வெட்டுகள், தொகுதி – i எண்.
13. P. Shanmugam, Brahmadeyas in the Pallava Country in Kaveri, P. 331
14. Ibid. PP. 332
15. Burton Stein, Peasant State and Society in Medieval South India, P.152
16. பல்லவர் செப்பேடுகள் முப்பது, பக். 103-106
17. K.V. Subrahmanyia Aiyer, Historical Sketches in Ancient Dekhan, Vol.III, PP. 286-88

18. பின்னிணைப்பு

19. S.i.I. Vol. III, No.16

20. பின்னிணைப்பு

21. மேலது

22. மேலது

23. மேலது

24. S.I.I. Vol. III, No. 16,17

25. மேலது

26. Burton Stein, Op. Cit. P. 249

27. பின்னிணைப்பு

28. ர. விஜயலட்சுமி, தமிழத்தில் ஆசீவகர்கள், பக். 77-78

29. A. L. Basham, History and Doctiones of Agivikas: P. 188.

30. Ibid

31. Ibid

32. Ibid

33. ர. விஜயலட்சுமி, முன். கு. நூ.பக். 93-94

34. மேலது

35. A. Chakravarthi Nayinar, Neelakesi Introduction. P. 261

36. S. Swaminathan Rashtrakuta Inscriptions in the Tamil Country, No.91

37. பெரும்பாணாற்றுப்படை, வரிகள் 271-2

38. மயிலை சீனி, வேங்கடசாமி, மகேந்திரவர்மன், பக். 5-6

39. S.I.I. Vol. III, No.15,16,17

40. பின்னிணைப்பு

41. S.I.I. Vol. III, No.15,16

42. பின்னிணைப்பு

43. மேலது

44. மேலது

45. S.I.I. Vol. III, No.15.

46. Ibid பின்னிணைப்பு

47. K. A. Nilakanta Sastri, The Colas, P. 613

48. Ibid

49. Ibid P. 614

50. Ibid P. 513

51. Ibid P. 514

52. பின்னிணைப்பு

53. மேலது

54. S.I.I. Vol. III, No.17

55. பின்னிணைப்பு

சமயமும் சமுதாய வாழ்க்கையும்

மேல்பாடிக் கல்வெட்டுகளில் சமயம், சமுதாயம் ஆகியவை பற்றிய செய்திகள் குறைவாகவே கிடைக்கின்றன. தொண்டை மண்டலத்தில் நிலை பெற்றிருந்த சமயங்களில் சமணம், வைணவம், சைவம் ஆகிய சமயங்கள் மேல்பாடியிலும் அவ்வூரைச் சுற்றியுள்ள ஊர்களிலும் செல்வாக்கு பெற்று விளங்கின. சைவத்தில் தீவிரவாதப் பிரிவாகக் கருதப்பெறும் இலகுலீசபாசுபதம் இவ்வூரில் செல்வாக்கு பெற்று விளங்கியது. சோழர் காலம் பக்தி இயக்கத்தில் செல்வாக்குட்பட்ட காலம். அதனால் கோயில் கட்டுதல், கட்டிய கோயில்களுக்கு நிலத்தன்மம் அளித்தல் ஆகிவற்றில் சோழர்கள் முனைப்பாக விளங்கினர். அது மட்டுமின்றி சோழர் அரசின் செல்வாக்கு கோயில் வழிபாட்டுடன் பிண்ணிப் பிணைந்துள்ளது. அரசன் கோயிலுக்குக் கொடை அளிப்பதன் மூலம் மக்களிடையே தன் செல்வாக்கினை உயர்த்திக் கொள்கிறான்.

சமணம்

சமண சமயம் தொண்டை மண்டலத்தின் சங்க காலம் முதல் நிலை பெற்றுள்ளது. தூசிமாமண்டூரில் உள்ள சமணப் படுக்கையும், பிராமிக் கல்வெட்டும் இதற்கு சிறந்த சான்று. சங்கம் மருவிய காலத்திலும் சமணம் இப்பகுதியில் செல்வாக்கு பெற்றிருந் தமைக்கு, பல சான்றுகள் கிடைத்துள்ளன. செஞ்சி பனப்பாக்கம், சேதரம்பட்டு, வள்ளிமலை (மேல்பாடி அருகில் உள்ள ஊர்) திருப்பாண்மலை, அகளூர் (செஞ்சி) திருநாதன்குன்று, (செஞ்சி) ஆகிய ஊர்களில் படுக்கையுடன் சமண சின்னங்கள், கல்வெட்டுகள் ஆகியவை கிடைத்துள்ளன.[1]

இவற்றில் அகளூர் தமிழ்ப் பிராமிக் கல்வெட்டு கி.மு. முதல் நூற்றாண்டு என்றும்,[2] திருநாதன் குன்று கல்வெட்டு கி.பி. 5-ஆம் நூற்றாண்டு என்றும் கருதப் பெறுகின்றது. திருப்பாண்மலையில் மகேந்திரவர்மன் காலத்தில் குடைவிக்கப் பெற்ற குடைவரை கோயில்கள் உள்ளன. தமிழகத்திலேயே காலத்தால் முற்பட்ட இயக்கியின் உருவமும், கல்வெட்டும் உள்ளன.[3]

திருப்பருத்திக்குன்றம், வெடால், திருமலை, தச்சாம்பாடி, பூண்டி, மலையாம்பட்டு, புழல் முதலிய ஊர்களில் சமண சமயத்தின் எச்சங்கள் உள்ளன.[4] இவ்வூர்களில் இயக்கி வழிபாடும் தீர்த்தங்கரர் வழிபாடும் பெருமை பெற்று விளங்கின. திருப்பருத்திக்குன்றம்

கி.பி. 6-ஆம் நூற்றாண்டிலிருந்து சமணப்பதியாக விளங்குகின்றது.[5] இவ்விரு ஊர்களிலும் சோழர்களின் ஆதரவில் தொடர்ந்து சமணம் செழித்து வளர்ந்தது. முதலாம் இராசராசன் முதல் இராசேந்திரன் ஆகிய மன்னர்கள் காலத்துக் கல்வெட்டுகளில் பள்ளிச்சந்தம் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.[7] ஆனால் இம்மன்னர்களுக்குப் பின் பள்ளிச்சந்தம் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை.[8] அதனால் வள்ளிமலை சமணப்பள்ளி படிப்படியாகச் செல்வாக்கு குறைந்து வந்த தன்மை புலப்படாமல் போகாது. வள்ளிமலை சமணர் பள்ளியில் இயக்கியின் உருவங்கள், அங்கு தவமிருந்த கங்க இளவரசி உருவம், தீர்த்தங்கரர் உருவம் கன்னட மொழிக் கல்வெட்டு ஆகியவை கன்னட நாட்டுச் சமண சமயத்தைச் சுட்டுகின்றன.[9] கன்னட நாட்டில் செல்வாக்கு பெற்று விளங்கிய யாப்பனியம் என்ற சமணப் பிரிவு இப்பகுதியில் பரவியிருக்கலாம் அல்லது திராவிட சங்கமாகவும் இருக்கலாம்.[10]

வைதீக சமணம்(Orthodox) தென்னிந்தியாவில் செல்வாக்கு பெறவில்லை, மாறாக, யாப்பனியம், திராவிட சங்கம், சிஸ்த சங்கம் போன்ற சமணப் பிரிவுகள் கருநாடகத்தில் தோன்றி செழிப்படைந்தன.[11] அந்தச் சமயங்கள் தமிழகத்தின் வடபுறத்தில் செல்வாக்கு பெற்று வந்தன.[12] கருநாடக சமணப் பிரிவுகள் பெண்மை போற்றுதல், மாந்திரிகம் செய்தல் ஆகியவற்றில் மிகுந்து ஈடுபாடு காட்டின. பெண்மையைப் போற்றியமையால் இயக்கி வழிபாடு சிறப்புற்றது.[13]

தொண்டை மண்டலத்தில் இயக்கி வழிபாடு சிறப்புற்ற தன்மைக்கு திருப்பாண்மலை, திருமலை, வள்ளிமைல, பூண்டி போன்ற ஊர்களில் கிடைக்கும் இயக்கி வழிபாட்டு உருவங்களே சிறந்த சான்றுகள்.[14] வடநாட்டில் இயக்கி வழிபாடு தீர்தங்கரர்க்கு அடுத்த நிலையிலேயே வைக்கப் பெற்றிருந்தது.[15] ஆனால் தென்னிந்தியாவில் இயக்கி வழிபாடு சமமான நிலையில் வைத்துப் போற்றப் பெற்றது. இந்தப் போக்கின் சான்றுகள் மேல்பாடி அருகில் உள்ள வள்ளிமலை சமணப் பள்ளியில் பார்க்க முடியும்.

சைவம்

தொண்டைமண்டலத்தில் சைவம் சமயக்குரவர்கள் வருகையுடன் செல்வாக்கு பெறுகின்றது. பல்லவர் காலத்தில் தொடங்கிய பக்தி இயக்கம் தொண்டை மண்டலத்தில் சைவ சமய எழுச்சிக்கு காரணமானது.

இங்கு ஆட்சி செய்த பலலவ மன்னர்கள் சைவ சமயத்தை வளர்த்தார்கள். மகேந்திர வர்மன் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினான் என்பது திருச்சி குடைவரை கோயில் கல்வெட்டாலும், பெரிய புராணத்தாலும் உறுதிப்படுகின்றது.[16] முதலாம் நரசிம்மன், முதலாம் பரமேஸ்வரன், இரண்டாம் நரசிம்மன் ஆகியோர் பெருமளவில் சிவன் கோயில்களை உருவாக்குவதில் பெருமை பெற்றனர்.[17] நந்திவர்மன் சைவ சமயத்தைப் போற்றுவதில் முன்னின்றான்.[18] சோழர்கள் பாடல் பெற்ற தலங்களில் கற்றளிகளை எழுப்பினர். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பல ஊர்களில் கற்றளிகளை எழுப்பினர். தேவாரப்

பதிகங்களை கோயில்களில் பாட வைத்தனர்.[19] சோழர் காலத்துக் கோயில்களில் சைவ மரபினைப் போற்றும் செப்புத் திருமேனிகள் செய்தளிக்கப் பெற்றன. அவை படிமக்கலை வரலாற்றில் புதிய கோட்பாடுகளைச் சுட்டுகின்றன.[20] மேலும் சைவ சமயத்திற்கு சோழர்கள் அளித்த பேராதரவினைக் காட்டுகின்றன.

இலகுளீசபாசுபதம்

மேல்பாடி அரிஞ்சிகை ஈஸ்வரத்தில் உள்ள முதலாம் இராசேந்திர சோழனின் கல்வெட்டு ஒன்று மடமுடைய இலகுளீச பண்டிதர் பற்றிக் குறிப்பிடுகின்றது.[21] அதனால் மேல்பாடியில் இலகுளீசபாசுபதம் செல்வாக்கு பெற்று நின்ற தன்மையை உணர முடியும். இலகுளீசபாசுபதம் தொண்டை மண்டலத்தில் பரவியிருந்தது. கச்சி காரோசணம் என்று பெயர் கொண்ட சிவன் கோயில் கச்சியிலிருந்தது. இக்கோயிலின் பெயர் இலகுளீச பாசுபதத்தோடு தொடர்புடையது.[22] இலகுளீசபாசுபதத்தை உருவாக்கிய இலகுளீசர் தோன்றிய ஊர் காயாரோகனம்.[23] இவ்வூர் குஜராத்தில் உள்ளது. இலகுளீசரைப் போற்றும் வகையில் அவர் பிறந்த ஊர்ப்பெயரை சிவன் கோயிலுக்கு வைத்துப் போற்றினர்.[24] நாகை காரோணம், குடந்த காரோணம் ஆகிய கோயில் பெயர்களும் இங்கு நினைக்கத்தக்கவை.[25] காயாரோகணம் என்ற பெயரே காரோணம் என்று திரிந்துவிட்டது.

பாசுபதத்தை உருவாக்கிய இலகுளீசர் சிற்பங்கள் மகாபலிபுரம் தர்மராஜரதத்திலும், திருவொற்றியூர் கோயிலிலும் உள்ளன. முன்னது கி.பி. 8-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது. பின்னது கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.[26] தொண்டை மண்டலத்தில் இலகுளீச பாசுபதம் செல்வாக்கு பெற்றிருந்தமைக்குக் காரணம் சோழர்கள் கட்டிய பள்ளிப்படை கோயில்கள் ஆகும்.[27] அக்கோயில்கள் ஆகமக் கோட்பாடுகளுக்கு அப்பாற்பட்டவை. அதனால் இலகுளீசர்கள் ஆளுகையில் அவை விடப்பட்டன.

பாசுபத சைவம் கி.மு. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றும் கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் தோன்றியது என்றும் இருவித கருத்துக்கள் நிலவுகின்றன.[28] பாசுபதத்தில் போற்றப்படும் மாகேஸ்வரர் வழிபாடு குஷாணர் காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தது. என்பதற்கு வீமகட்பிஸஸ் காசுகளே சான்று.[29] அவன் கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்தவன்.

பாசுபதத்தில் சில சீர்த்திருத்தங்களைச் செய்த இலகுளீசர் இலாட நாட்டினைச் சேர்ந்தவர். இலகுளீசச பாசுபதம் பழமைவாதத்தினைப் பின்பற்றுவது யோகத்தையும், பக்தி நெறியினையும் போற்றிய பெருமை இலகுளீச பாசுபதத்திற்கு உண்டு.[30] சாதவாகனர் காலத்தில் இச்சமயம் மேற்கிந்தியாவிலிருந்து தென்னிந்தியாவிற்குப் பரவியது. கி.பி. 3-4-ஆம் நூற்றாண்டளவில் கர்நாடகத்திலும், ஆந்திராவிலும் பரவிச் சிறப்படைந்தது.[31]

இச்சமயம் தமிழ்நாட்டில் யாண்டும் பரவவில்லை என்ற கருத்து நிலவி வந்தது. ஆனால் அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட இலகுளீசர் சிற்பங்கள் பாசுபத சமயம்

தமிழகத்தில் பரவியிருந்த தன்மையைப் புலப்படுத்தும். சித்தவட மடம் (ஆந்திரம்), அரிட்டாபட்டி (மதுரை), பேரூர் (கோவை) ஆகிய ஊர்களில் மட்டும் இச்சமயம் பரவியிருந்தமை மேலே காட்டிய சான்றுகளால் விளங்கும்.[32]

பேரூரில் உள்ள இலகுளீசர் சிற்பம் குறிப்பிடத்தக்கது.[33] கொடலூரு மாரியம்மன் கோயிலுக்கு அருகில் இச்சிற்பம் உள்ளது. பத்மாசன நிலையில் அமர்ந்துள்ளார். வலக்கரத்தில் கபாலமும், இடக்கரத்தில் தண்டமும் உள்ளது. ஜடாபாரத்துடன் காட்சி அளிக்கின்றார். காதில் குண்டலங்கள் உள்ளன. இச்சிற்பம் மேலைக் கங்கர் கலை மரபினைப் பின்பற்றி வடிக்கப்பட்டுள்ளது. கி.பி. 7-8-ஆம் நூற்றாண்டினைச் சேர்ந்தது. கி.பி 6-ஆம் நூற்றாண்டிலிருந்து கொங்கில் கங்கர்கள் ஆதிக்கம் நிலை பெற்றது. கங்க வம்சத்தினைத் தோற்றுவித்தவர்கள் பேரூரில் வாழ்ந்த சமண முனிவர்கள் அருளாசி பெற்றதாக அவர் தம் செப்பேடுகள் கூறும்.[34] அதனால் கங்கர்க்கும், பேரூருக்கும் இடையில் உள்ள நெருங்கிய தொடர்பு புலப்படும். தற்போது கண்டுபிடிக்கப்பட்ட இலகுளீசர் சிற்பம் அத்தொடர்பினை வலியுறுத்தி நிற்கின்றது. கங்கவாடியிலிருந்து பாசுபதம் கொங்கில் காலூன்றியது என்று கூறலாம்.

வைணவம்

மேல்பாடி விஷ்ணு கோயில் பிற்காலத்தில் கட்டப்பெற்றது. இவ்வூருக்கருகில் உள்ள எருக்கம்பட்டு என்ற ஊரில் உள்ள விஷ்ணு கோயில் மூன்றாம் கிருஷ்ணன் காலத்தில் கட்டப்பெற்றது.[35] தொண்டை மண்டலத்தில் வைணவம் செல்வாக்குப் பெற்றிருந்த தன்மை பெரும்பாணாற்றுப் படையில் குறிக்கப்பெறுகின்றது.[36] பல்லவர் காலம் முழுவதும் வைணவம் செல்வாக்குப் பெற்ற சமயமாக விளங்கியது. திருவல்லிக்கேணி, திருமழிசை, மாமல்லபுரம், காஞ்சிபுரம், பள்ளிகொண்டா முதலிய ஊர்களில் திருமால் கோயில்கள் உள்ளன. இக்கோயில்களில்இறுதிக் கோயிலைத் தவிர பிற மங்களாசாசனம் பெற்ற கோயில்கள்.

மக்கள் வாழ்க்கை

துளுவ வேளாளர்

தொண்டை மண்டலத்தில் இந்தச் சாதியார் பரவலாக உள்ளனர். மேல்பாடியிலும் இம்மரபினர் குடியிருக்கின்றனர். துளுவ வேளாளர் பெயர் அடிப்படையில் துளு நாட்டிலிருந்து குடி பெயர்ந்தவர்கள் என்று கருதப் பெறுகின்றனர். உண்மையில் இப்பெயர் தொழு வேளாளர் என்றிருக்க வேண்டும். நாட்டார் வழக்காற்றில் தொழு வெள்ளாளர் என்று குறிக்கப் பெறுகின்றது. அதனால் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருந்தவர்கள் அவர்கள் உரிமையாகக் கருதிய தொழுவுடன் இணைக்கப் பெற்று தொழு வெள்ளாளர் என்று அழைக்கப் பெற்றிருக்க வேண்டும்.

மேல்பாடிக் கல்வெட்டுகளில் ஊரார் என்று குறிக்கப் பெறுபவர்கள் பெரும்பாலும் வெள்ளாளர்களாக இருக்க வேண்டும். வெள்ளாளர் சாதியாகக் கல்வெட்டில் குறிக்கப் பெறவில்லை.

கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுக் கொண்டே புஞ்சை வேளாண்மையில் ஈடுபட்டவர்கள், தொழு வெள்ளாளர்களாகவும், நஞ்சை வேளாண்மையில் ஈடுபட்ட வர்கள் தொண்டை மண்டல வேளாளர்களாகவும் உருவாகியிருக்க வேண்டும்.

வேளாளர்

மேல்பாடியில் தொண்டை மண்டல வேளாளர் என்ற சாதியினர் வாழ்கின்றனர். இவர்கள் பண்டை நாளைய தொண்ட மண்டல நிலப்பரப்பில் வாழ்ந்தமையால் இந்தப் பிரிவினரை தொண்டை மண்டல வேளாளர் என்று ஆங்கில அரசு பெயரிட்டு அழைத்தது. தொண்டை மண்டல வேளாளரிடையில் உட்பிரிவுகள் உள்ளன.[38] அவை இருநூற்றுக்கும் மேற்பட்டவை. சேக்கிழார், அகத்துளார் ஆகிய குடிகள் புகழ்மிக்க குடிகள். பெரியபுராணம் தந்த சேக்கிழார் தொண்டை மண்டல வேளாளர் மரபினைச் சேர்ந்தவர் அந்த மரபில் சேக்கிழார் குடி என்ற குடியில் பிறந்தமையால் அவரது இயற்பெயரை விடுத்து சேக்கிழார் என்ற குடிப்பெயரையே தன் பெயராக வைத்துக் கொண்டார். சைவ சித்தாந்த நூலான சிவஞான போதத்தை அளித்த மெய்கண்ட தேவரும் இந்த மரபினைச் சேர்ந்தவர்.[39]

தொண்டை மண்டல வேளாளர்கள் தங்களுக்கென குலதெய்வங்களை வைத்துக் கொண்டுள்ளனர். இவர்களுடைய மடம் ஒன்று திருவண்ணாமலையில் உள்ளது. அந்த மடத்திற்கு அம்பி அறம் வளர்த்தான் மடம் என்று பெயர். இந்த மடம் பற்றிய செப்பேடு ஒன்று தொண்டை மண்டலத்து 24 கோட்டங்களையும், 79 நாடுகளையும் பற்றிக் குறிப்பிடுகின்றது.

வாணியர்

இந்தச் சாதியினர் முன்னொரு காலத்தில் இப்பகுதியில் வாழ்ந்தனர்.[41] எண்ணெய் ஆட்டுவது, விற்பது ஆகிய தொழிலினைச் செய்து வந்தனர். பண்டை நாளில் இவர்கள் வாழ்ந்த பகுதியை சங்கரப்பாடி என்று குறிப்பிட்டனர். மேல்பாடிக் கல்வெட்டில் சங்கரப்பாடி பற்றிய குறிப்பு கிடைக்கின்றது. இக்கல்வெட்டு முதலாம் இராசராசன் காலத்தைச் சேர்ந்தது. சங்கரப்பாடியிலிருப்போர் கலப்பு சாதிகளைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்று கருதுகின்றனர். வாணியார் இடங்கை சாதியைச் சேர்ந்வர்கள். தற்போது மேல்பாடி பிடாகை(துணை) ஊர்களில் இவர்கள் வாழ்கின்றனர்.

வண்ணார்

பிரித்தானியர் வருகையின்போது, (இந்திய கிராம சமுகம், பிராமணர், வெள்ளாளர், பிற சாதியினர், பணி செய் மக்கள் (வண்ணார், கருமார், தச்சர், அம்பட்டர், தோட்டி

ஆகியோர்) பறையர், வெட்டியான் ஆகிய சாதிகளை உள்ளடக்கிய அமைப்பாக விளங்கியது. இந்த அமைப்பினை தன்னிறைவு பெற்ற தன்னைத்தானே ஆட்சி செய்து கொள்ளும் அமைப்பாகப் பிரித்தானியர்கள் கருதினர்.[43] கிராமத்தில் வண்ணார் பிரிக்க முடியாத ஒரு சாதியராக விளங்குகின்றனர். இவர்கள் துணி வெளுப்பதோடு, கிராம தேவதை கோயில் வழிபாட்டில் பூசாரிகளாகவும், சாவு சடங்கில் முக்கிய பணியாளர்களாகவும் செயல்படு கின்றனர்.

அம்பட்டர்

இம்மரபினர் கிராம மக்களுக்கு முடித்திருத்தம் செய்வதோடு மருத்துவத்தையும் செய்தனர். மகப்பேறு மருத்துவத்தில் இவர்கள் பங்கு குறிப்பிடத்தக்கது. இம்மரபினர் சாவு சடங்கில் பெரும்பங்கு வகிக்கின்றனர். இவர்களில் இடங்கை, வலங்கை பிரிவு இன்று வரை பின்பற்றப் பெறுகின்றது.[44]

பறையர்

முல்லைத் திணையில் சிறப்பாகக் குறிக்கப்பெறும் குடிகளில் இவர்களும் அடங்குவர்.[45] பண்டை நாளில் தொண்டை மண்டலம் முல்லை நிலப்பகுதியாக விளங்கி யமையால் இப்பகுதியில் பறையர்கள் மிகுதியாக வாழ்ந்தனர் எனலாம். நடுகல் கல்வெட்டு களில் பறையர், பறைச்சேரி எனப்பல குறிப்புகள் கிடைக்கின்றன.[46] சோழர் கால கல்வெட்டுகளில் உழப்பறையர், பறையர், பறைச்சேரி பறையர் பற்றிய குறிப்புகள் கிடைக் கின்றன. மேல்பாடிக் கல்வெட்டுகளில் பறையர் பற்றிய குறிப்புகள் கிடைக்கவில்லை.

அருந்ததியர்

இம்மரபினர் மேல்பாடியில் வாழ்கின்றனர். இவர்களில் தெலுங்கு பேசுபவர்கள், தமிழ் பேசுபவர்கள் என இரு பிரிவுகள் உள்ளனர்.[47]

மக்கள் பெயர்

மேல்பாடிக் கல்வெட்டுகளில் மக்கள் பெயர்கள் குறிக்கப் பெறுகின்றன. வாணிகர், இடையர், வெள்ளாளர் ஆகிய மக்கள் பிரிவினர் குறிக்கப் பெறுகின்றனர்.

இவர்களிலும் வாணிகர், இடையர் ஆகிய பிரிவினரே மிகுதியாகக் குறிக்கப் பெறுகின்றனர். கண்டன், நம்பிசாதேவன், அயிரிகாடாடி, நம்பி திணையன், நம்பின்றி, காணன் புளியந், சாத்தன், ஏறன் சாத்தன், நல்லிகுட்டேறன், புன்னை சிங்கன், ஏணி கங்காதரன் வாணந்கோமாதன் ஆகிய பெயர்கள் இடைச்சாதியைச் சேர்ந்தவர்கள் பெயர்களாக உள்ளன.[48] மேலும் காடாடி வடுகன் சினையன், குஞ்சினையன், குஞ்சிமல்லன்,அந்தேரிமாது செல்வநளி, வாணநளியன் ஆகிய பெயர்களும் இடைச்சாதி மரபினைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

இம்மரபினர் பெயர்களில் ஏறன் குட்டேறன் ஆகிய பெயர்கள் மாடு வளர்ப்போடு தொடர்புடையவை. அயிரி (மீன்), பன்றி, புளியன் புன்னை, ஏணி ஆகிய பெயர்கள் இடையர்களிடையே நிலைபெற்றிருந்த குலச்சின்னப் பெயர்களாக (TOTEM) உள்ளன.[49] வடுகன் என்ற பெயர் அவர்கள் ஆந்திரப் பகுதியிலிருந்து குடிபெயர்ந்தவர்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றது. வாணன்(பாணன்) என்ற பெயர் அந்தக் குடியினர் பாணர்களோடு தொடர்டையவர்கள் என்பதை உறுதிப்படுத்தும்.[50]

இப்பெயர்களில் திணையன் என்ற பெயர் எடுத்தக்காட்டத்தக்கது. பண்டை நாளில் திணை, பெருந்திணை ஆகிய சொற்கள் வழக்கத்திலிருந்தன. இக்சொற்கள் அதிகாரி என்ற பொருளில் வழங்கின.

தொண்டை மண்டலத்தில் சில பகுதிகளில் இச்சொல் (திணை) வழக்கத்தில் இருந்துள்ளன. மலைபடுகடாத்தில் தொல்திணைகள் என்று கூறப்பெறுகின்றது.[51] இரண்டாம் நந்திவர்மனின் புல்லூர் செப்பேடுகளில் இச்சொல் பயின்று வருகிறது.[52] மூன்றாம் கிருஷ்ணன் போளூர் கல்வெட்டில் நாட்டுப் பெருந்திணை பயின்று வருகின்றது.[53] இந்தச் சொல் பயின்று வரும் இடங்களில் அதிகாரி என்ற பொருளில் குறிக்கப் பெறுகின்றது. இந்தப் பின்னணியில் வைத்துப் பார்க்கும்போது நம்பி திணையன் என்ற பெயர் இந்தப் பெயரையுடையவன் அதிகார வகுப்பினைச் சேர்ந்தவன் என்பதைச் சுட்டும்.

அடிக்குறிப்புகள்

1. தினமணி, 14.10.1991
2. மேலது, இரா. நாகசாமி மற்றும் மூவர், கல்வெட்டியல், பக். 23, 51, 53.
3. வெ.வேதாசலம், இயக்கி வழிபாடு, ப. 38.
4. வெ. இராதாகிருஷ்ணன், தொண்டை மண்டலத்தில் சமணம், செங்கை மாவட்ட வரலாற்றுக் கருத்தரங்கு, ப. 101.
5. மேலது. ப.99
6. ஆர். பூங்குன்றன், திருமலை சமண பள்ளி, தடயம், எண். ப.
7. பின்னிணைப்பு
8. மேலது
9. ஆய்வாளர் நேரில் பார்த்தறிந்த செய்தி
10. ஆர். பூங்குன்றன், மு. கு. க.
11. Ramendhranath Nandhi, Religious Instititutions and Cults in the Deccan, PP. 40-46
12. ஆர். பூங்குன்றன், மு. கு. க.
13. Ramendhranath Nandhi, op. cit.
14. ஆர். பூங்குன்றன், மு. கு. க.
15. மேலது
16. வெ. இராதாகிருஷ்ணன் முன். கு. நூ, பக். 100-01.
17. சு. இராசவேலு, அ. கி. ஷேஷாத்திரி, தமிழகக் குடைவரை கோயில்கள், பக். 10-11

18. காஞ்சி கைலாசநாதர் கோயில், பனைமலை ஈஸ்வரன் கோயில்

19. கு. தாமோதரன், பதிகம்பாட பார்வை இழந்தோர், கல்வெட்டு(காலாண்டிதழ்), ப.

20. R. Nagasamy, Art of Tamil Nadu, P. 13

21. S.I.I. Vol. III, No.18

22. என். சேதுராமன், ஆய்வுக் கட்டுரைகள், ப. 149

23. மேலது

24. மேலது ப. 148

25. மேலது ப. 149

26. I. K. Sarma, Early Saiva Architecture, P. 87

27. தொண்டைமானாற்றூர், பிரம்மதேசம், மேல்பாடி ஆகிய ஊர்களில் பள்ளிப்படை கோயில்களைச் சான்றாகக் கூறலாம்.

28. க. அ. புவனேசுவரி, அன்னூர் வரலாறு, பக். 77-78

29. மேலது

30. மேலது

31. மேலது ப.5

32. மேலது

33. மேலது

34. மேலது, ப. 48

35. ஆய்வாளர் நேரில் பார்த்தறிந்த செய்தி

36. பெரும்பாணாற்றுப்படை, வரி 372- 92

37. சு. இராசவேலு, அ.கி. ஷேஷாத்திரி, முன்.கு.நூ. பக். 11-12

38. Census Report,

39. சிவஞான போதம், ஆய்வு முன்னுரை

40. தொண்டை மண்டல சதகம், செய்யுள், 97

41. Tamil Lexicon, Suppliment, P. 258

42. S.I.I. Vol. III, No.18

43. Noboru Karashima, Studies in History and Society, P. 41 (Qoutation)

44. ஆர். பூங்குன்றன், முன். கு. க.

45. புறநானூறு, செ. 335

46. மே. து. ராஜ்குமார், சோழர்காலத்தில் தீண்டாமையா? நா. வா. வின், ஆராய்ச்சி, இதழ் எண். 48, ப. 86 -100

47. ஆர். பூங்குன்றன், முன்.கு.க.

48. பின்னிணைப்பு

49. க. கிருட்டிணசாமி, கூட்ட சின்னவியல், பின்னிணைப்பு.

50. தமிழில் பகரம் வகரமாக மாறும்

51 மலைபடுகடாம், வரி, 401

52. பல்லவர் செப்பேடுகள் முப்பது, ப. 193

53. S. Swaminathan, Op. Cit., No. 96

கோயில் கட்டடக்கலை

சோழர்கள் கோயிலோடு குடியமர்த்திச் சிறப்பு பெற்றவர்கள். அவர்கள் காலத்தில் நாடு முழுவதும் கற்றளிகள் கட்டப்பெற்றன. செங்கல் கோயில்கள் கற்கோயில்களாக மாற்றப்பெற்றன. புத்தூர்களில் புதுக்கோயில்கள் பலவற்றைக் கட்டினார்கள். முதலாம் ஆதித்தன் காவிரி தோன்றுமிடத்திலிருந்து கடலில் கலக்கும் வரையிலான பகுதிவரை நூற்றுக்கணக்கான கோயில்களைக் கட்டினான் என்று செப்பேடுகள் கூறும்.[1] அவனுக்குப்பின் வந்தவர்களும் பல கோயில்களைக் கட்டினார்கள்.[2] கட்டுபவர்களுக்கு ஊக்கம் கொடுத்தார்கள். அரசிகளில் செம்பியன்மாதேவி, குந்தவை, இலாடமாதேவி, உலகமாதேவி போன்றவர்கள் பல கோயில்களைக் கட்டினார்கள். தொண்டை மண்டலத்தில் திருமலை, லட்டிகம், தாதாபுரம் ஆகிய ஊர்களில் சோழ அரசிகள் கட்டிய கோயில்கள் உள்ளன.[3] சோழர்கள் காலத்தில் கோயில்கள் கலை பல வகையில் விரிவடைந்து பெருகியது.

மேல்பாடியில் சோழர் காலக் கோயில்கள் இரண்டு உள்ளன. சோமநாதீஸ்வரர் கோயில்கள், அரிஞ்சிகை ஈஸ்வரம் ஆகிய கோயில்கள் அவை. அம்மன் கோயில், சோமநாதீஸ்வரர் கோயிலைச் சுற்றியுள்ள சுற்றுமண்டபம், முகமண்டபம், மகா மண்டபம், சோபான மண்டபம் ஆகிய மண்டபங்கள் கோப்பெருஞ்சிங்கன், சம்புவராயர், சியகங்கன் ஆகியோர் காலத்தில் கட்டப்பெற்றன.

அம்மன் கோயில்

உபபீடம், ஜகதி, முப்பட்டை குமுதம், கண்டம், பட்டி, பித்தி, போன்றவை உள்ளன. தேவ கோட்டத்தில் சிற்பம் இல்லை. கருவறை, அர்த்தமண்டபத்தில் உள்ள குமுதத்தில் கல்வெட்டு உள்ளன.[4] இக்கல்வெட்டு விஜயநகரர் காலத்தைச் சேர்ந்தவை ஆகும். அதனால் இக்கோயில் விஜயநகர மன்னர் காலத்தில் கட்டப்பெற்றது எனலாம்.

சோமநாதீஸ்வரர் கோயில்

சோமநாதீஸ்வரர் கோயிலைக் கட்டியவர் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இக்கோயில் கட்டட அமைப்பினைக் கொண்டு முதலாம் ஆதித்தன் என்று ஒரு சாரார் கூறுவர்.[5] மற்றொரு சாரார் மேல்பாடிக்கு வீரநாராயணபுரம் என்ற பெயர் இருப்பதால்

முதலாம் பாராந்தகன் காலத்தில் கட்டிப்பட்டிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர்.[6] ஆனால், இக்கோயில் கல்வெட்டு ஒன்று ''மேற்பாடியாகிய வீரநாராயணபுரம் பழம்பியர் தவிர்த்து வீரராஜ் யபுரமெந்னும் பியரால் நகரமாகவும் இவ்வீரராஜ் யபுரத்து நாமெடுப்பித்த சோளேந்திர சிம்மேஸ்வரத்து மஹாதேவர்க்கு அமுதுனையுள்ளிட்டு'' என்று கூறுகின்றது. இக்கல்வெட்டு கோனேரின்மை கொண்டான் என்று தொடங்குவதால் அரசன் யார் என்பதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. இக்கல்வெட்டு முதலாம் இராசராசனின் கல்வெட்டு என்று உறுதியாகக் கூறலாம்.[7] இம்மன்னனின் ஒன்பதாம் ஆண்டு, பதினான்காம் ஆட்சி ஆண்டு, இருபத்து நான்காம் ஆட்சி ஆண்டு ஆகிய ஆட்சி ஆண்டு கல்வெட்டுகள் பொறிக்கப்பட்டுள்ளன.[8] இவ்வாட்சி ஆண்டுகளில் ஒன்பதாம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு காலத்தால் முற்பட்டது. அதனால் முதலாம் இராசராசனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டுக் காலத்தில் இக்கோயில் கட்டப்பட்டிருக்கலாம் என்று கருத முடியும்.

இக்கோயில் முன் உள்ள கொடி கம்பம் மரத்தால் ஆனது. இதன் கீழ் வடக்கே சுப்பிரமணியர், கிழக்கே வினாயகர் உருவம் மரத்தால் செய்யப்பெற்றுள்ளன.

கருவறை

உபபீடம், அதிட்டானத்தில் ஜெகதி முப்பட்டை குமுதம், கண்டம், பட்டி போன்றவை காட்டப்பட்டுள்ளன. சுவர் பகுதியில் அரைத்தூண். தேவகோட்டம், முழுமை பெறாத மகரதோரணம் போன்றவை காட்டப்படுள்ளன. தேவகோட்டத்தில் உள்ள சிற்பங்கள் பிற்காலத்தைச் சேர்ந்தவை ஆகும். மூன்று தள வேசர விமானம், உபபீடம் முதல் ஸ்தூபி வரை கல்லால் கட்டப்பட்டுள்ளதால் இது கற்றளி ஆகும். விமானத்தின் நான்கு பக்கமும் நந்தி, கொடுங்கையில் யாளிவரி போன்றவை காட்டப்பட்டுள்ளன. முகமண்டபம் போன்றவை உள்ளன.

துவார பாலகர்

துவாரபாலகரின் வலது கை தர்ஜனி முத்திரை, வலது கால் தண்டின் மேல் உள்ளன. இடது கை தண்டைத் தாங்கியும், இடது கால் நிலத்தைத் தாங்கியுள்ளன. வாயின் இரு பக்கமும் கொரப்பல், காதில் ஒரு பக்கம் பத்திர குண்டலம், மற்றொரு பக்கம் மகர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் முப்புரிநூல், இடை அணி, காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன.

மறுபக்கம் உள்ள துவாரபாலகரின் வலது கையும், இடது காலும் தண்டின் மேல் உள்ளன. இடது கை விஸ்மயம் முத்திரையிலும், வலது கால் பீடத்தைத் தாங்கி உள்ளன. காதில் மகர குண்டலம், மார்பில் முப்புரிநூல், காலில் தண்டை, மகுடத்தில் சிம்ம உருவம் போன்றவை காட்டப்பட்டுள்ளன.

இந்தத் துவாரபாலகர்களின் முப்புரி நூல் தலைமயிரால் பிண்ணப்பட்டுள்ளது போல் வடிக்கப்பட்டுள்ளது. இது பள்ளிப்படை துவாரபாலகர்களின் அணிகலனாகக் குறிக்கப்

பெறுகின்றது. இது இலகுலீசபாசுபதரர்கள் வழிபடும் சிவபெருமானின் பூணூலாகக் குறிக்கப்பெறுவது பஞ்சவடி என்று பெயர்.

துர்க்கை

துர்க்கையின் வலது மற்றும் இடது பின் கையில் சக்கரம் மற்றும் சங்கு போன்றவை காட்டப்பட்டுள்ளன. வலது முன் கை அபய முத்திரையும், இடது முன் கை கடிய முத்திரையும் காட்டப்பட்டுள்ளன. தலையில் கரண்ட மகுடம், பாதங்களின் கீழ் ரிஷபம் போன்றவை காட்டப்பட்டுள்ளன.

பிரம்மா

பிரம்மாவின் வலது மற்றும் இடது பின் கையில் அக்க மாலை மற்றும் கெண்டி போன்றவை உள்ளன. வலது முன் கை அபய முத்திரையும், இடது முன் கை கடிய முத்திரையும் காட்டப்பட்டுள்ளன. தலையில் ஜடாமகுடம், மூன்று தலை, கழுத்தில் ஆரம், மார்பில் முப்புரிநூல், இடை அணி, முழு ஆடை, காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன.

விஷ்ணு

விஷ்ணுவின் வலது மற்றும் இடது பின் கையில் சக்கரம் மற்றும் சங்கு உள்ளன. வலது முன் கை அபய முத்திரையும், இடது முன் கை கடிய வலம்பித முத்திரையும் போன்றவை காட்டப்பட்டுள்ளன. தலையில் கரண்ட மகுடம், கழுத்தில் ஆரம், மார்பில் பூணுல் போன்றவை உள்ளன.

தக்ஷ்ணாமூர்த்தி

தக்ஷ்ணாமூர்த்தியின் வலது மற்றும் இடது பின் கையில் அக்கமாலை மற்றும் பம்பு போன்றவை உள்ளன. வலது முன் கை வியாக்யான முத்திரை, இடது முன் கை உடைந்து உள்ளன. வலது காலைத் தொங்கவிட்டும், இடது காலை மடக்கி வலது காலின் மேல் வைத்தும் காட்டப்பட்டுள்ளன. தலையில் ஜடாமுடியுடன் பிறை சந்திரன், காதில் குண்டலம், பாதத்தின் இரண்டு பக்கமும் முனிவர் உள்ளது போல காட்டப்பட்டுள்ளன.

வினாயகர்

வினாயகர் நின்ற நிலையில் வலது மற்றும் இடது பின் கையில் மழு மற்றும் பாசம் போன்றவை உள்ளன. வலது முன் கையில் தந்தமும், இடது முன் கையில் மோதகம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. இவர் இடம்புரி வினாயகர் ஆவார்.

தேவகோட்டத்தின் மேல் உள்ள மகர தோரணத்தில் சிற்பங்கள் எதுவும் காட்டப்படவில்லை. கருவறையின் முன் உள்ள மண்டபத்தில் வட்டமான தூண்கள்

உள்ளன. இவை ஆதித்தன் காலத்து, தூண்களாக இருக்கக்கூடும். முன் மண்டபத்தின் மேல் சதுரக்கல் போட்டு மூடப்பட்டுள்ளது. இக்கோயிலைச் சுற்றி திருச்சுற்று மாளிகை உள்ளது.

சோமநாதீஸ்வரர் கோயிலுக்கு முன் மண்டபம் (முக மண்டபம்) மகா மண்டபம், அதனை ஒட்டியுள்ள தெற்கு மண்டபம், ஆகியவற்றில் மூன்றாம் இராஜராஜன், கோப் பெருஞ்சிங்கன்-II, வென்று மண் கொண்ட சம்புவராயர், வீரகம்பண்ணன், நரசிங்கராயன், கிருஷ்ணதேவராயன் கல்வெட்டுகள் உள்ளன. இந்த மண்டபங்கள் அனைத்தும் மூன்றாம் ராஜராஜன் காலத்தில் கட்டப்பெற்றிருக்க வேண்டும்.

மேலும் இக்கோயிலின் வெளிப்புறத்தில் திருச்சுற்றுமாளிகை இருந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. தெற்கு, கிழக்கு, வடக்கு ஆகிய திசைகளில் திருச்சுற்றுமாளிகையின் எச்சங்கள் காணப்படுகின்றன. வடக்குப் புறம் உள்ள திருச்சுற்றில் உள்ள தூண்களில் நாட்டிய மங்கை, விஷ்ணு போன்ற உருவங்கள் காணப்படுகின்றன.

திருச்சுற்று மதிலின் வெளிப்புறத்தில் சிறுசிறு சிற்பங்கள் உள்ளன. அவை ரிஷபம், வீரபத்திரர், யாழி மீது ஒருவர் அமர்ந்த நிலையிலும் மரத்தடியில் உள்ள லிங்கத்தை அடியார் வணங்கும் நிலையிலும், அன்னம், குரங்கு, நந்தி, யானை, முருகன் வீரன் ஆகியவற்றை மாறி மாறி சிற்பமாக வடித்துள்ளனர். வெளித் திருச்சுற்று மதில்கள் விஜய நகரர் காலத்தில் கட்டப்பெற்றன.

கல்யாண மண்டபம்

கல்யாண மண்டபத்திற்கு முன் மண்ட்பத்தில் உள்ள தூணில் அனுமான், கொடிபெண், வினாயகர், முருகன், இராமன், பைரவர் போன்ற உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. உள் மண்டபத்தில் 6 தூண்கள் பின் உள்ள நான்கு தூண்களின் இடையில் மேடை உள்ளது. இதில் பத்ம ஜெகதி விருத்த குமுதம். கண்டம், பட்டியில் மகர கூடுகள் போன்றவை கட்டப்பட்டுள்ளன. இம்மேடை சோழர் காலத்தில் கட்டப்பட்டது. தூணில் யாழி, பூக்கள், பூதம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. கல்யாண மண்டபத்திற்கு எதிரில் சற்று தொலைவில் ஊஞ்சல் மண்டபம் உள்ளன. இம் மண்டபங்கள் விஜயநகர மன்னர் காலத்தில் கட்டப்பெற்றன.

கோபுரம்

கோபுரத்தில் உபபீடம், ஜகதி, விருத்த குமுதம், பட்டியில் மகரகூடு, கண்டம், தேவகோட்டம், அரைத் தூண், போன்றவை காட்டப்பட்டுள்ளன. கோபுரத்தின் மேற்கு பக்கத்தில் சீதை, இராமன், லட்சுமன், கருடன் மேல் விஷ்ணு உள்ளது போன்ற உருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

கோபுரத்தின் கிழக்கு பக்கத்தில் மீன் மேல் ஒரு முனிவா அமர்ந்த நிலையில், அதன் அருகில் சிஷ்யன் கையில் கெண்டியுடன், அடியார் பூ வைத்துள்ளது போல்

வடிக்கப்பெற்றுள்ளார். ஆடுமேய்ப்பவர், காலரிமூர்த்தி, லிங்கத்தை அரசன், அரசியர் வணங்கும் காட்சி, பூதம், முருகன், பசு லிங்கத்தின் மேல் பால் ஊற்றும் காட்சி, யானை வழிபாடு செய்யும் காட்சி போன்றவை சிற்பங்களாகக் காட்டப்படுள்ளன. இக்கோபுரம் விஜயநகரர் காலத்தில் கட்டப்பட்டது.

அரிஞ்சிகை ஈஸ்வரம் (அ) சோழீஸ்வரம்

அரிஞ்சிகை ஈஸ்வரன் கோயிலில் முதலாம் இராசராசனின் மூன்று கல்வெட்டுகள் உள்ளன. முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டு ஒன்று உள்ளது. முதலாம் இராசராசனின் மூன்று கல்வெட்டுகளும் அவனுடைய 29-ஆம் ஆட்சி ஆண்டில் பொறிக்கப்பெற்றவை.[9] அதனால் இக்கோயில் கி.பி. 1014-ஆம் ஆண்டில் கட்டப்பெற்றிருக்க வேண்டும் எனலாம்.

துவாரபாலகர்

இடது முன் கை விஸ்மயம் முத்திரையிலும் வலது முன் கை தர்ஜின்ய முத்திரை யிலும் காட்டப்பட்டுள்ளது. வலது பின் கையில் நாகம் உள்ளது. இடது பின் கை மற்றும் வலது கால் தண்டின் மீது உள்ளது போன்று காட்டப்பட்டுள்ளன. தலையில் அர்த்த சந்திரன், காதில் பத்திர குண்டலத்தில் சிம்ம உருவம் போன்றவை காட்டப்பட்டுள்ளன.

இடது பின் கை விஸ்மயம் முத்திரையிலும், வலது பின்கையில் நாகம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. இடது முன் கை தர்ஜினீய முத்திரையிலும், வலது முன் கை மற்றும் இடது கால் தண்டின் மீது உள்ளது போன்று காட்டப்பட்டுள்ளன. காதின் ஒரு பக்கதில் பத்தர குண்டலத்தில் அன்னம் உள்ளது போலவும், மற்றொரு பக்கத்தில் மகர குண்டலம் போன்றவை காட்டப்பட்டுள்ளன.

இந்தத் துவாரபாலகர்களின் முப்புரி நூல் தலைமுடியால் பிண்ணப்பட்டுள்ளது போல் வடிக்கப்பட்டுள்ளது. இது பள்ளிப்படை துவாரபாலகர்களின் அணிகலனாகக் குறிக்கப் பெறுகின்றது.[10] இது இலகுலீசபாசுபதர்கள் வழிபடும் சிவபெருமானின் பூணூலாகக் குறிக்கப்பெறுவது பஞ்சவடி என்ற பெயர்.

துர்க்கை

அர்த்த மண்டபத்தில் உள்ள துர்க்கையின் வலது பின்கை சக்கரம், இடது பின் கை சங்கு, வலது முன் கை அபயம், இடது முன் கை கடிய வலம்பித முத்திரையுடன் நின்ற நிலையில் வடிக்கப்பட்டுள்ளது.

பிரம்மா

பிரம்மாவின் இடது பின் கை உடைந்தும், வலது பின் கை அக்கமாலை, இடது முன் கை கடிய முத்திரையிலும், வலது முன் கை அபய முத்திரையிலும் உள்ளன. இத்தேவ

கோட்டத்தின் மேல் உள்ள மகர தோரணத்தில் ஒருவர் லிங்கத்தை வணங்குவது போலவும், சங்கு, தோரணம், குத்துவிளக்கு போன்ற உருவங்கள் காட்டப்பட்டுள்ளன.

விஷ்ணு

விஷ்ணுவின் வலது பின் கை சக்கரம், இடது பின்கை சங்கு, வலது முன்கை அபய முத்திரையிலும், இடது முன்கை கடிய வலம்பித முத்திரையிலும் காட்டப்பட்டுள்ளன.

தக்ஷணாமூர்த்தி

இதன் வலது பின் கை அக்கமாலை, இடது பின் கை அக்னி, வலது மற்றும் இடது முன் கைகள் உடைந்து உள்ளன. அமர்ந்த நிலையில் வலது காலை தொங்கவிட்டு, இடது காலை வலது காலின் மேல் வைத்தும் காட்டப்பட்டுள்ளன. தொங்கிய நிலையில் உள்ள கால் முயலகன் மீது வைத்துள்ளது போலவும், அதன் இரு மருங்கிலும் இரண்டு முனிவர், மாடு, மான், பாம்பு போன்றவை காட்டப்பட்டுள்ளன. காதின் ஒரு பக்கம் மகர குண்டலம், மற்றொரு பக்கம் பத்தர குண்டலம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. இத்தேவ கோட்டத்தின் மேல் உள்ள மகரதோரணத்தில் பிக்ஷாடணர் மற்றும் ரிஷிபத்தினிகள் இரண்டு பேர் காட்டப்பட்டுள்ளனர்.

கருவறை

இக்கோயிலின் அதிட்டானத்தில் ஜகதி, முப்படை குமுதம், கண்டம், பட்டி போன்றவை காட்டப்பட்டுள்ளன. சுவரில் அரை தூண், தேவகோட்டம், மகரதோரணம் போன்றவை உள்ளன. தெற்குப் பக்கம் அர்த்தமண்டபத்தில் உள்ள தேவகோட்டத்தில் சிற்பம் இல்லை. இதன் மேல் உள்ள மகரதோரணத்தில் கண்ணப்பர் உருவம் காட்டப்பட்டுள்ளது.

சிறுசிற்பங்கள்

இக்கோயிலறையின் மேல் உள்ள கொடுங்கையின் பூத கணங்கள், பறவைகள், ஆமை, யானை, குரங்கு போன்றவை காட்டப்பட்டுள்ளன. இது ஒரு தளம் கொண்ட வேசர விமானம் ஆகும் இந்த விமானத்தில் கிழக்கு பக்கம் பாலசுப்பிரமணியன், தெற்கு வீணாதர தக்ஷணாமூர்த்தி வடக்கே பிரம்மன் போன்ற சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளன.

இராமாயணச் சிறப்பங்கள்

இக்கோயில் கருவறை, அர்த்தமண்டபம் ஆகியவற்றில் அதிட்டான வர்க்கங்களில் ஒன்றான கண்டத்தில் இராமாயண சிற்பங்கள் உள்ளன. இச்சிற்பங்கள் சோழர்காலக் கோயில்கள் சிலவற்றில் வடிக்கபெற்றுள்ளன.[11] குடந்தை நாகேஸ்வரம், தருமபுரி சாணாயிரம், முழமாயிரம் ஆகிய கோயில்களில் இராமாயணச் சிற்பங்கள் வடிக்கப் பெற்றுள்ளன. இராமாயண காட்சிகளில் வாலிவதை சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது.

தனிச்சிற்பங்கள்

கங்களார்

நின்ற நிலையில் இடது பின் கை எலும்புக் கூட்டின் தண்டும், வலது பின் கை உடைந்தும் உள்ளன. இடது முன் கை கபலாம், வலது முன் கை மானுக்கு தளிர் ஊட்டுவது போல காட்டப்பட்டுள்ளன. தலையில் ஜடா மகுடம், காதில் மகர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் முப்புரி நூல் மற்றும் உதர பந்தம், இடையில் அரையாடை போன்றவை காட்டப்பட்டுள்ளன. வலது கால் அருகில் குள்ள பூதம் தலையில் பாத்திரம் ஏந்தியது போலவும், அதற்கு அருகில் மான் உள்ளது போல் காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் நுளம்பர் கலைப் பாணியில் அமைந்துள்ளது.

காங்காதரர்

இறைவன் நான்கு கைகளுடன் நின்ற நிலையில் காட்டப்பட்டுள்ளார். வலது முன் கை ஆக்ஷய வரத முத்திரை, இடது முன் கை அம்மனின் இடது தோளின் மீது உள்ளன. வலது பின் கை சூலம் ஏந்தியும், இடது பின் கை உடைந்தும் உள்ளன. தலையில் ஜடா மகுடம், கழுத்தில் ஆரம், மார்பில் உதரபந்தம் மற்றும் முப்புரிநூல், இடையில் அரை ஆடை போன்றவை காட்டப்பட்டுள்ளன.

அம்மனின் வலது கை இறைவனை அணைத்தவண்ணம் உள்ளது. இடது கை பூ வைத்துள்ளது போல காட்டப்பட்டுள்ளது. தலையில் பின்னால் கொண்டை முடி, கழுத்தில் ஆரம், இடை ஆடை போன்றவை காட்டப்பட்டுள்ளன.

ரிஷபாந்திகர்

நின்ற நிலையில் இடது பின் கை பாம்பைப்பற்றியும், வலது பின் கை சூலம் ஏந்தியும் உள்ளன. இடது முன் கை அம்மனின் தோளின் மீதும், வலது முன் கை பூ வைத்துள்ளது போலவும் உள்ளன. தலையில் ஜடா முடி, கழுத்தில் ஆரம், மார்பில் உதர பந்தம் மற்றும் முப்புரி நூல், இடையில் அரை ஆடை போன்றவை காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

அம்மனின் இடது கை பூ வைத்துள்ளது போலவும், வலது கை இறைவனை அணைத்தவண்ணம் உள்ளன. கழுத்தில் ஆரம், இடை ஆடை, காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன.

மாகேஸ்வரி

நின்ற நிலையில் இடது பின் கை அக்க மாலை, வலது பின் கை மழு, இடது முன் கை கடிய முத்திரை, வலது முன் கை பூ வைத்துள்ளது போலவும் காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி. 13-ஆம் நூற்றாண்டு.

பைரவர்

நின்ற நிலையில் இடது பின் கை பாசம், வலது பின் கை டமரு, இடது முன் கை கபாலம், வலது முன் கை சூலம் போன்றவை ஏந்தியுள்ளன. தலையில் விரிந்த ஜடாபாரம், கழுத்தில் ஆரம், பூணூல் தொடை வரை உள்ளது போலவும், பாம்பையே அரை நாண் கயிறாகக் கட்டியுள்ளது போலவும், காட்டப்பட்டுள்ளன. காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளது. பைரவர் விஜயநகர காலத்தைச் சேர்ந்தது. கி.பி. 14-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது.

சூரியன்

நின்ற நிலையில் இரு கைகளில் தாமரை ஏந்தியுள்ளார். தலையில் ஜடா மகுடம், காதில் மகர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் பூணூல், காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன. கி.பி. 12-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது.

விநாயகர்

இடது காலை மடக்கி அமர்ந்துள்ள நிலையில் உள்ளார். இடது பின் கை அங்குசம், வலது பின் கை மழு, இடது முன் கை கபோதம், வலது முன் கை தந்தம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. பாம்பையே பூணூலாகக் காட்டப்பட்டுள்ளது. கி.பி. 10-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

அய்யனார்

அமர்ந்த நிலையில் வலது கை செண்டுடனும், இடது கை பீடத்தின் மேல் ஊன்றியுள்ள காலின் மேலும் உள்ளன. வலது கால் கீழே உள்ள சிறிய பீடத்தில் ஊன்றியும், இடது கால் அமர்ந்துள்ள பீடத்தின் மேல் ஊன்றியும் உள்ளன. யோகப் பட்டம் இடையையும், இடது காலையும், சுற்றியுள்ளன. தலையில் ஜடா முடி, காதில் குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் முப்புரி நூல் போன்றவை காட்டப்பட்டுள்ளன. கி.பி. 15-ஆம் நூற்றாண்டை சேர்ந்தது.

வீரபத்திரர்

நின்ற நிலையில் இடது பின் கை சூலம், வலதுபின் கை மழு, இடது முன் கை கெண்டி, வலது முன் கை அக்கமாலை போன்றவை கொண்டுள்ளன. காதின் ஒரு பக்கம் மகர குண்டலம், மற்றொரு பக்கம் பத்தர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் உதர பந்தம் மற்றும் பூணூல், இடையில் அரை ஆடை போன்றவை காட்டப்பட்டுள்ளன. கி.பி. 11-ஆம் நூற்றாண்டுக்குரியது இச்சிற்பம்.

தாய்மார் எழுவர்

பிராமி

வலது காலை தொங்கவிட்டு, இடது காலை மடக்கி பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளது. வலது பின் கை அக்க மாலை, இடது பின் கை கெண்டி, வலது முன் கை அபயமுத்திரை, இடது முன் கை தொங்கவிட்டு தொடை மேல் உள்ளது போல் காட்டப்பட்டுள்ளது. தலையில் ஜடா மகுடம், கழுத்தில் ஆரம், மார்புக் கச்சை, மூன்று தலை, அன்னம், வலது கால் பத்ம பீடத்திலும், காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன. இச்சிற்பம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது.

மாகேஸ்வரி

மாகேஸ்வரியின் இடது பின் கை சூலம், வலதுபின் கை டமரு, இடது முன் கை மடக்கி, இடது கால் தொடை மீது, வலது முன் கை அபய முத்திரை போன்றவை காட்டப்பட்டுள்ளன. வலது காலை தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் பீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளது. அமர்ந்த நிலையில் நந்தி பீடத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. காதின் ஒருபக்கம் பத்தர குண்டலம், மற்றொரு பக்கம் மகர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் முப்புரி நூல், மார்புக் கச்சை, இடை ஆடை, காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

கௌமாரி

கௌமாரியின் இடது பின் கை வேல், வலது பின் கை சக்தி, இடது முன் கை தொடை மீது, வலது முன் கை அபய முத்திரை போன்றவை காட்டப்பட்டுள்ளன. காதில் பத்தர குண்டலம், கழுத்தில் ஆரம், மார்பில் சன்னவீரம், மார்ப்புக் கச்சை, காலில் தண்டை போன்றவை உள்ளன. அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் முருகனின் வாகனமான மயில் உள்ளது. அமர்ந்த நிலையில் வலது காலைத் தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் உள்ளது. காலம் கி.பி 11-ஆம் நூற்றாண்டு.

வைஷ்ணவி

இதன் வலது பின் கை சக்கரம், இடது பின் கை சங்கு, வலது முன் கை அபய முத்திரை, இடது முன் கை மடக்கிய இடது காலின் தொடை மீது உள்ளது போல காட்டப்பட்டுள்ளது. வலது காலைத் தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் அமர்ந்த நிலையில் உள்ளது. காதில் குண்டலம், கழுத்தில் ஆரம், மார்புக் கச்சை, காலில் தண்டை போன்றவை உள்ளன. அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் கருடன் வணங்கிய நிலையில் காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

வராகி

வராகியின் இடது பின் கை பாசம், வலது பின் கை கலப்பை, வலது முன் கை அபய முத்திரை, இடது முன் கை தொடை மீது காட்டப்பட்டு உள்ளது. வலது காலை தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் அமர்ந்த நிலையில் உள்ளது. பன்றி முகம், கொரப் பல், மார்புக் கச்சை, மார்பில் சன்ன வீரம், காலில் தண்டை போன்றவை காட்டப்பட்டுள்ளன. அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் எருமை உள்ளது. காலம் கி.பி.11-ஆம் நூற்றாண்டு.

இந்திராணி

இந்திராணியின் இடது பின் கை சக்தி படை, வலது பின் கை அங்குசம், இடது முன் கை தொடை மீது, வலது முன் கை அபய முத்திரை போன்றவை காட்டப்பட்டு உள்ளன. வலது காலை தொங்கவிட்டும், இடது காலை மடக்கியும் அமர்ந்த நிலையில் உள்ளது. தொங்கவிடப்பட்ட கால் பத்மபீடத்தின் மீது வைக்கப்பட்டுள்ளது. காதில் மகர குண்டலம், மார்பில் சன்ன வீரம், மார்புக் கச்சை, காலில் தண்டை போன்றவை உள்ளன. அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் யானை உருவம் காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

சாமுண்டா

சாமுண்டாவின் இடது பின் கை சூலம், வலது பின் கை டமரு, இடது முன் கை தொடை மீது, வலது முன் கை அபயமுத்திரை போன்றவை காட்டப்பட்டு உள்ளன. இடது காலை மடக்கி, வலது காலைத் தொங்கவிட்டு, பத்மபீடத்தின் மீது அமர்ந்த நிலையில் உள்ளது. தலையில் கபாலம், காதில் மகர குண்டலம், கபாலத்தையே பூணூலாகக் கோர்த்து அணிந்துள்ளதுபோல் காட்டப்பட்டுள்ளது. இதன் வாகனம் பேய். சாமுண்டா அமர்ந்திருக்கும் பீடத்தின் கீழ் காட்டப்பட்டுள்ளது. காலம் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு.

விநாயகர்

விநாயகரின் இடது பின் கை அக்கமாலை, வலது பின் கை மழு, இடது முன் கை மோதகம், வலது முன் கை தந்தம் போன்றவை காட்டப்பட்டுள்ளன. இடது காலை மடக்கி, வலது காலை பீடத்தில் ஊன்றியுள்ளது. வலம்புரி விநாயகர் பத்மபீடத்தின் மீது அமர்ந்துள்ள நிலையில், அதன் வாகனமான எலியுடன் இச்சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது.

அந்தணர் (அ)அரசர்

நின்ற நிலையில் இடது கையில் தண்டும், வலது கை தொடை மீதும் காட்டப்பட்டுள்ளன. தலையில் மகுடம், காலில் செருப்பு உள்ளது போல் காட்டப்பட்டுள்ளது. இவர் பார்ப்பதற்கு அந்தணர் போல் தெரிகின்றார்.

நந்தி

தலை உடைந்த நிலையில் ஒரு நந்தியும் இங்கு உள்ளது. கல்லினால் செய்த தொட்டியும் இங்கு உள்ளது.

தூண்கள்

யாக சாலை முன்பு மூன்று தூண்கள் உள்ளன. இது விஜயநகரம் மற்றும் நாயக்கர் காலத்தில் வடிக்கப்பட்ட தூணாகும். தூணின் தெற்குப் பக்கம் சங்கு ஊதும் பூதம் விஷ்ணு போன்ற உருவங்கள் காட்டப்பட்டுள்ளன. கிழக்குப் பக்கம் அன்னம் உள்ளது. வணங்கிய நிலையில் உள்ள உருவம் இம்மண்டபத்தை கட்டியவராக இருக்கக் கூடும். அம்மன் உருவம் கையில் பத்மம் உள்ளது போல காட்டப்பட்டுள்ளது. அடுத்துள்ள தூணில் நாட்டிய மங்கை, முருகன், விஷ்ணு வணங்கிய நிலையில் உள்ள ஓர் உருவம் போன்றவை உள்ளன.

யாக சாலை முன் உள்ள மூலைக்கு ஈசானி மூலை என்று பெயர். இங்கு பிற்காலத்தில் வைக்கப்பட்ட நவகிரகம் உள்ளது. யாகசாலை சோழர் காலத்தில் கட்டப் பெற்றது. ஆனால் இதன் முன் உள்ள மண்டபம் பிற்காலத்தைச் சேர்ந்ததாகும்.

பள்ளிப்படைக் கோயில்கள்

பள்ளிப்படைக் கோயில்கள் சோழர்கள் காலத்தில் மட்டுமே கட்டப்பெற்றுள்ளன. புறநானூற்றுப் பாடல்கள் அடிக்குறிப்புகளில் குராப்பள்ளி துஞ்சிய இலவந்திகைப்பள்ளி துஞ்சிய குளமுற்றத்துத்துஞ்சிய என்ற வாசங்கள் பயின்று வருகின்றன.[12] அதனால் பள்ளி என்ற சொல் மாண்டவர்களோடு தொடர்புடைய சொல்லாக விளங்கியது எனலாம். மேலும் தமிழ் பிராமி கல்வெட்டுள்ள இடங்களில் பள்ளி என்ற சொல் பயின்று வருகின்றது. அக்கல்வெட்டுகளில் ஈத பாளிய், செய்பித பாளிய் என்று கூறப்பெறுவதெல்லாம் ''நீத்தார் நினைவுச் சின்னம்'' என்ற பொருளில் வழங்கப்பெற்றது எனலாம்.[13] அதனால் பள்ளி என்ற சொல் சமயம் தொடர்பாக பயன்படுத்தப்பெற்று பின்னாளில் தமிழக மூவேந்தர் மரபுகளுடன் மாற்றம் பெற்றதாக கருதும் வகையில் இச்சொல் வழக்கத்தில் வந்திருக்கவேண்டும்.

குராபள்ளி, இலவந்திகைப்பள்ளி ஆகிய ஊர்கள் அல்லது இடங்கள் சங்க கால வேந்தர்கள் பள்ளிப் படை இருந்த இடங்களாகலாம்.[14] கம்பராமாயணத்தில் பள்ளிப்படைப் படலம் என்று குறிக்கப்பெறுவதும் இங்கு எடுத்துக்காட்டத்தக்கது. பள்ளிப்படையைப் பற்றி கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், துரை ரங்கசாமி ஆகியோர் ஆய்வு செய்துள்ளனர்.[15] இவர்கள் அனைவரும் பள்ளிப்படைக் கோயில்கள் தேவராஜர் வழிபாட்டினை நினைவுறுத்தும் வகையில் அமைந்துள்ளன என்று கருதுகின்றனர். ஆனால் மற்றொரு சாரார் தேவராஜர் வாழிபாட்டுக்கும், பள்ளிப்படைக் கோயில்களுக்கும் யாதொரு தொடர்புமில்லை என்று கருதுகின்றனர். அவர்களில் பிலியோசா, ஹெர்மான் குல்கி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.[16] சோழ அரசர்கள் தென் கிழக்கு ஆசிய நாடுகளிலிருந்த முற்கால அரசர்களுடன் எந்த வகையிலும் தொடர்புடையவர்கள் அல்லர்.

தமிழ்நாட்டில்16 பள்ளிப்படைக் கோயில்கள் இருந்தமை பற்றிக் கல்வெட்டுகள் குறிப்பிடும்.[17] அண்மையில் கண்டுபிடிக்கப்பெற்ற இருகூர் செப்பேடுகளில் (கோவை மாவட்டம்) உடுமலை, காரைத்தொழு அருகில் ஒரு பள்ளிப்படைக் கோயில் இருந்தமைப் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.[18] 16 கோயில்களில், 8 கோயில்கள் சோழ அரசிகளுக்காக எடுக்கப்பெற்றவை.[19] மூன்று கோயில்கள் யாருக்காக எடுக்கப்பெற்றவை என்பது புலப்படவில்லை. எஞ்சியுள்ள ஐந்து கோயில்கள் சோழ வேந்தர்களுக்காக எடுக்கப் பெற்றவை.[20] இந்தக் குறிப்புகள் பள்ளிப்படை கோயில்கள், அரசர்களைவிட, அரசியர்க்கு மிகுதியாக எடுக்கப் பெற்றமை புலப்படும்.

பள்ளிப்படை கோயில்கள் கட்டவேண்டிய முறைப்பற்றி ஆகமங்கள் ஏதும் செய்திகளை அளிக்கவில்லை. பண்டைத் தமிழ் இலக்கியங்களிலும் பள்ளிப்படைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

சோழப் பேரரசு பற்றி ஆய்வு செய்தவர்கள், அப்பேரரசில் அரியாசனத்திற்கு ஏற்பட்ட போட்டிகள், போராட்டங்கள், சூழ்ச்சிகள், அதில் ஏற்பட்ட தோல்விகள், வெற்றிகள் ஆகியவைகள்பற்றி சோழ வரலாறு முழுவதும் சான்றுகள் நிறைய உள்ளன என்பதை எடுத்துக்காட்டியுள்ளனர். முதல் பராந்தகனுக்கும், ஆதித்தனின் மற்றொரு மகனான கன்னர தேவனுக்கும் இடையில் ஏற்பட்ட அரியாசனப் போட்டியில் முதல் பராந்தகன் அரசனாக முடிசூடபபெற்றான். கன்னர தேவன் ஒரு போதும் சோழர் அரியணையை தனக்குரியதாக்கிக் கொள்ள முடியவில்லை. அந்த முரண்பாடுகளின் விளைவாக இராட்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் சோழர் ஆட்சிக்குட்பட்ட தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினான்.

சோழர்கள் கோயில்களைக் கட்டியபோது அவர்கள் சைவ ஆகமங்களை பின்பற்றினார்கள் என்று அவர்கள் கல்வெட்டுகளும், ஆகம நூல்களும் குறிப்பிடுகின்றன.[21] இருப்பினும் பள்ளிப்படை கோயில்கள் பற்றி எந்த ஆகமமும் குறிப்பிடவில்லை. ஆகமங்கள் அனைத்திலும் தலைசிறந்ததாக கருதப்பெற்ற மகுடாகமம் குறிப்பிடும் கட்டடக் கலை, சிற்பக் கலை ஆகிய கலைகள் பற்றி விரிவாக பேசியுள்ளது.[22] இருப்பினும் பள்ளிப்படைக் கோயில்கள், ஆகமங்களின் விதிகளுக்குப் புறம்பாக கட்டப்பெற்றன, பள்ளிப் படைக் கோயில்களில் பாசுபதர்களும், காளாமுகர்களும் செய்த பூசை முறைகள் ஆகம மரபுகளுக்கு மாறானவை என்பர். முன் இடைக்கால தமிழகத்தில் காளா முகர்களும், பாசுபதர்களும் பெருஞ்செல்வாக்கு பெற்று விளங்கியமையால் அரசியல் உருவாக்கத்திலும் அவர்கள் பெரும் பங்கு வகித்தனர். சோழர் காலத்து பிற சைவ கோயில்களில் முறைப்படுத்தப்பெற்ற ஆகம விதிகள் பின்பற்றப்படுத்தப்பட்டாலும், பள்ளிப்படைக் கோயில்களில் தீவிரவாத சைவர்கள் பூசை செய்தனர்.[23]

சோழப் பேரரசு உருவான பின்பு ஏற்பட்ட அரசியல் போட்டிகளில் பல்வேறு பங்காளிக் குழுக்கள் போட்டியிட்டன. அந்தச் சூழ்நிலையில் விசயாலயன் மரபினர்

தொடர்ந்து சோழர் அரியாசனத்தைக் கைப்பற்றி வெற்றிகரமாக ஆட்சி செய்தனர். அவ்வாறு ஆட்சி செய்வதற்கு பள்ளிப்படை கோயில்கள் ஒருவகையான நியாயப்படுத்தும் (Legitimation) தன்மையை அளித்தது. இதுபற்றி வெங்கட் ரகோத்தம் கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது.

''சோழர் காலத்தில் அரச உரிமை முதல் மகனுக்கு என்ற அடிப்படையில் தொடர்ந்து நிலை பெற்றது. முதலாம் இராசராசன் காலத்திலும் இது தொடர்ந்தது. அவனுக்குப் பின் வந்தோர்கள் இந்த மரபினை மீறத் தொடங்கினர். ஆண்டுகொண்டிருக்கும் அரசன் திடீரென இறக்கும் நிலையில் அரியணைக்குப் போட்டிகள் மிகுதியாயின. அதனால், முரண்பாடுகளும், பூசல்களும் மிகுதியாயின. பள்ளிப்படைக் கோயில்கள் கட்டுவது என்பது ஆட்சி உரிமையை நியாயப்படுத்துவதற்கு, அரியணைப் போட்டியிலிருந்து பிற குழுக்களை விலக்குவதற்கு ஆகும். பேரரசு ஆட்சியை தங்களுடையதாக்கிக் கொள்ளவும் பள்ளிப்படை கட்டப்பெற்றது. பள்ளிப்படைக் கோயில்கள் அரசன் இறந்தவுடனே கட்டப் பெறாததற்கும் இதுவே காரணமாகும்.[24]

தொண்டைமானாற்றூரில் கட்டப்பெற்ற பள்ளிப்படைக் கோயில் பராந்தகனின் 34-ஆம் ஆட்சி ஆண்டில் கட்டப்பெற்றது.[25] அதுவும் தக்கோலப் போருக்கு சில ஆண்டுகளுக்கு முன்பேயாகும். அக்கோயில் காளாமுக மகாவிரதிகளின் பராமரிப்பில் விடப்பெற்றது. ஆதித்தன் இறந்தபிறகு அரியணைக்கு ஆதித்தனின் மகன்கள் கன்னர தேவனும், முதலாம் பராந்தகனும் போட்டியிட்டிருக்க வேண்டும். அந்தப் போட்டியில் முதல் பராந்தகன் வெற்றி பெற்றான்.பராந்தகன் அரியணைக்குரியவன் என்பதை நியாயப்படுத்த தன் தந்தைக்கு பள்ளிப்படை எடுப்பித்தான்.

பராந்தகனுக்குப் பின்பும், முதலாம் இராசராசனுக்கு முன்பும் சோழர் அரியணைக்கு தந்தைக்குப் பின் மகன் முறையில் வரவில்லை. ஆனால், முதல் மகன் இராசராதித்தன் இறந்தமையால் அவனுடைய இரண்டாம் மகன் கண்டராதித்தன் ஆட்சிக்கு வந்தான். அவன் தம்பி அரிஞ்சயன் ஆட்சிக்கு வந்தான். அவனுக்குப்பின் அவன் தம்பி சுந்தரசோழன் ஆட்சிக்கு வந்தான். சுந்தர சோழனின் முதல் மகன் ஆதித்த கரிகாலன் இறந்தமையால் உத்தம சோழன் ஆட்சிக்கு வந்தான். இந்த விஷயத்தில் சுந்தர சோழனின் இரண்டாம் மகனான முதலாம் இராசராசனுக்கும், உத்தம சோழனுக்கும் இடையில் முரண்பாடு எழுந்திருக்க வேண்டும் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.[26] திருவாலங் காடு செப்பேட்டில் இதுபற்றிய குறிப்புகள் உள்ளதாகவும் அந்த வரலாற்று ஆசிரியர் குறிப்பிட்டுள்ளனர்.[27] மேலும் சோழர் குல முறை கிளத்தும் செப்பேடுகளில் வரும் புகழ் மாலைகள் நாராயணன் என்பவரால் பாடப்பெற்றது.[28] (இவர் முதலாம் இராசேந்திரன் காலத்தவர்). சோழ மன்னர்கள் அனைவருக்கும் ஒரே அளவான புகழ் மாலைகள் அளிக்கப் பெறவில்லை என்று கருதுகின்றனர். காரணம், முதலாம் இராசேந்திர சோழனின் தந்தை வழி முன்னோர்கள் பற்றி விரிவாகவும், பிறரை போகிற போக்கிலும் பாடியுள்ளார். புலவர்களால் புகழப்பெறுவது போன்றதே பள்ளிப்படை அமைத்துப் புகழ்பெறுவதும்.

''சோழர்கள் ஆகம மரபினைப் பின்பற்றி கோயிலினைக் கட்டுவதும், அக்கோயில் களுக்குக் கொடை அளிப்பதும், அரியணையில் அமர்வதற்கும் தொடர்ந்து அதனை நிலை நிறுத்திக்கொள்வற்கு உறுதியளிக்கும் என்று நம்பினர். இந்த மரபினை ஆகம இந்து மதம் என்று கருதினர். ஆகம இந்து சமயம் கோயில் கட்டுவதிலும், அதனை பராமரிப்பதிலும் கவனத்தைச் செலுத்தியது. கோயில்கள் அரசர்கள் புகழ் பரப்பும் புண்ணிய பூமியாக கருதப்பெற்றது. இது பரந்துபட்ட தமிழ் சைவ சித்தாந்தத்தின் பின்னணியில் உருவாயிற்று'' என்பர்.[29]

தொண்டைமானாற்றூரில் கட்டப்பெற்ற பள்ளிப்படை ஆதித்தேசுவரம் என்று அழைக்கப்பெற்றது. இங்குள்ள கல்வெட்டில் ஆதித்தன் தொண்டைமானாற்றூர் துஞ்சின உடையார் என்று அழைக்கப்பெறுகிறான். இந்தப்பள்ளிப்படை கோயில் ஆதித்தனுடைய உடலைப் புதைத்த இடத்தில் கட்டப்பெற்றது. இக்கோயில் கல்வெட்டில் இந்திரவிழா கொண்டாடுவதற்கு 105 காசு அளிக்கப்பெறுகின்றது என்று கூறப்பெறுகின்றது.[30] பிராமணர்களுக்கு உணவு அளிக்க காவேரிப்பாக்கத்தில் நிலக்கொடை அளிக்கப்பெற்றது. இக்கொடைகள் காளாமுக மரபினைச் சேர்ந்த மகா விரதிகளிடம் அளிக்கப்பெற்றது.

பராந்தகனுடைய மக்களில் ஒருவரான அரிஞ்செயனுக்குப் பள்ளிப்படை மேல்பாடியில் எடுக்கப்பெற்றது. அரிஞ்செயன் இறந்து இரண்டு தலைமுறைகள் கழிந்தபின் இராசராசன் பள்ளிப்படைக் கோயிலைக்கட்டினான்.[31] இவ்வாறு அவன் கட்டியதும் தஞ்சை பெருவுடையார் கோயில் கட்டி முடிந்த பின்பே ஆகும். அதனால் விசயாலயன் மரபினரின் பிற மன்னர்கள் அரியணை போட்டியிலிருந்து விலக்கப் பெறுகின்றனர். இக்கோயிலுக்கு நிலக்கொடையும், காசுக்கொடையும் அளிக்கப்பெற்றன. இந்தக் கொடைகளில் நாட்டார் பங்கு குறிப்பிடத்தக்கது. 96 ஆடுகள் விளக்கெரிப்பதற்கு அளிக்கப்பெற்றது. மேல்பாடி பள்ளிப்படைக் கோயிலில் நடைபெற்ற பூசை முறை பற்றிய விவரம் ஏதும் பாதுகாக்கப் பெறவில்லை. ஆனால் பள்ளிப்படைக் கோயிலில் ஆகம விதிகளுக்கு மாறான பூசை மரபுகளே பின்பற்றப்பட்டிருக்க வேண்டும் என்று ஒரு சாரார் கருதுகின்றனர். முதல் இராசராசனின் மகனான முதலாம் இராசேந்திர சோழனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டு கல்வெட்டு ஒன்று உள்ளது. இக்கல்வெட்டு செய்திகளின்படி மேல்பாடி பள்ளிப்படை கோயில் இலகுளீச பண்டிதர்கள் ஆட்சியில் நிலைபெற்றிருந்தது புலப்படும்.[32] இந்த முனிவர்கள் பாசுபத மதத்தை பின்பற்றுபவர்கள். இலகுளீச பாசுபத மடம் ஒன்று இந்த கோயிலில் செயல்பட்டிருக்க வேண்டும். இந்த மரபினைச் சேர்ந்தவர்கள் தஞ்சை பெருவுடையார் கோயில் வழிபாட்டிலும் கலந்து கொண்டமைப்பற்றி அக்கோயில் கல்வெட்டுகள் பேசும்.

பிரம்மதேசத்தில் உள்ள சந்திர மௌலீஸ்வரர் கோயில் முதலாம் இராசேந்திரனுக்காக எடுக்கப்பெற்ற பள்ளிப்படையாகும்.[33] இக்கோயில் கல்வெட்டு ஒன்று முதலாம் இராசாதிராசன் காலத்தில் நாட்டார் அளித்த கொடையைப்பற்றி கூறுகின்றது.

பள்ளிப்படைக் கோயிலில் உயிர் நீத்த (இராசேந்திரனின் கல்லறையில்)அரசியின் மகாதாகம் தீர்ப்பதற்கு தண்ணீர் பந்தலை நாட்டார் வைத்தனர். [34] இந்தப் பள்ளிப்படை கோயிலிலும் இலகுளீச பாசுபத மரபினைச் சேர்ந்த பண்டிதர்கள் பூசைகளை மேற்பார்வை யிட்டனர்.

மேல்பாடி அரிஞ்சிகையீஸ்வரம் கோயில் பள்ளிப்படை கோயில் என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. அந்தப் பள்ளிப்படைக் கோயிலும் முதலாம் இராசராசன் கட்டினான் என்று அக்கோயில் கல்வெட்டு கூறுகின்றது. இராசராச தேவர் நம் நகரத்தில் எடுப்பித்த பள்ளிப்படை அரிஞ்சினையீஸ்வரமுடையார் கோயில் என்று ஒரு கல்வெட்டு கூறுகின்றது.[35] பள்ளிப்படை கோயில் சோழர் காலத்தில் உருவாக்கப்பெற்ற கோயில் வகையாகும். அதனால் பள்ளிப்படைக் கோயில் பற்றி விரிவாக ஆய்வு செய்ய வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. தி. வை. சதாசிவ பண்டாரத்தார், பிற்காலச் சோழர் சரித்திரம், பகுதி-1 ப.32.
2. K. A. Nilakantasastri, The Colas, P. 453.
3. ஆர். பூங்குன்றன், திருமலை சமண பள்ளி, தடயம் எண். ப.
4. கல்வெட்டுகள் தெளிவாக இல்லை.
5. நடுவனரசு தொல்லியல்துறை குறிப்புகள்.
6. S.R. Balasubrhamaniyam, Early Cola Temples, P. 270.
7. S.I.I. Vol. III, No.15
8. Ibid. Nos.15,16
9. Ibid. Nos.15,16,17
10. என். சேதுராமன், ஆய்வுக் கட்டுரைகள், தொகுதி 1, ப. 162
11. இரா. நாகசாமி, தகடூர். ப. இ.
12. புறநானூறு, (உ.வே.சா.பதிப்பு)பாடப்பட்டோர் வரலாறு
13. இரா. நாகசாமி, மற்றும் மூவர், கல்வெட்டியல் ப. 51, 53
14. க. கைலாசபதி, பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும், ப. 42
15. K. A. Nilakantasastri, OP.Cit, P. 453.
    S. R. Balasubrhamaniyam, Early Cola Art, P. 20.
    K. M. Durai Rangasamy, Religion and Philosophy of Tevaram, P. 347
16. Herman Kulke, Kings and Cults, P. 321-87
17. Venkata Ragotham, Kinship Politics and memorial of the Cholas Paper Printed in the Seminar on Tamil Studies-viii World Tamil Conferenced held at Thanjavoor, 1995.

18. ஆவணம் இதழ் 11, ப. 55

19. Venkata Ragotham, Op.Cit.

20. Ibid.

21. Ibid.

22. Ibid.

23. Ibid.

24. Ibid.

25. Ibid.

26. Ibid.

27. S.I.I. Vol. III, No. 420

28. Ibid.

29. Venkata Ragotham, OP.Cit.

30. S.I.I. Vol. III, No. 529

31. Ibid. P. 15

32. Ibid. P. 18

33. Venkata Ragotham, OP.Cit.

34. Ibid.

35. S.I.I. Vol. III, No.15

விழாக்களும் வழிபாடுகளும்

பண்டை நாளில் விழாகள் மக்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துநின்றன. முழுமதி நிலவில் தான் விழாக்கள் நடந்தன. இரவு நேரங்களில் விழித்திருந்து பார்த்ததால் தான் விழா விழவு என்று பெயர் பெற்றது.[1] அந்நாளில் பங்குனி முயக்கம், ஒணத்திருநாள், ஆதிரை திருநாள், பாவை விழா, இந்திரவிழா போன்ற விழாக்கள் நடைபெற்றன.[2] இவற்றில் சில கால அடைவில் சமயஞ்சார்ந்த விழாக்களாக மாறிவிட்டன. சில விழாக்கள் மறைந்து விட்டன. பங்குனி முயக்கம் உத்திரம் என்று மாறியது. பாவை விழா சைவ, வைணவ சமயங்களுடன் இணைந்துவிட்டது. சமணத்திலும் திருப்பாவை பாடும் வழக்கம் இருந்தது. திருஞானசம்பந்தரின் மைலாப்பூர் திருப்பதிகத்தில் பத்து திருவிழாக்கள் கூறப்பெறு கின்றன.[3] பக்தி இயக்கம் பெருமை பெற்ற பின் திருவிழாகள் சமய வழிபாட்டில் கலந்து விட்டன. மேல்பாடிக் கல்வெட்டுகளில் திருவிழாகள் பற்றிய குறிப்புகள் குறைவே. முதலாம் இராசேந்திரனின் பிறந்தநாள் விழா பற்றியும், அந்த விழாவில் நடைபெற்ற சடங்குகள் பற்றியும் விரிவாகக் கூறப்பெற்றுள்ளது.[4] பள்ளிப்படைக் கோயில்களில் இந்திரவிழா கொண்டாடப்பட்டுள்ளது.[5] மேல்பாடி அரிஞ்சிகை ஈஸ்வரத்திலும் இந்த விழா கொண்டாடப்பட்டிருக்க வேண்டும்.

திருவாதிரைத் திருவிழா

திருவாதிரைத் திருவிழா மார்கழித் திங்கள் நீராடலுடன் தொடங்கும். இந்த விழா தைந்நீராடல் என்றும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்பெறுகின்றது. திருவாதிரைத் திருவிழாவை பற்றி ஞானசம்பந்தர் பதிகத்திலும் குறிக்கப்பெறுகின்றது. அதனால் இவ்விழா தொடர்ந்து நடைபெற்றது எனலாம். இந்தத் திருவிழா அரசு தோன்றிய போது அரசன் பிறந்தநாள் தொடர்புடையதாக ஆகிவிட்டது.

முதலாம் இராசேந்திரன் பிறந்த நட்சத்திரம் ஆதிரை அதனால் ஆதிரை நக்ஷத்திரத்தன்று திருவிழா கொண்டாடப்பட்டது. ஆதிரை நட்சத்திரத்தைக் கொண்டாடும் வகையில் முதலாம் இராசேந்திரன் நிறைய கொடைகள் அளித்துள்ளான். கல்வெட்டு ''உடையார் ஸ்ரீ ராஜேந்திரச்சோழ தேவர் ஆட்டைத் திருவாதிரை திருநஷ்த்திரியை 7+3(10) கலசத்துக்கு அடிக்கீழ் அட்ட நெல்லு''[6] என்று கூறுவது முதலாம் இராசேந்திரன் பிறந்த நட்சத்திரம் திருவாதிரை என்பது புலப்படுகின்றது.

திருவாதிரை திருநாள் மார்கழித்திங்கள் கொண்டாடப்படுவது பெருமைக்குரியது ஆனால் முதலாம் ராசேந்திரன் பிறந்த நட்சத்திரம் ஆடி மாதத்தில் வருகின்றது. அதனால் கல்வெட்டில் ''ஆடித்திருவாதிரை'' என்று குறிக்கப்பெறுகின்றது.

திருவாதிரைத் திருவிழா முதலாம் இராசேந்திரனின் பிறந்த திருவிழாவாகக் கொண்டாடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. பிறந்தநாள் விழா கோயில் வழிபாட்டுடன் இணைந்துவிட்டது. இவ்விழாவில் தொடக்கம் முதல் இறுதிவரை நடைபெற்ற சடங்குகள் வரிசையாகக் குறிக்கப்பெறுகின்றன. கல்வெட்டு அமைப்பும் சொல்லும் முறையும் தெளிவாக இருப்பினும் சிலவிடங்களில் புரிந்து கொள்ள முடியாதவையாக உள்ளன. பிறந்தநாள் விழவில் செய்யப்பட்ட சடங்குகள் பயன்படுத்திய பொருள்கள் ஆகியவை பற்றி கல்வெட்டு கூறுகின்றது.

பத்து கலசங்கள் விழாத் தொடக்கதில் வைத்து சடங்கு செய்யப்பெற்றது. திரவியத்தினைப் பற்றிக் குறிக்கப்பெறுகின்றது. ஓம கும்பத்தில், பருப்பு ஆகியவை பயன்படுத்தப் பெற்றுள்ளன. ஓம கும்பம் செய்யும் போது புண்யாகம் வாசிக்கும் பழக்கம் இருந்தது. அந்தப் பணியை செய்ய ஐந்து பிராமணர்களை நியமித்துப்போற்றினான். முளைகட்டுவது குறிக்கப்பெறுகின்றது. பேரிதாடனம் ஒரு சடங்காகக் கூறப்பெறுகின்றது. இங்கு பேரி வாசிப்பான் இருக்கிறான். பெலி குறிக்கப்பெறுகின்றது. பெலி என்பது பலி என்பதன் திரிபாகலாம். இரவு திருவிழா குறிக்கப்பெறுகின்றது. சடங்கு நடத்து வதற்கு திருகாப்பு நான் கட்டப்பெறும். அப்போது ஐந்து பிராமணர்கள் புண்யாகம் வாசிப்பார்கள்.

இவ்விழாவில் நடைபெறும் யாகத்தில் யாகதேவர், யாகேஸ்வரி நீராட்டு செய்வதற்கு எட்டு கலசம் வைக்கப்பெறும். நீராட்டு செய்யும் போது செய்யும் ஓமத்திற்கு பயன்படுத்தப் பெறுகின்றது. நீராட்டின் போது புண்யாகம் வாசிக்கப்பெறும். இதிலும் ஐந்து பிராமணர்கள் கலந்து கொள்வர். இவ்விழாவில் ஹஸுதேவர்க்கு பரிசட்டம் சார்த்தப் பெறும். ஹஸுதேவரை எழுந்தருளச் செய்ய மாணி ஒருவன் நிற்பான். அவன் பலி இட்டுபலி வாசகம் செய்வான் ஹஸுதேவர்க்கும், யாகதேவர்க்கும், யாகேஸ்வரிக்கும் அமுதுபடி செய்யப்பெறும்.

இந்த விழாவில் ராசேந்திரசோழன் (?)திருச்சுண்ணம் பூசி தலைக்கு எண்ணெய் தேய்த்து நீராட்டு செய்வர். அப்போதும் புண்யாகம் வாசிக்க ஐந்து பிராமணர் நிற்பர்.

பிறகு தீர்த்தவாரி நடைபெறும். இதற்கு ஒன்பது கலசம் வைக்கப்பெறும், தீர்த்தவாரி கலசத்திற்கு புடவை போர்த்தப்பெற்றது.

தீர்த்தவாரியிலும் புண்யாகம் வாசிக்கப் பெறும் ஆசாரியனுக்குத் தட்சணை மோதிரம் அளிக்கப்பெற்றது. கூறை (புதுத்துணி) ஒன்றும் தரப்பெற்றது.

இராசேந்திரன் நீராட்டு செய்ய 108 கலசம் நீர் பயன்படுத்தப்பட்டது. இந்தத் திருவிழாவில் நெல். அரிசி, பொன், நீர் ஆகியவை பயன்படுத்தப்பெற்றது. இந்தத் திருவிழா முதலாம் இராசேந்திரனின் பிறந்தநாள் விழாவாகவே அமைந்துள்ளது.

இந்திரவிழா

மேல்பாடிக் கல்வெட்டுகளில் இந்திரவிழா பற்றிய குறிப்பு ஏதும் இல்லை. ஆனால் தொண்டை மண்டலத்தில் அமைந்துள்ள பள்ளிப்படைக் கோயில்களில் ஒன்றான தொண்டைமானாற்றூர் கோதண்டராமேஸ்வரர் கோயில் கல்வெட்டு ஒன்று அங்கு நடத்தப்பெற்ற இந்திர விழா பற்றி விவரித்துள்ளது. அதனால் பள்ளிப்படைக் கோயில்களில் இந்திரவிழா நடத்தும் மரபு இருந்ததோ என்று கருத வேண்டியுள்ளது. முதலாம் இராசேந்திரசோழனின் கல்வெட்டில் குறிக்கப்பெறும் திருவாதிரை நட்சத்திரம் விழா (அவனுடைய பிறந்தநாள் விழா) நடைபெற்றது பற்றி விரிவான செய்திகள் தரப்பட்டுள்ளன. இந்தக் கல்வெட்டில் பயின்று வரும் செய்திகள் தொண்டைமானாற்றூர் இந்திரவிழாவினை நினைவுப்படுத்துகின்றது.

தொண்டைமானாற்றூரில் கிடைக்கும் கல்வெட்டு முதலாம் பராந்தகன் காலத்தைச் சேர்ந்தது. இந்திரவிழா புரட்டாசி மாதம் கேட்டை நட்சத்திரம் கலந்த நாளில் தொடங்கி ஏழு நாட்கள் நடத்தப்பட வேண்டும்.[7] இந்திரவிழாவின் கடைசி நாளில் சதய நட்சத்திரம் வருகின்றது. இந்திரவிழாவில் தீர்த்தமாடுகின்ற இறுதி நாள் அன்று மன்னனின் சதைய திருவிழாவும் இணைந்து நடத்தப்பெறுகின்றன. இந்திரவிழா நடைபெறும் ஏழு நாட்களும் ஆறு சமய முனிவர்கள், பிராமணர்கள், அடியார்கள் உள்ளிட்ட ஆயிரம்பேர் தினமும் கோயிலில் உணவு உண்டனர். இந்த ஏழு நாட்களும் இறைவனுக்கு நீராடல் பூச்சூடல் உணவு படைத்தல், பின்னர் ஆயிரம் பேருக்கு உணவளித்தல் போன்றவற்றுடன் இந்திர விழாவிற்குரித்தான கூத்து, பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றிருந்தன.

இந்திரவிழா சங்க காலம் தொட்டு வழக்கத்திலிருந்த விழாவாகும். ஐங்குறுநூறு மருதத்திணையில் 62-ஆம் பாட்டில் இந்திரவிழா பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன. வடநாட்டில் காளிதாசன் தான் எழுதிய இரகுவம்சத்தில் இந்திரவிழா பற்றிக் குறிப்பிடுகின்றார்.[8]அதனால் இவ்விழா தமிழ்நாட்டிலிருந்து வடநாட்டிற்குச் சென்றதோ என்று கருத வேண்டியுள்ளது.

இந்திரவிழா மான்சேர் கல்வெட்டில் (கி.பி.404) கூறப்பெறுகின்றது.[9] இது கொண்டு இந்திரவிழா கி.பி.5-ஆம் நூற்றாண்டிற்கு முன்பிருந்தே வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது எனலாம். இந்திரவிழா பற்றி மகாபாரதம், இரகுவம்சம், மான்சேர் கல்வெட்டு ஆகியவை குறிப்பிடுகின்றன. பாடலிபுத்திரத்தில் கி.மு. 4-ஆம் நூற்றாண்டில் மெகஸ்தனீஸ் பார்த்த விழாவும், கி.பி.5-ஆம் நூற்றாண்டில் சீனயாத்திரிகன் பாஹியான் பார்த்த விழாவும்

இந்திரவிழா என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.[10] தெளிவான கல்வெட்டு சான்றுகள் கி.பி. 5-ஆம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கின்றன.

தொடக்கத்தில் வேதகாலத்தில் இந்திரனுக்கும் கிருஷ்ணனுக்கும் இடையில் ஏற்பட்ட போரில் இந்திரன் கிருஷ்ணனை வென்றான் என்று கூறப்பெறுகின்றது. இந்தப்போரை ஆரியர், ஆரியரல்லாதார் போராக இன்றைய வரலாற்றறிஞர்கள் சித்தரிக்கின்றனர். சாயனர் கிருஷ்ணனை அசுரன் என்று கூறுகின்றார். புராணங்கள் இந்திரவிழா பற்றிக் கூறுவது நேர் எதிராக உள்ளது. இதுபற்றி முனைவர் ஆ. பத்மாவதி கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது.

''ஆனால் விஷ்ணுதர்மோத்திர புராணமும் பிருகத்சம்ஹிதையும் தான் இந்திரவிழா பற்றிக் கூறும் போது முதன் முதலாக கிருஷ்ணனைக் கடவுளாக உயர்த்திக் கூறியிருக் கின்றன. அசுரர்களின் தொல்லைக்குட்பட்ட தேவர்கள் இந்திரனின் தலைமையில் விஷ்ணுவை அணுக, விஷ்ணு தனது கொடியை இந்திரனிடம் கொடுத்தான். அசுரர்களைத் தோற்கடித்து வெற்றிபெறும் மன்னர்கள் இந்திரவிழாவைக் கொண்டாடும்படி அக்கொடியை மன்னர்களுக்குக் கொடுத்தான் என்றும் மேற்கூறிய நூல்கள் கூறுகின்றன. மேலும் இந்திரவிழா கொண்டாடும் அரசர்கள் தங்கள் எதிரிகளை வென்று பேரரசர்களாக விளங்குபவர்கள் என்றும் கூறியிருக்கின்றன.

இந்திரனின் மூங்கிற்கொடி இந்நூல்களில் விஷ்ணுவின் கொடியாகவும் விஷ்ணுவிடமிருந்து அக்கொடியைப் பெற்று இந்திரன் வெற்றியடை தான் என்றும் வெற்றி பெறும் மன்னர்களுக்குக் கொடுத்து இந்திரவிழா கொண்டாடச் செய்தான் என்றும் முற்றிலும் எதிர்மாறாக மாற்றப்பட்ட கதையாகச் சித்தரித்திருக்கின்றன அந்நூல்கள்.''[11]

மேலும் முனைவர் ஆ. பத்மாவதி அவர்கள் பௌத்தத்தை எதிர்த்து வீழ்த்திய வைணவம் பௌத்தத்தில் சிறப்புக் கடவுளாகப் போற்றப்பெற்ற இந்திரன் வைணவக் கடவுளிடம் தோற்றதாகக் காட்டப்பெறுவது இயல்பே என்றும் கூறியுள்ளார்.[12]

மருதநிலக்கடவுளான இந்திரனுக்கான விழா சங்க காலம் முதல் மருதம் சூழ்ந்த சோழ நாட்டுத் தலைநகரில் (புகாரில்) கொண்டாடப்பெற்றது. சங்க இலக்கியத்தில் இந்திரவிழா மருத நிலத்தில் கொண்டாடப்பெற்றது என்று கூறப்பெறுகின்றது. இந்திரவிழா சோழநாட்டில் சோழர்களால் கொண்டாடப்பெற்றது. அதனால் பிற்கால சோழர்கள் இந்திர விழாவைப் போற்றினர் என்று கருதமுடியும். காவிய காலத்தில் நகரவாழ்க்கையுடன் தொடர்புடையதாக இந்திரவிழா நடைபெற்றது. ஆனால் கி.பி. 10-ஆம் நூற்றாண்டில் கோயில் வழிபாட்டுடன் இணைக்கப்பெற்றது. மேலும் அரசர்களின் பிறந்த நாள் நட்சத்திரத்துடன் கலந்து விட்டது.

தொண்டைமானாற்றூர் பள்ளிப்படைக் கோயிலில் நடைபெற்ற இந்திரவிழா புரட்டாசி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்று தொடங்கி சதயத்தன்று முடிகின்றது. இதுபற்றி முனைவர் ஆ. பத்மாவதி கூறுவது எடுத்துக்காட்டத்தக்கது.

''இந்திரவிழா புரட்டாசி மாதம் கேட்டை நட்சத்திரத்தன்று தொடங்கி ஏழு நாட்கள் நடத்தப்பட வேண்டும் என்று கல்வெட்டு கூறுகிறது. இந்திரவிழாவின் கடைசி நாளன்று சதய நட்சத்திரமாகும். எனவே இந்திரவிழாவும் அதன் கடைசி நாளான தீர்த்தமாடுகின்ற விழாவன்று மன்னனின் பிறந்த நாளான சதயத் திருவிழாவும் இணைந்து நடைபெற்றிருக்கின்றன. இந்த ஏழுநாட்களும் அறு சமயத்தபசியர்கள், பிராமணர்கள், பக்தர்கள் உள்ளிட்ட ஆயிரம் பேர் தினமும் கோயிலில் உணவு உண்டனர். இந்த ஏழு நாட்களும் இறைவனுக்கு நீராடல், உணவு படைத்தல் பின்னர் ஆயிரம் பேருக்கு உணவளித்தல் போன்ற பணிகளும், இந்திரவிழாவிற்கு உரித்தான கூத்து பாட்டு போன்ற கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றிருந்தன. இந்நாட்களில் சிறப்பாக இரவில் விளக்குகள் எரிக்கப்பட்டன.''[13]

இந்திரவிழா கி.பி. 10–11-ஆம் நூற்றாண்டில் கொண்டாடப்பட்ட தன்மை பற்றி தொண்டைமானாற்றூர் கல்வெட்டு சுட்டுகின்றது.

இந்திரவிழாவின் இறுதி நாளான ஏழாம் நாளில் தீர்த்தத் திருவிழா நடைபெற்றது பற்றி அக்கல்வெட்டில் குறிக்கப்பெறுகின்றது. இந்திரவிழாவிற்கும் இராஜசூயயாகத்திற்கும் தொடர்பு ஏதேனும் உண்டா என்பது புலப்படவில்லை. மேலும் பிறந்தநாள் விழாவிற்கும் இராஜசூய யாகத்திற்கும் தொடர்பு ஏதேனும் உண்டா என்பதும் புலப்படவில்லை. பள்ளிப்படைக் கோயில் இந்திரவிழாவில் தீர்த்தத் திருவிழா செய்வது குறிப்பிடத்தக்கது. தீர்த்தத்திருவிழா பற்றி முனைவர் ஆ. பத்மாவதி அவர்கள் கூறுவது எடுத்துக்காட்டத்தக்கது.

''ஆதித்தனின் பள்ளிப்படைக்கு கோயிலின் கடைசி நாளாகிய தீர்த்த நாளன்று மன்னனின் பிறந்த நட்சத்திரமாகிய சதயத்தில் தீர்த்தவிழாவும் பிறந்த நாள் விழாவும் இணைந்து நடத்துப்பெற்றன.''

இக்கோயிலுக்கு அருகில் உள்ள தீர்த்தம் திருக்காளத்தியாகும். இவ்வூர்க் கோயில் (சுவர்ணமுகி) ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. எனவே, தீர்த்த தினத்தன்று இறைவனைத் தீர்த்தமாட்டுவதற்கு தொண்டைமா நாட்டிலிருந்து(?) காளஹத்திக்குக் கொண்டு வந்து தீர்த்த திருவிழா நடந்தது. அந்நாளன்று தீர்த்த கரையிலுள்ள திருக்காளத்தி இறைவனுக்குப் பெருத் திருவமுது படைக்கப்பட்டது. பெரிய அளவில் சோறு சமைத்து இறைவனுக்குப் படைக்கப்பட்டுச் சிறப்பாக வழிபாடு செய்யப்பெற்றது''[14]

இந்திரவிழா காவிய காலத்திற்குப்பின் கி.பி. 10-11-ஆம் நூற்றாண்டில் மறுபடியும் புத்துயிர் பெறுகின்றது. மேலும் இந்திரவிழா மன்னனுடைய முடிசூட்டு விழாவுடன் நடைபெறும் என்றும் கருதப்பெறுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. Tamil Lexicon, vol. VI P. 3720

2. அகநானூறு. 139, மதுரைக் காஞ்சி வரி 591, பரிபாடல் 11, வரிகள் 73–86, ஐங்குறுநூறு (மருதத்திணை) 62.

3. திருஞானசம்பந்தர் தேவாரம் மைலாப்பூர் பதிகம்

4. பின்னிணைப்பு

5. பரிபாடல் வரிகள் 73- 86 வரை

6. பின்னிணைப்பு

7. முனைவர். ஆ. பத்மாவதி, இந்திர விழா, தொல்லியல் நோக்கில் தமிழகம், ப. 285.

8. மேலது. ப. 280

9. மேலது. ப. 285

10. மேலது. ப. 282

11. மேலது. ப. 284

12. மேலது. ப. 285

13. மேலது.

14. ஆர். பூங்குன்றன், பண்டைத் தமிழகத்தில் அரசு உருவாக்கம், (பி.எச். டி. ஆய்வேடு, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர். 1999) ப.212-213

முடிவுரை

மேல்பாடி ஆயிரமாண்டு பழமையுடைய கோயில்களை தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற ஊர். இவ்வூர் அரசியல் சிறப்பு வாய்ந்த ஊராகத் திகழ்ந்த நிலை சோழர் காலத்திலிருந்து உருவாயிற்று. ஆதித்தன் காலம் முதலே இவ்வூர் அரசியல் சிறப்புடைய ஊராகத் திகழ்ந்தது. மூன்றாம் கிருஷ்ணன் இவ்வூரில் பாடிவீடு அமைத்திருந்தான். அதனால் இவ்வூர் அந்நாளில் பல்வேறு அரச மரபினர் பாடிவீடு அமைத்துப் போரில் ஈடுபடும் வீரர்கள் தங்கியிருக்கும் இருப்பிடமாக முதலில் உருவாக்கப்பட்ட வாழ்விடம் என்றும் பொருள்படும்.

தொண்டை மண்டலத்தில் ஆதித்தன் காலம் முதல் சோழர் கல்வெட்டுகள் கிடைத்த போதிலும் மேல்பாடியில் முதலாம் இராசராசன் காலம் முதலே கல்வெட்டுகள் கிடைக்கின்றன. ஒருகால் முதலாம் இராசராசனுக்கு முற்பட்ட காலங்களில் பாடிவீடு அமைக்கும் தற்காலிக வாழ்விடமாக இருந்திருக்க வாய்ப்பு உண்டு. பெரும்பாணப்பாடி எல்லைப்புறத்தில் இருந்தமையால் அரசியல் சிறப்பு பெறவில்லை என்று கருதவேண்டியுள்ளது. கி.பி. 985 முதல் 1100 வரை ஆண்ட சோழ அரசர்களில் மூவர் கல்வெட்டுகள் கிடைக்கின்றன. அவர்களிலும் முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோரின் நேரடிப்பார்வையில் இவ்வூர் நிலைபெற்றிருந்தது. முதல் குலோந்துங்கனின் ஒரே கல்வெட்டு கிடைத்துள்ளது. அதற்குப்பின் 150 ஆண்டுகள் சோழர் கல்வெட்டுகளும் கிடைக்கவில்லை.

கி.பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்து 16-ஆம் நூற்றாண்டு வரை அரசியல் சிறப்பு வாய்ந்த ஊராக மறுமலர்ச்சி பெற்றது. இடையில் அரசியல் செல்வாக்கு இழந்ததற்கும் மறுபடியும் செல்வாக்கு பெற்றதற்கும் காரணம் விளங்கவில்லை.

சோழர்களில் முதலாம் இராசராசன் காலம் முதல் அரசியல் புவியியல் முழுமை பெற்றது. அவனுக்கு முன்பே கோட்டம், நாடு ஆகிய பிரிவுகள் உருவான போதிலும் முதலாம் இராசராசன் தான் அதற்கு முன்னுரிமை அளித்துப் பிரிவுகளை உருவாக்கினான். பெரும்பாணப்பாடி படுவூர்க் கோட்டத்தின் உட்பிரிவாக ஒரேயொரு கல்வெட்டில் (பாலேகுப்பம்) குறிக்கப் பெறுகின்றது. ஆனால் மேல்பாடிக் கல்வெட்டுகளில் பெரும்பாணப்பாடி தனிப்பிரிவாகக் கூறப்பெறுகின்றதேயொழிய தொண்டை மண்டலத்தின் ஒரு பிரிவாகக் குறிக்கப்பெறவில்லை.

சோழர்கள் உருவாக்கிய நிருவாக அமைப்பு மேல்பாடி கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றாலும் உள்ளூர் நிருவாகம் பெரும்பாணப்பாடிக்குரியதாக தனித் தன்மையுடையதாக விளங்கியுள்ளது. கோட்டமன்றாட்டு என்றொரு நிருவாக அமைப்பும், கோட்டமன்றாட்டு செய்வார் என்ற நிருவாகியும் இவ்வூர் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுவதைக் காணமுடியும். கோட்டமன்றாடிசள் சபையும் இங்கு குறிக்கப்பெறுகின்றது. கோட்டம் என்ற அரசியல் புவியியல் தோன்றியபோதே கோட்டமன்றாடிகள் சபையும் தோன்றியிருக்க வேண்டும். இருப்பினும் சோழர்கள் காலத்தில் தான் இவ்வமைப்பு அரசியல் நிருவாகத்தில் சிறப்பிடம் பெற்றது. பிரம்மதேய சபை, நாட்டுச்சபை, ஊர்ச்சபை ஆகிய குழுக்கள் சுயாட்சி பெற்ற அமைப்புகளாக நிலைபெற்றிருந்தன. அரசு நிருவாகத்தைப் பொறுத்தவரை சோழர்கள் உருவாக்கிய நிருவாக அமைப்பே கல்வெட்டுகளில் குறிக்கப்பெறுகின்றது.

சோழர் காலத்தில் சிறப்புற்றிருந்த வேளாண்மைப் பொருளியியல் மேல்பாடியில் மேலோங்கி நின்றது. மேல்பாடி நகரமாக விளங்கியதால் அங்கு நிலை பெற்றிருந்த வேளாண்மைப் பொருளியியலும் வணிகர் கட்டுப்பாட்டிலிருந்தது. மேல்பாடியைச் சுற்றியிருந்த வெள்ளாண் வகை ஊர்களின் வேளாண்மை நாட்டார் கட்டுப்பாட்டிலிருந்தது. பெரும்பாணப்பாடி கால்நடை வளர்ப்பு சிறப்புற்றிருந்த பகுதியாகையால் கால்நடை பொருளியியலும் வேளண்மைப் பொருளியியலும் சமமாக விளங்கியது. நிலம் பொருளியியலில் பெரும் பங்கு வகித்தது. அதனால் நிலவருவாயே முதன்மை வருவாயாகக் கருதப்பெற்றது.

சோழர் காலப் பொருளியலில் வரிகள் பெரும்பங்கு வகித்தன. இராசேந்திரன் கல்வெட்டுகளில் இறைகட்டின காணிக்கடன் என்று கூறுவது நிலவரியையே ஆகும். மீன்பாட்டம், பாசிப்பாட்டம் ஆகியவை காசாகவே வாங்கப் பெற்றன. நிலவரி நெல்லாக வாங்கப்பெற்றது. சம்புவராயர் விஜயநகரர் காலங்களில் பல்வேறு வரிகள் வாங்கப் பெற்றன. சம்புவராயர் காலம் வரை வாங்கப் பெற்ற ஆசுவக்கடமை பற்றி பல்வேறு கருத்துகள் நிலவுகின்றன.

சோழர்களுக்கு முன் பின் காலங்களில் சமயம் சமூக அரசியலை ஆட்சி செய்யும் நிலையிலிருந்தது. சோழர்கள் அனைத்துச் சமயங்களை ஆதரித்தபோதிலும் சைவத்திற்குச் சிறப்பிடம் அளித்தனர். சோழப் பேரரசு சமயத்தின் மூலமாக, கோயில்களின் மூலமாக தன்னுடைய அதிகாரத்தைக் கொண்டு செலுத்தியது, அதனால் சோழப்பேரரசர்கள் கோயில் களுக்கு மிகுதியான கொடையை அளித்தனர். கோயில் இறைவனோடு தங்களை இணைத்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் தங்கள் பெயராலேயே கோயில்களைக் கட்டினர்.

தேவராஜ வழிபாட்டு முறை கம்போடியாவில் தோன்றிச் சிறப்புற்றது என்று கருதப் பெறுகின்றது. பிலியோசா போன்ற அறிஞர்கள் அத்தகைய வழிபாட்டு முறை அங்கில்லை என்று கூறுகின்றனர். தமிழ் நாட்டில் பள்ளிப்படைக் கோயில்கள் சோழர் காலத்தில் கட்டப் பெற்றது. இக்கோயில்கள் சோழர் காலத்தில் மட்டும் கட்டப் பெற்றுள்ளன. அதற்கு முன்பும் இல்லை பின்பும் இல்லை (பாண்டியர் மரபில் ஒரு கோயில் உள்ளது).

அதனால் பள்ளிப்படைக் கோயில் ஏதோ சிறப்பு கருதியே கட்டப்பெற்றது எனலாம். சோழர் காலத்திலும் இக்கோயில்களுக்கு பேராதரவு இருந்ததற்கான சான்று இல்லை. மேல்பாடிப் பள்ளிப்படைக் கோயில் தான் நான்கு கல்வெட்டுகளைப் பெற்றுள்ளது. பிற பள்ளிப்படைக் கோயில்கள் ஒரே கல்வெட்டினைப் பெற்றுள்ளது. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் இவ்வூரில் உள்ள சோளேந்திர சிம்மேஸ்வரத்திற்குக் கொடையளித்த அளவுக்கு பள்ளிப்படைக் கோயிலுக்கு அளிக்கவில்லை. இவ்விரு மன்னர்களுக்குப் பின் வந்த சோழ அரசர்களும், பிற அரசர்களும் கொடையளிக்கவில்லை என்பது வியப்பாகவுள்ளது. கோயில் சிற்பங்கள் சோழர் காலம் தொடங்கி விஜயநகரர் காலம் வரை கிடைக்கின்றன. செப்புத் திருமேனிகள் இரண்டு (கி.பி. 12-13-ஆம் நூற்றாண்டு) உள்ளன.

மேல்பாடியில் தழைத்த சமயங்களில் சமணம், சைவம், இலகுளீச பாசுபதம் ஆகியவை சிறப்பிடத்தைப் பெற்றிருந்தன. இப்பகுதியில் சமணம் தழைத்தமையால் அதனை எதிர்க்கும் தீவிரவாத சைவம் (இலகுளீசபாசுபதம்) சிறப்புற்றிருந்தது. சோழர் காலம் முதல் அவ்வூரில் தழைத்த சமுதாயம் பற்றிச் சில குறிப்புகள் கிடைக்கின்றன. வெள்ளாளர், வாணியர் (சங்கரப்பாடியார்) ஆகிய பிரிவினர் செல்வாக்கு பெற்று விளங்கினர். பிற சாதியர்களில் பிராமணர்கள் பற்றிய குறிப்புகள் கிடைக்கின்றன.

பிரமதேயங்கள் கோயில் நிருவாகத்தில் பங்குபெற்றன. இடையர் மரபினைச் சேர்ந்த மன்றாடிகள் கோயில் நிருவாகத்தில் பங்கு பெற்றனர். இன்றைய சமூகம் மேல்பாடிக் கோயில்களுடன் தொடர்பு ஏதுமின்றி வாழ்கின்றனர். அதனால் இக்கால சமூகம் பற்றி ஆய்வு செய்யவில்லை.

மேல்பாடிக் கோயில் கல்வெட்டுகளில் குறிக்கப்பெறும் விழாக்கள் பற்றி ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இங்கு முதலாம் இராசேந்திரனின் பிறந்த நாள் விழா கொண்டாடப் பட்டுள்ளது. இவ்விழாவில் நடைபெறும் சடங்குகள் முழுமையும் புரிந்து கொள்ள முடியவில்லை. பல்வேறுபட்ட கூறுகள் இவ்விழாவில் கலந்துள்ளன. இந்திரவிழா இவ்வூர் பள்ளிப்படைக் கோயிலில் குறிக்கப் பெறவில்லை. ஆனாலும் அத்தகைய விழா நடந்திருக்க வாய்ப்பு உண்டு. பள்ளிப்படைக் கோயில்களில் இந்திரவிழா நடத்தப் பெற்றதன் சிறப்பு விளங்கவில்லை.

மேல்பாடிக் கோயில்களுக்குக் கொடை அளித்தவர்கள் அரசர்களும், அவர் களுடைய அலுவலர்களும் மட்டுமே. சோழர் முதல் விஜயநகரர் காலம் வரை கொடை யளிப்பதில் மக்கள் பங்கு இல்லை என்றே கூறலாம். இன்றைய மேல்பாடி மக்களும் அவ்வாறே கோயில் வளர்ச்சியில் ஆர்வம் காட்டவில்லை. இங்குக் கட்டப்பெற்ற கோயில்கள் அரசர்களுடன் தொடர்புடையவை என்பது இதற்குக் காரணமாகலாம்.

நிழற்படங்கள்



சூரியன் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு



வராகி கி.பி. 10-ஆம் நூற்றாண்டு



வாலி -- சுக்ரீவன் சண்டை – கி.பி. 10ஆம் நூற்றாண்டு



பள்ளிப்படை துவாரபாலர்கள் கி.பி. 11-ஆம் நூற்றாண்டு



பள்ளிப்படைக் கோயில் (சோழீஸ்வரம்) சி.பி. 11-ஆம் நூற்றாண்டு



அரசர் (அ) அந்தணர்
கி.பி. 10-ஆம் நூற்றாண்டு



வினாயகர் - கி.பி. 10-ஆம் நூற்றாண்டு



கண்ணப்பர் (கி.பி. 11-ஆம் நூற்றாண்டு)



சோமநாதீஸ்வரர் கோயில் (இரண்டாம் கோபுரம்)



கங்காளர் கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

அட்டைப்பட விளக்கம்

முன்அட்டை – தக்ஷ்ணாமூர்த்தி
கி.பி. 10-ஆம் நூற்றாண்டு

பின்அட்டை – சோமநாதீஸ்வரர்
கோயில் - விமானம்